
வானதி பதிப்பகம்



உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : மே, 1989
இரண்டாம் பதிப்பு : அக்டோபர், 1989
மூன்றாம் பதிப்பு : மே, 1990
நான்காம் பதிப்பு : பிப்ரவரி, 1991
ஐந்தாம் பதிப்பு டிசம்பர் 1991
திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ.12.00

Dr. M. S Udayamurthy
Vilanagar
Arupathy P. O.
Mayiladuthurai T. K.
Tamil nadu
Pin: 609 305

அச்சிட்டோர் :

ஸ்ரீ முருகன் ஆப்செட் பிரிண்டர்ஸ்
117, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

முன்னுரை

"உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள் யாவை?" என்று பலகாலம் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வோர் சமயத்தில்—நமது தேவைக்கேற்ப—ஒவ்வோர் குணங்கள் மிக முக்கியமானதாகப் படும். சிலர் என்னை ஏமாற்றியபோது மனிதர்களை சரியாக எடைபோடும் குணம் தான் மிக முக்கியம் என்று நான் கருதினேன். பிரச்சினைகளில் எந்த முடிவு சரியானதாக இருக்கும் என்று தவிக்கும்போது பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதுதான் மிக முக்கிய மானதாகத் தோன்றும். சிலர் வந்தவுடன் அந்த இடமே கலகலப்பு பெறுவதைப் பார்க்கும்போது பழகுந்தன்மைதான் மிக முக்கியம் என்று எண்ணுவதுண்டு. கம்பீரம், ஒரு தலைவனுக்கான கவர்ச்சி, எதையும் நுணுகி ஆராயும் புத்திசாலித்தனம், ஆக்கசக்தி படைத்த மனம், திரிகால ஞானியாக இருக்கும் யோகியின் இயல்பு என்று இப்படிப் பலபல குணங்கள் மனித வாழ்க்கைக்கு, வெற்றிக்கு, மகிழ்வுக்கு, நிறைவுக்கு தேவைப்படுகின்றன.

பல புத்தகங்களும் பல்வேறு குணங்களுக்கு முக்கியத் துவம் கொடுத்து அவசியமான குணங்களைப் பட்டியல் போட்டிருந்தன. இந்தப் பட்டியல் நீளமாக இருந்தது. இந்த சமயத்தில் கல்கி ஆசிரியர் ராஜேந்திரன் அவர்கள் கல்கியில் எழுதுமாறு சொல்ல அதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு எழுதினேன். மற்றும் சில கட்டுரைகள் 'ஜாப் கைடுலைன்ஸ்' என்ற பத்திரிக்கைக்காக எழுதப் பட்டவை.

தனி மனிதர்களால் ஆனதுதான் சமுதாயம். ஆகவே சமுதாயம் சிறப்பானதாக அமையவேண்டுமானால் அங்கே உள்ள தனிமனிதர்களை உயர் குணங்களால், உயர்

சிந்தனைகளால், உயர் பண்புகளால் நாம் உருவாக்க வேண்டும்.

தனிமனிதனை மாற்ற முடியுமா? நிச்சயமாக முடியும். "குதிரைக்கு முன் காரட்டைக் காட்டினால் அதைப்பிடிக்க அது ஓடுவதுபோல" உயர் குணங்களால் எப்படி மனிதன் நிறைவையும், மகிழ்வையும் பெறமுடியும் என்று எடுத்துக் காட்டினோமானால் மனிதன் சுய மேம்பாட்டுக்காக தன்னை உருவாக்கிக்கொள்ள முயல்வான்.

"நான் என்னை மேம்படுத்திக் கொண்டால் போதாதா? எதற்கு இந்த சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?" என்று சிலர் கேட்கிறார்கள். இவர்கள் தான் 'என் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்வேன்' என்று கூறிவிட்டுக் குப்பையைப் பொறுப்பின்றி தெருவில் பறக்க விடுபவர்கள். நாட்டுப் பொதுவான விஷயங்களைப் பற்றி "எனக்கென்ன வந்தது?" என்று பட்டும் படாமல் செல்பவர்கள்; உண்மையிலேயே தமிழர்களுக்கு—இந்தியர்களுக்கு—இது என் சமுதாயம் என்ற கூட்டு மனப்பான்மை மிகக் குறைவு. இது தான் உண்மை.

தெருவில் போகும் ராமசாமியைப் பார்த்து "ஏ ராமசாமி நீ பெரிய முட்டாள்!" என்று கூறினேன் என்றால் ராமசாமிக்கு கெட்ட கோபம் வரும்; அடிக்கக்கூட வருவார்! ஆனால் அதே மூச்சிலே "இந்த தமிழர்களெல்லாம் சுத்த மடையர்கள்; முட்டாள்கள்; அறிவு கெட்டவர்கள்!" என்று திட்டினேனானால் "யாரையோ திட்டுகிறான்!" என்று ராமசாமி செல்வார்! நம்மிடம் தொகுதி மனப்பான்மை—கூட்டு மனப்பான்மை—கிடையாது என்று டாக்டர் மு வ. கூறுவார்.

இந்த தொகுதி மனப்பான்மை ஜப்பான் நாட்டில், ஒரு கூட்டாக, கட்டுப்பட்டு எதையும் செய்யும் ஒரு உயர் மனோபாவத்தை உருவாக்கி இருக்கிறது. இதை ஆங்கிலத்தில் (Community Feeling) "என் சமுதாயம் என்ற உணர்வு" என்றும் அதையே தொழில் ரீதியில் (Team Work)

கூட்டாக சேர்ந்து ஒரு பொது லட்சியத்திற்காக பாடுபடுதல்" என்றும் கூறுவார்கள்.

திரு.மீ.ப. சோமு ஒரு முறை ஜெர்மனிக்கு சென்றார். அங்கே மாடமாளிகை சூழ்ந்த பொது இடத்தைப் பார்த்து வியந்தவாறு ஒரு சாக்லேட்டைப் பிரித்து வாயில்போட்டு விட்டு, அதன் தாளை கசக்கிக் கீழே தூக்கி எறிந்தார். அந்தப் பக்கமாக வந்த ஒரு இளம் பள்ளி மாணவி அவரை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு அந்தக் குப்பையைப் பொறுக்கி எடுத்து ஒரு குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போனதாக எழுதி இருக்கிறார். அவருக்கு வெட்கமேற்பட்டது என எழுதுகிறார். நாமெல்லோரும் சேர்ந்ததுதான் இந்த சமுதாயம். இதில் எனக்கென்ன என்று எல்லோரும் அவரவர் கள் வீட்டு குப்பைகளை தெருவில் கொட்டி—சமுதாயத் திற்கு இடையூறு விளைவிக்கும் பழக்க வழக்கங்களை கையாள்வார்களானால்—இங்கே குப்பை மேடுதான் மிஞ்சும். காவிரி—கங்கை நாகரிகம் நிலவாது.

இப்படிப்பட்ட சிந்தனைக்கு முக்கிய காரணம், "இந்தியாவிலுள்ள மக்கள் தனது மோட்சத்தை—தனது ஆத்ம விடுதலையைப் பற்றி கவலைப்பட்டு அதற்கொரு வழி காண தனியே நடக்கிறார்கள். தன்னைப்பற்றி மட்டுமே எண்ணும் ஒரு பழக்கத்தை இது உருவாக்கிவிடுகிறது. இதன் விளைவாக சமுதாய உணர்வு மிகவும் குறைவு" என்று அறிஞர்கள் எழுதுகிறார்கள்.

இந்தியர்களாகிய நாம் இதுபற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். "தொழிலில் எனக்கு லாபம் வருகிறது. நான் செய்த தவற்றை யாரும் காணப்போவதில்லை. வாய்ப்பு இருக்கும்போது, அடிகொள்ளை!" என்ற ரீதியில் அதிகம் தொழிலதிபர்களும் (அம்பாணியிலிருந்து) அரசியல்வாதி களும் (நமது ஊர் அரசியல் கொள்ளைக்காரரர் பெயரை இங்கே நிரப்பிக் கொள்ளுங்கள்) இங்கே செயல்படுகின்றனர். இந்த எண்ணம் மேவிநிற்பதை இந்திய சமுதாயத்தில் அதிகம் காண முடிகிறது.

கண்டு பிடிக்கப்படும்போது இதற்காக அவமானப்பட்டு தற்கொலை செய்துகொள்ளும் ஜப்பானிய முறை இங்கே இல்லை. "கொள்ளையடித்தேன்! பார்த்தாயா என் சாமர்த்தியத்தை!" என்ற ரீதியில் நம் தலைவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

'எனது சமுதாயம்' என்ற எண்ணமும், உயர் மனிதனாக இந்த சமுதாயப் பாரம்பரியத்தை—எனது குடும்ப பாரம்பரியத்தை—நான் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணமும் இங்கு அதிகம் இருப்பதில்லை. இதுகவலைக்குரியவிஷயம்.

ஏனெனில்,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்று மானத்திற்காக உயிர் விடுபவர்களைப் பற்றி எழுதுகிறது திருக்குறள். நமது பழைய பாரம்பரியம் இப்படி உயர்ந்துதான் இருந்திருக்கிறது.

"நீ நன்றாக இருந்து இந்த சமுதாயம் குட்டிச்சுவராகப் போனால், நீ வாழமுடியாது" என்ற மக்கள் சக்தி இயக்க போஸ்டர்களை நீங்கள் கண்டிருக்கக்கூடும். ஒரு சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என இப்படி போஸ்டர்களை அடித்து ஒட்டினோம்.

நமது சமுதாயத்தில் சமுதாய உணர்வின்மை என்பது ஒரு விஷயம். இதைப்போல் இன்றைய தமிழினத்தை—தாழ்த்தி வைத்திருக்கும் குணங்கள் பல இருக்கின்றன. 'பொது சுகாதார உணர்வு' நம்மிடையே இல்லை தெருவிலும் பொது இடங்களிலும் மலஜலம் கழிக்கும் ஒரு பண்பை—தமிழ்ப் பண்பை—இந்தியப் பண்பை—முதல் முறையாகப் பார்க்கும் ஒரு வெளி நாட்டான் தமிழர்களைப்பற்றி நாகரிகம் படைத்தவர்கள் என்றா நினைப்பான்? எண்ணிப்பார்க்க வேண்டும். இலங்கையிலிருந்து இங்கு அகதிகளாக வந்த தமிழ் மக்கள்கூட தாய்நாட்டுத் தமிழ் மக்களைப் பார்த்து இது பற்றி கேவலமாகப் பேசுகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

சொந்தக் காலிலே நின்று சொந்தமாக தொழில் செய்யும் துணிவு தமிழனிடை குறைவு. இனாமாக யாராவது கொடுத்தால் இரு கை நீட்டி வாங்கிக்கொண்டு காலில் விழும் பண்பு அதிகம். இந்தப் பிச்சைக்காரப் புத்தியை அரசாங்கம் வேறு வளர்த்துவருகிறது.

"இனாமாக அரசாங்கம் எல்லாம் கொடுக்கும் என்று மக்களை நம்பவைத்து, உழைக்காத ஏழைகளை அரசாங்கம் உருவாக்கினால் தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்கள்தான் அதிகமாவார்கள்" என்று தேர்தல் காலத்தில் போட்ட மக்கள் சக்தி இயக்கப் போஸ்டர் ஒன்று கூறுகிறது.

இந்த இந்திய சமுதாயம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்று தொலைநோக்குடன் சிந்திக்கும் நாட்டுத் தலைவர்களைக் காணோம். எல்லோரும் நாளைய 'ஓட்டை' இந்த ஏழை மக்களிடமிருந்து—இந்த அறியாமை மிகுந்த ஜனங்களிடமிருந்து—எப்படி ஆசை வார்த்தை சொல்லி ஏமாற்றி வாங்கலாம் என்றுதான் எண்ணுகிறார்கள். "அவர்களை திருப்திப்படுத்து! ஓட்டு உன் பக்கம்!" என்று சொல்லாமல் சொல்லிவிட்டுப் போனார் எம்.ஜி.ஆர். இன்றைய தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் அவலங்கள், அக்கிரமங்கள், அநியாயங்கள்தான் அதிகமாகிக்கொண்டு வருகின்றன.

இது மாறவேண்டுமானால்,

தனிமனிதன் மாறவேண்டும்.

தனிமனிதன் ஒழுக்கத்தில், தூய்மையில், உண்மையில் நம்பிக்கை வைக்கவேண்டும். தனிமனிதனை நாம் மாற்ற வேண்டும்.

மனவியலிலும், சமுதாய இயலிலும், பழங்குடி மக்கள் வாழ்வியலிலும், பொருளாதார இயலிலும், பொது சுகாதாரத்திலும் எவ்வளவோ புதிய விஷயங்கள் இன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பல உயர் சமுதாயங்கள்

எந்தக் குணங்களால் உருவாகி சிறப்புற்று வாழ்கின்றன என்பதிலிருந்து ஒரு சமுதாயத்தை எப்படித் திட்டமிட்டு உயர் சமுதாயமாக ஆக்கலாம்—மாற்றலாம்—என்பது வரை இன்று பல புதிய உண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

நாம் சமுதாயத்தையும் தனி மனிதனையும் இணைத்துப் பார்க்கவேண்டும்.

ஒரு சமுதாயம் ஏன் உயர்ந்து நிற்கிறது? மற்றோர் சமுதாயம் ஏன் உறங்கிக் கிடக்கிறது? ஏன் திடீரென்று ஒரு சமுதாயம் சரித்திரத்தில் பொற்காலத்தைப் படைக்கிறது? ஏன் சரித்திரத்தில் மற்ற காலகட்டங்கள் இருண்ட காலமாகப் போய்விடுகின்றன?

சிந்தனைக்குரிய விஷயங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வளவு புத்திசாலிகளையும், அறிஞர் பெருமக்களையும், ஆன்மீகவாதிகளையும், நல்லவர்களையும் கொண்ட நம் நாடு தனது அறிவுக்கும் திறமைக்கும் ஈடான ஒரு தமிழகத்தை ஏன் உருவாக்க முடியவில்லை என்ற ஆதங்கம் நம்முள் எழும்புகிறது.

ஜப்பான் நாட்டு மக்களது கூட்டுமனப்பான்மையும் கட்டுப்பாடும் ஒழுங்கும் இன்று அமெரிக்கர்களால் அலசப் படுகிறது. "எனது சிந்தனை—எனது செயல்—என் இனத்திற்குப் பெருமையூட்டும்; வலுவூட்டும்" என்று ஜப்பானிய மக்கள் செயல்படுகிறார்கள்.

அமெரிக்க நாட்டைப் பார்த்தால் அங்கே தனிமனித சுதந்திரம் எப்படி தேசிய சொத்தாக போற்றப்படுகிறது என்பது தெரியவரும். அவர்களது ஆக்கசக்தி படைத்த மனம்—புதியன காணும் மனோபாவம்—புதிய புதிய பொருட்களை உலகிற்கு வழங்கியிருக்கிறது.

முன்னேற வேண்டும் என்ற ஆர்வமும், கடுமையான உழைப்பும் தென்கொரியாவை உலக நாடுகளின் முன்னவைத்திருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளான ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்வீடன் போன்ற நாடுகள் பல ஆண்டு கால மாக முன்னேறும் குணங்களை வாழ்க்கையாக்கி எல்லாவித வாழ்க்கை வசதிகளுடனும் வாழ்ந்துவருகின்றன.

முன்னுக்கு வர விரும்பும் நாம் அவர்களை முன்னேற்றிய குணங்கள் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும். அந்த உயர் குணங்களை வருங்கால நாட்டுக் கலாசாரமாக நாம் மாற்றவேண்டும்.

சரித்திரத்தில் மகாத்மாகாந்தியினால் ஒரு பொற்காலம் இந்தியாவில் ஏற்பட்டது. மகாத்மா காந்தியின் கொள்கைகள் ஒரு அறுபதாண்டு சரித்திரமாக மலர்ந்து இந்தியாவின் சுதந்திரம் என்ற ஒப்பற்ற சாதனையில் முடிந்தது

அந்தப் பொற்காலத்தை நாம் தொடர்ந்து நீடிக்கச் செய்யத் தவறிவிட்டோம். இது துயரம் தரும் செய்தி.

ஏன் காந்திய சகாப்தம் நம் நாட்டில் தொடர வில்லை?

ஜேம்ஸ் ஆலன் என்ற தத்துவஞானி எழுதுகிறார்: "நேர்மையான உழைப்பாலும், தியாகத்தாலும் பெற்ற வெற்றி சரிவரக் கண்காணிக்கப்பட வேண்டும். அப்போது தான் அந்த வெற்றி... அந்த உயர்நிலை தொடர்ந்துவரும். இல்லாவிட்டால் அந்த வெற்றி சரிந்துவிடும்!"

உயர்நெறிகள் போற்றப்படும் ஒரு நிலையை நிரந்தர மாக்க நாம் எந்தவித கண்காணிப்பையும் ஏற்படுத்த வில்லை. தவறுகள் துவங்கியபோது அவற்றைக் களைய முற்படவில்லை சட்டங்கள் இருந்தும் செயல்படவில்லை. கண்காணிக்கத் தவறிவிட்டோம். காந்தியப் பண்பாடுகளை —பள்ளியிலிருந்து சமுதாயம் வரை—வாழ்க்கையாக, குடும்பப் பண்பாடாக மாற்றத் தவறி விட்டோம்.

காந்தி யாருக்கு சொந்தம்?

நமக்கல்ல இன்று.

புத்தர் இங்குதான் பிறந்து எங்கோ போனதுபோல காந்தியையும் ஆக்கி விட்டோம்.

இந்த நாடு என்றும் திருந்தாது—இந்த நாட்டை யாராலும் திருத்த முடியாது என்ற உணர்வுகள்—வேதனைகளாக நம்மையும் ஆட்கொள்ளும் அச்சத்திற்கு ஆளாகிறோம்.

நாட்டின் நிலைகண்டு, மனம் நொந்து போன நிலையில் துறவறம் வாங்கிக் கொண்டவர்கள் உண்டு

மனம் நொந்த நிலையில், அந்நிலை கண்டு வேகப்பட்டு போர்க்கொடி தூக்கி வன்முறையில் ஈடுபடுபவர்கள் உண்டு.

மனம் தொய்ந்த நிலையிலும் நம்பிக்கை இழக்காமல் ஒத்த உள்ளம் உடையவர்களை எல்லாம் ஒன்று திரட்டி, 'செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும்' என்று தொடர்ந்து பாடுபடுபவர்கள் உண்டு.

இதில் நாம் மூன்றாம் வகை.

எண்ணங்கள் விதைகள். அவற்றை உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களிலே தூவிவிட்டால்—ஒத்த உள்ளங்களை ஒன்றுதிரட்டி நம் கடமையை செய்து கொண்டே போனால்,

பலன் தானாக வரும்

இன்றிருக்கிற அவல நிலைகள் ஏதோ மாற்ற முடியாதவைபோல தோன்றலாம். ஆனால் நம் கடமைகளை நாம் செய்துகொண்டே போவோமானால் அவலங்கள் பலகீனம் பெறும். நல்லவை வலிமை பெறும்.

ஏனெனில் உண்மை வெல்லும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. உயர் குணங்களால் நம்மை உருவாக்கிக் கொள்வோம்; துணிவாக்கிக் கொள்வோம்; லட்சியங்களை நோக்கி நடப்போம்.

மே,4,89

வால்மீகி நகர்,

சென்னை-41

உங்களுடன்-ஒரு சக பயணி

—எம்.எஸ். உதயமூர்த்தி

வாழ்க்கைக் குறிப்பு

எம். எஸ். உதயமூர்த்தி விளநகர் என்ற கிராமத்தில் மயிலாடுதுறை தாலுக்காவில், தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர். மயிலாடுதுறை உயர்நிலைப் பள்ளியில் படித்த பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பும் முதுநிலை பட்டப்படிப்பும் பெற்றார். சென்னை பல்கலைக் கழகத்தில் தனது பாடமான வேதியியலில் மற்றோர் முதுநிலைப் பட்டம் பெற்றபின் மேற்படிப்புக்கு அமெரிக்கா சென்றார்.

அமெரிக்கா செல்லுமுன் குடந்தை அரசினர் கல்லூரியிலும், கிண்டி பொறியியல் கல்லூரியிலும் (இன்றைய அண்ணா பல்கலைக் கழகத்திலும்) வேதியியல் (Chemistry) உதவிப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அமெரிக்காவில் விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் மருத்துவ ரசாயனத்தில் டாக்டர் பட்டம் பெற்று ஒரு பத்தாண்டுகள் விஸ்கான்சிலுள்ள மவுண்ட் செனாரியோ கல்லூரியிலும், மின்னசோட்டா, ஐடகோ பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பின், ஆசிரியத் துறையை விட்டு விலகி விஸ்கான்சினில் உணவு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் அதன் தலைமை நிர்வாகியாக நான்காண்டுகள் பணியாற்றினார். 1982இல் (Barclay Chemicals) பார்க்கிளே கெமிகல்ஸ் என்ற தனது சொந்த. ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தைத் துவங்கினார். அந் நிறுவனத்தைத் தனது குமாரரிடம் ஒப்படைத்துவிட்டு 1987-இல் நிரந்தரமாக இந்தியா வந்தார். இன்று சென்னையில் வசிக்கிறார் அவர்.

சிறந்த ஆசிரியர் என்ற விருதும், 'புல் பிரைட்' அறிஞர் (Full Bright Scholar) என்ற கௌரவமும், அமெரிக்காவில்

தொழில் துறையில் உள்ளவர்களில் 'யார் யார்' என்ற நூலில் அவரது பெயர் இடம் பெற்ற பெருமையும் அவருக்குண்டு.

தன் கட்டுரைகளின்மூலம், பேச்சின்மூலம், செயல்களின் மூலம் ஆக்கப்பணிகளைச் செய்து வருகிறார்; மக்களைத் தட்டி எழுப்பி வருகிறார்.

தனது அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற ஒரு புதிய சமுதாயத்தைத் தமிழகம் பெறவேண்டும் என்று விரும்புகிறார் எம். எஸ். உதயமூர்த்தி.

எம். எஸ். உதயமூர்த்தி ஒரு எழுத்தாளர்.

மனவியலைப்பற்றித் தொடர்ந்து, கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்ப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தவர். எழுதி வருபவர்—டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி. மனோதத்துவங்களை வாழ்க்கைக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சுமார் 12 நூல்களில் வடித்துத் தந்திருக்கிறார் அவர்.

எம். எஸ். உதயமூர்த்தியின் உந்துதல்கள் கன்னியாகுமரியிலிருந்து கிருஷ்ணகிரிவரை, வேதாரண்யத்திலிருந்து வால்பாறைவரை. இளைஞர்களை, பெண்களை—படித்த மக்களை—ஒரு உத்வேகம் பெறச் செய்திருக்கிறது. சமீபத்தில் டைரக்டர் பாலசந்தர் 'உன்னால் முடியும் தம்பி' என்ற தலைப்பில் ஒரு திரைப்படத்தை வெளியிட்டிருக்கிறார். அப் படத்தின் கதாநாயகன் பெயர் உதயமூர்த்தி. இப்படி பாலசந்தரிலிருந்து பள்ளி இளைஞர்கள் வரை—அவரது எழுத்துக்கள் ஒரு பாதிப்பை—ஒரு உத்வேக உணர்வை—ஒரு நம்பிக்கையை—உருவாக்கி இருக்கின்றன; ஒரு அமைதியான மாற்றம் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

எழுத்து என்னவெல்லாம் செய்யும்?

பொறுத்திருந்து பார்ப்போம்!

பொருளடக்கம்

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

எழுதிய பிற நூல்கள்

ஆத்ம தரிசனம்
நெஞ்சமே அஞ்சாதே நீ
தட்டுங்கள் திறக்கப்படும்
மனம் பிரார்த்தனை மந்திரம்
தலைவன் ஒரு சிந்தனை
எண்ணங்கள்
மனித உறவுகள்!
பிரச்சினைகளுக்கு முடிவு காண்பது எப்படி?
நாடு எங்கே செல்கிறது?
தன்னம்பிக்கையும் உயர் தர்ம நெறிகளும்
சிந்தனை தொழில் செல்வம்
நம்மால் முடியும் தம்பி-நம்பு!
நீதான் தம்பி முதலமைச்சர்
வாழ்க்கை அமைக்கும் எண்ணங்கள்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை-600 017.

1. முன்னேறத் தேவையான முக்கிய குணங்கள்

பன்னிரண்டு வயதுப் பெண்ணை ஒரு பையன் துரத்திக்கொண்டிருந்தான், இதைக் கண்ட பெண்ணின் தந்தை அந்தப் பையனைப் பார்த்து, 'ஏன் துரத்து கிறாய், அவளை?'' என்று கேட்டார்.

''என்னைக் கிள்ளிவிட்டாள்!''

தன் பெண்ணை நிறுத்திக் கேட்டார்.

''ஏன் அம்மா அவனைக் கிள்ளினாய்?''

அங்குமிங்கும் பார்த்துவிட்டு அவள் சொன்னாள் ''அவன் என்னைத் துரத்தவேண்டும் என்பதற்காகத் தான்!''

சிலர் சில விஷயங்களைத் தெரிந்து உணர்ந்து, காரியத்துடன் செய்கிறார்கள். சிலர், ''ஏன் விஷயங்கள் இப்படி நடக்கின்றன?'' என்ற உணர்வு ஏதுமின்றிக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

''வாழ்க்கையை நாம் தெரிந்துதான் வாழ்கிறோமா? தெரிந்து, உணர்ந்து, ஒரு பலனை எதிர்பார்த்துத்தான் வாழ்கிறோமா? அல்லது ஏதோ நேர்கிற சம்பவங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வாழ்வை ஓட்டிக்கொண்டிருக் கிறோமா?''

சிந்தனைக்குரிய கேள்வி; நம்மைச் சுயசோதனைக் குட்படுத்தும் கேள்வி. கத்தோலிக்கப் பாதிரியார்களும் கன்னி மாதர்க்களும் ஆண்டுக்கொருமுறை தனி இடத்திற்குச் சென்று சுய சோதனை செய்து கொள்வதை Retreat என்று சொல்வார்கள். அப்படி அடிக்கடி நாமும் சுயசோதனை செய்து கொள்வது நல்லது.

எனது வாசகர் ஒருவர் எழுதி இருந்தார், "வாழ்வை நாம் விரும்பும்வண்ணம் அமைத்துக் கொள்ள ஒரு பத்துக் குணங்கள் மிகவும் அவசியம் என்று சொல்வீர்களா? அப்படியானால் அவற்றைக் குறிப்பிட்டு எழுதமுடியுமா?" என்று கேட்டிருந்தார்.

இப்போது நான் சுயசோதனையில் இறங்கினேன். என் அனுபவங்களை, உலக நடப்புக்களை, நான் படித்தவற்றை, வீர வரலாறுகள் காட்டும் உண்மைகளைப் பற்றி யோசித்துப் பார்த்தேன்.

ஒரே வாக்கியத்தில் கூற வேண்டுமானால், "வாழ்வின் தாத்பரியமே 'நல்லெண்ணம்' என்ற ஒரு சொல்லில் அடங்கி இருக்கிறது" என்று நிச்சயத்துடன் கூறலாம். அன்றிலிருந்து இன்றுவரை எல்லா மதங்களும் உபதேசிக்கும் வேத நூல்களின் சாரத்தை நாம் பிழிந்தெடுத்தோமானால் மிஞ்சும் ஒரே வார்த்தை 'அன்பு' என்ற ஒன்றுதான். அன்பின் மாற்றுப் பெயர்தான் நல்லெண்ணம்; அன்பின் துவக்க இடம்தான் நல்லெண்ணம்.

ஆனால் அன்பு என்பது பல வடிவங்களை எடுக்கிறது. அன்பு காரணமாகவே தந்தை ஆத்திரமடைந்து மகனிடம் ஏகமாக இரைந்து கத்துவதைக் காண்கிறோம். சமுதாயத்தின்மீது உள்ள அன்பு காரணமாகவே காந்திஜி

தம்மை வருத்திக்கொண்டார்; உண்ணாவிரதம் மேற்கொண்டார். பசியால் வாடும் குழந்தையிடம் உள்ள அன்பு காரணமாக ஏழைத்தாய் திருடக்கூடக்கூடும்.

எனவே அன்பு என்பது நமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாக அமைய வேண்டும் என்று கூறலாமேயொழிய அன்பு மட்டுமே போதாது. அன்பை மட்டும் உணர்ந்தும், உணர்த்திக் கொண்டும் இருந்தால் வாழ்க்கையில் முன்னேறிவிட மாட்டோம். வேறு சில குணநலன்களும் தேவை; அவை என்ன?

நான் வாழ்வுக்கு வேண்டிய முக்கிய குணங்களைப் பற்றி இப்படி யோசித்துக்கொண்டிருந்தபோது என் நண்பர் பரஞ்சோதி வந்தார். பரஞ்சோதி மனவியல் படித்தவர். பரஞ்சோதி கூறினார்: ''மிகவும் படித்த அமெரிக்கரை ஒரு செமினாரின்போது சந்தித்தேன். இதே கேள்வியைக் கேட்டேன். அவர் கூறினார்: ''வாழ்வில் ஒரு மனிதனுக்கு Integrity வேண்டும். சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான் என்று பிறரால் போற்றப்படும் குணங்களை அவன் வளர்க்க வேண்டும்.''

சிறிது நேரம் எங்களிடையே அமைதி நிலவியது. நாங்கள் இருவரும் அவர் சொன்ன அந்த உண்மையைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தோம். கொடுத்த வாக்குறுதியை மீறாத வாய்மை அவசியம்தான். ஆனால் வாழ்க்கை வளம்பெற அதுமட்டும் போதுமா?

மீண்டும் பரஞ்சோதி பேசத் துவங்கினார். ''இந்த விஷயங்களைப் பற்றி நானும் தீவிரமாக யோசித்திருக்கிறேன். எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல

வேண்டுமானால் மூன்று விஷயங்களைக் குறிப்பிடுவேன். அறிவு, மனோபாவம், செயல்.''

எனக்கு உற்சாகம் பிறந்தது. ஆங்கிலத்தில் இதையே Awareness, Attitude and Action என்று கூறலாம்.

விஷயங்கள் ஏதும் தெரியாதபோது நமக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. நமக்குப் பரிச்சயமில்லாத ஊருக்குப் போகும்போது ஒரு வகை தயக்கம், அச்சம் ஏற்படுகிறது. அவர்கள் பேசும் மொழி தெரியாத இடத்தில் நாம் போகும்போது ஒருவகை பயம் ஏற்படுகிறது. நமக்குப் புரியாத ஒரு யந்திரத்தில் கோளாறு ஏற்படும்போது, ஏன் என்ன என்று புரியாததினால் நமக்கு ஒரு கிலேசம் ஏற்படுகிறது.

அறிவுதான் நமது பயத்தைப் போக்குகிறது. ஊரைப்பற்றிய அறிவு, யந்திரத்தைப்பற்றிய அறிவு நமக்கு வந்தவுடன் அவற்றை எளிதாக நாம் கையாளு கிறோம். அறிவு நமக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. ஒரு தெளிவைத் தருகிறது மருத்துவம் கிராமத்தில் பரவாதபோது காலரா, பிளேக் என்றால் மக்கள் பயந்தார்கள். ஆங்கில மருத்துவ அறிவு நம் பயத்தைப் போக்கிவிட்டது. அதனால்தான் அறிவை மகத்தான சக்தி என்று குறிப்பிடுகிறார்கள் வாழ்வுக்கு இது அவசியம்.

இரண்டாவது நமது மனோபாவம். ஒரு விஷயத்தை நம்மால் முடியாது என்று அழுது கொண்டே எடுத்தோமானால்—நம் தலையில் கட்டி விட்டார்களே என்று நொந்துகொண்டே செய்தோ

மானால் அது தோற்றுப் போகும் சாத்தியம் தொண்ணூறு சதவீதத்துக்கு மேல். மாறாக, "இது என்ன பிரமாதம்! வெளுத்துக் கட்டி விடலாம்!" என்று உற்சாகமாக ஊரைக் கூட்டினோ மானால், காரியம் துவங்குவதற்கு முன்பே வெற்றியாய் அமையும்!

வாழ்வை நாம் உற்சாகமாகவும் வாழலாம். வருத்தப் பட்டு அழுதுகொண்டும் வாழலாம். அது நம் முன் உள்ள வாய்ப்பு. நாம் உற்சாகமாகப் பேசினால் எதிரில் இருப்பவர் உற்சாகமடைகிறார். மீண்டும் உங்களுடன் பேசப் பழக ஆசைப்படுகிறார். அழுது கொண்டோ, அல்லது அதிகாரத்துடனோ, ஆணவத்துடனோ பேசும் போது எதிரில் உள்ளவர்களை இழக்கிறீர்கள். எந்த நல்ல குதிரையையும் சரி, நீங்கள் உற்சாகமில்லாது விற்க முயன்றீர்களானால் வாங்குபவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும். வாழ்வில் உற்சாகமான மனோபாவத்தை எதிலும் கடைப்பிடிக்க முயலவேண்டும்.

மூன்றாவதாகச் செயல். எதையும் செய்தால் ஒழிய பலன் விளையாது. நமது நாட்டில் "மந்திரத்தால் மாங்காய் விழும்" என்று நம்புபவர்கள், அதிசயங்களை எதிர்பார்ப்பவர்கள். லாட்டரிச் சீட்டை நம்பி வாழ்பவர் கள் அதிகமோ என்றொரு சந்தேகம் எனக்கு. நாட்டில் ஊழல், லஞ்சம், அநியாயம் அதிகமாகிவிட்டது என்று புலம்பும் அளவுக்கு, 'இந்த உபயோகமற்ற அரசாங்கத்தை நாம் தூக்கி எறிய வேண்டும்' என்று கருதிச் செயல்படும் திறன் நம் மக்களுக்கு இல்லை. செயல்கள் தான் சாதனை களை விளைவிக்குமே தவிர, வெறும் ஆசைகள் சாதிக்காது; வெறும் வாய்ப்பேச்சு எதையும் சாதிக்காது. பகவத் கீதையைப் படித்தீர்களானால் கருமம், செயல்

என்று செயலைப்பற்றிய விளக்கம்தான் அது. நீதியை நிலைநாட்ட பாண்டவர்கள் போரிடவில்லை என்றால் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு வேகமாகச் செல்லும் தேரில் புறப்படவில்லை என்றால் வெற்றி எப்படி வந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

இவ்வுலகில் இன்று நாம் பார்க்கும் இத்தனை பொருட்களும்' உணவு, உடை, வீடு, கார், டெலிபோன் விமானம், டெலிவிஷன் என்ற இத்தனை பொருட்களும் மனிதனின் செயல் திறத்தால் விளைந்த விஷயங்கள், வெறும் ஆசையால் மட்டுமல்ல. இதை நீங்கள் சொல்ல விரும்பினால் தலையிலடித்துச் சொல்லுங்கள்! கன்னத்தில் அறைந்து சொல்லுங்கள்!

தமிழ்ச் சமுதாயம் தன் பயத்தைப்போக்கி, சுயநலத்தையும் சுயவாழ்வு வாழ்வதையும் மீறித் தியாக உள்ளத்துடன், செயல் புரிய முன்னுக்கு வந்தால் ஒழிய அதற்கு விமோசனம் கிடையாது. நமக்குத் தெளிவான அறிவு வேண்டும், முடியும் என்ற உற்சாகமான மனோபாவம் வேண்டும். பலன் விளைவிக்கும் செயல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் தமது கருத்துக்களைக் கூறி நிறுத்தினார் டாக்டர் பரஞ்சோதி. பிட்டுக்கு மண் சுமந்த கதையில் இறைவன் மேல் அடித்த அடி சுரீர் என்று எல்லோருக்கும் விழுந்ததைப்போல, பரஞ்சோதியின் அடி என்மீது விழுந்தது! உங்கள்மீது?

2. சராசரி நிலையிலிருந்து மாமனித நிலைக்கு...

மனவியல் அறிவில் ஒரு மகத்தான சிந்தனையாளர் மாஸ்லோ.

மற்றெல்லா மாணவர்களாலும் சேர்த்துக்கொள்ளப் படாத ஒருயூத குடும்பத்து இளைஞராகக் கல்வியைத் துவங்கினார் மாஸ்லோ. யூதர்களை அவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்தார்கள் அந்தக் காலத்தில். விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தில் புகழ் பெற்ற மனவியல் பேராசிரிய ரான வாட்சனிடம் படித்தார் மாஸ்லோ. அங்கே டாக்டர் பட்டம் பெற்றார். மனிதனது குணங்கள் எல்லாம் மனிதனது பழக்கவழக்கங்களிலிருந்து பிறந்தவை, பழக்கங்களை மாற்றினால் குணங்களை மாற்றி விடலாம் என்ற அடிப்படையில் பிறந்தது வாட்சனின் அணுகு முறை.

வாட்சனுடைய Behaviourism கொள்கைக்குமுன் பிராய்டின் கொள்கைகள் மனவியலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. மனவியல் அறிவை ஒரு பாடமாக ஒழுங்குபடுத்தத் துவங்கியவர் பிராய்டு எனலாம். ஆகவே பிராய்டை 'மனவியலின் தந்தை' எனக் குறிப்பிடு கிறார்கள்.

பிராய்டு முக்கியமாக இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டார். எப்படியாவது வாழ்ந்துவிடவேண்டும்

என்ற உயிர்த் துடிப்பும் தனது பாரம்பரியத்தைத் உருவாக்கிச்செல்லும் ஜீவத்துடிப்பும் அதனால் விளையும் உடலுறவு நாட்டமும் மனித வாழ்வை இயங்குகின்றன என்று சொன்னார்.

அத்துடன் மனிதனுக்கு உணர்வுகளை வெளிப்படுத்தும் அடங்காத வெறி ஆழ்மனத்தில் தங்கி இருப்பதாகவும், அது புறஉலகில், மனித சமுதாயத்தினால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களை மீறத் துடிப்பதனால் ஒரு நிரந்தரப் போராட்டம் மனிதனுக்குள் சதா நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்.

அவர் கூறியவற்றில் எவ்வளவோ உண்மைகள் இருக்கின்றன. இதன் விளைவாகப் பின்னால் வந்த மனவியல் அறிஞர்கள் மனிதனது போராட்டங்களை—அவனது கவலையை, துக்கத்தை, கோபத்தை, விரக்தியை—ஆராயத் துவங்கினார்கள்.

பிராய்டு ஓர் 'ஒரிஜினல்' சிந்தனையாளர். எதையும், 'ஏன்? எப்படி?' என்று மூலத்திற்கே சென்று விவாதித்துப் பழைய கருத்துக்களைப் பாராட்டாமல்—கவலைப்படாமல் துணிவாகத் தம் வழியில் சென்றவர். பின்னால் வந்தவர்களில் பலர் அவர் அடியொற்றி மனிதனது அதீத நிலைகளை ஆராய்ந்தார்கள். பிராய்டை ஏற்றுக் கொண்டு அதே வழியில் சென்றார்கள்.

இந்தக் கட்டத்தில்தான் மாஸ்லோ வந்தார். "மனிதர்களது மனநோய்களை ஆராய்வதானால் முதலில் நாம் ஆரோக்கியமான மனம் எப்படி இருக்கிறதென்று அறிந்துகொள்ள வேண்டும். அதன் இயல்புகள் என்ன? அது எப்படி இயங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். மனிதர்களிடம் உள்ள சிறந்த

இயல்புகளை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். மகிழ்வு, நிறைவு, நிம்மதி, நகைச்சுவை, விளையாட்டு. நிறைவு தரும் உணர்வுகளின் உச்சநிலை—இவை பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும். இன்று இதை நாம் புறக் கணிக்கிறோம். மனிதனிடம் காணும் அன்பு, நட்பு, தாராள மனப்பான்மை, தியாகம் போன்ற குணங்கள் மனிதனை மாமனிதனாக உயர்த்துகின்றன.

"நாம் சித்த பேதம் கொண்டவர்களையும், திருடர் களையும், விரக்தியாளர்களையும் மட்டும் ஆராய்வோ மானால், மனித வளர்ச்சிக்குப் பதில் மனித சமுதாயத் தைத் தேக்கத்திற்கு அழைத்துச் சென்றவர்களாவோம். நமது மனவியல் ஒரு முடக்கப்பட்ட மனத்தின் விளைவு களை விளக்குவதாக அமையுமே தவிர, ஓர் உயர்தரமான சர்வ வல்லமை படைத்த ஆரோக்கியமான மனத்தை விளக்கி, மனித சமுதாயத்திற்கு உதவுவதாகாது" என்று கூறினார்.

இப்படி மனஇயல் சிந்தனைகளில் மீண்டும் ஒரு திருப்புமுனையை அவர் உருவாக்கினார்.

மனிதனது நடை உடை பாவனைகளைப் பற்றிப் படித்து ஆராயும் மனவியல் பேராசிரியர்கள், சாதாரண மனிதர்களையே எடுத்துக்கொண்டார்கள். அதாவது மனித சமுதாயத்தின் சராசரி மனிதர்களை. பிராய்டின் வழிவந்தவர்கள் மனிதனது குறைகள், பயம், துக்கம், விரக்தி, வியாகூலம்—போன்ற உணர்வுகளில் கவனம் செலுத்தினார்கள். வாட்சனின் வழி வந்தவர்கள் சராசரி மனிதனின் சராசரி குணங்களை ஆராய்ந்தார்கள். புகழ்பெற்ற கின்சேயின் உடலுறவுகளைப் பற்றிய 'சர்வே'யும் இதை ஒட்டி வெளிவந்த ஆராய்ச்சிதான்.

"இதுதான் மனிதனது சராசரி வயது; இதுதான் மனிதனது சராசரி குணம்" என்று கண்டு பிடித்து அதற்கு ஏற்ப மனிதன் நடந்துகொண்டால் போதும் என்ற நிறைவை ஏற்படுத்தினார்கள்

மாஸ்லோவோ, மனிதன் எப்படி இருக்கிறான் என்று பார்க்காமல், மனிதன் எப்படி எல்லாம் இருக்க முடியும் என்பதை மாமனிதர்களை ஆராய்ந்து, கண்டறிந்தார்.

நடை, உடை, பாவனைகளை ஆராயும் வாட்சன் வழி வந்தவர்கள் மிருகங்களைப் பொதுவாகத் தங்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார்கள். மிருகங்களிடையே நிகழும் போட்டியும், அடிதடியும், ஒன்றையொன்று கொல்லும் நிகழ்ச்சிகளும் அவர்களது ஆராய்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன. ஏனெனில் டார்வின் சித்தாந்தப்படி, "எது தகுதி உள்ளதோ, அது தான் இவ்வுலகில் ஜீவிக்கிறது." இந்தக் கொள்கையின் படி, மிருகங்களின் போட்டி மனப்பான்மைதான் அவற்றின் வெற்றிக்குக் காரணமாக இருக்கிறதேயொழிய அவற்றிடையே நிலவிய அன்போ ஒத்துழைப்போ அல்ல.

விஸ்கான்சினில் மாஸ்லோ குரங்குகளை வைத்து நடத்திய ஆராய்ச்சிகளில், குரங்குகளிடம் நிலவிய சுயநலம், ஆக்கிரமிப்பு போன்ற குணங்களைவிட அவற்றினிடையே அன்பை அதிகம் கண்டார். ஒத்துழைப்பையும் கண்டார்.

பின்னர் மாஸ்லோ மனிதர்களையும் தமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். அதிலும் உன்னதமான இயல்புகளைக் கொண்ட மாமனிதர்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டார். சராசரி மனிதர்களுக்குப் பதில், மனித இனத்தின் மேல்மட்ட—உயர் மக்களின்—அற்புத

குணங்களை ஆராய்ந்தார். மனிதனால் எவ்வளவு முடியும், மனித சக்தி எவ்வளவு தூரம் செயல்படும், அவ்வளவு தூரம் செல்ல எது அவனைத் தூண்டுகிறது, ஏன் அவன் அதற்காகத் தன் உயிரைக் கூடப் பணயம் வைக்கிறான், என்றெல்லாம் ஆராய்ந்து மூலகாரணங் களைக் கண்டறிந்தார்.

அவைதாம் இன்று மணவியல் பாடங்களிலும் தொழில் நிர்வாகம் போதிக்குமிடங்களிலும், சுயவளர்ச்சியில் ஆர்வ முள்ள எல்லா மக்களிடையேயும் பேசப்படும் 'மனிதத் தேவைகள்' என்ற மாஸ்லோவின் விளக்கம்.

எப்படி மனிதத் தேவைகள் படிப்படியாக உயர் கின்றன என்பதை வெகு அழகாக துல்லியமாக விளக்கு கிறார். அவை ஐந்து வகைப்படும்.

முதலாவதாக, மனிதன் அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்துகிறான். உணவு, உடை, குடியிருக்க இடம் என உயிர் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை கள்.

இரண்டாவதாக மனிதன் பாதுகாப்பை நாடுகிறான். மிருகங்களிடமிருந்து பாதுகாப்பு, எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, இடி, மின்னல், மழை போன்றவற்றி லிருந்தும் பயங்களிலிருந்தும் பாதுகாப்பை நாடுகிறான்.

மூன்றாவதாக மனிதன் சமுதாயத்தின் ஒரு பகுதி யாகப் பிறரால் தான் ஏற்றுக்கொள்ளப்படுவதை— பிறரால் அங்கீகரிக்கப்படுவதை— விரும்புகிறான். பத்திரிகையாளன் நான், பாராளுமன்ற உறுப்பினன் நான், என்று சமுதாயத்தின் ஒரு பகுதியாகத் திகழ்வதில்

நிறைவு காண்கிறான். மனிதன் முயற்சி எடுத்துச் சங்கங்கள் அமைப்பதற்கெல்லாம் இதுதான் காரணம்.

நான்காவதாக, தனது திறமைகளுக்காகச் சமுதாயத்தால் தான் ஏற்றுக்கொள்ளப்படுவதை, பாராட்டப் படுவதை அவன் மனம் அவாவுகிறது. அதற்காக ஏங்கவே செய்கிறது. மனித மனத்தின் அடிப்படை இயல்பாக இது இருக்கிறது.

ஐந்தாவதாக மனிதன் தன் முழுத் திறமைகளையும் அறிவையும் வெளிக்கொணர்ந்து, தான்மேற்கொண்ட லட்சியத்தை அடைந்து அதில் நிறைவு காண்கிறான். ஒரு ஜீவனின் பூரணத்துவம் எதுவோ, எவ்வளவு தூரம் அதை அடைய முடியுமோ அவ்வளவையும் அடைந்து நிறைவு காணும் மனம் அடிப்படையிலே இருந்து, மனிதனை இயக்குகிறது.

இவை மாஸ்லோவின் ஆராய்ச்சி முடிவுகள். சிந்தித்துப் பார்க்க இங்கே நிறைய விஷயங்கள் இருக்கின்றன. இவைதாம் கடைசி உண்மைகள் என்று நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு, உங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் ஒப்புநோக்கி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். ஆராய்ந்து பாருங்கள்.

3. மனிதர்கள் காட்டும் ஒளிப்பாதை

யார் வாழ்வினை மாஸ்லோ தமது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார் என்கிறீர்கள்?

காந்தி போன்றவர்களை;

ஷ்வைஸ்டர் போன்றவர்களை;

ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களை!

அவர்களிடம் மாஸ்லோ கண்ட குணங்களை நாமும் காண்போம்.

இவர்கள் கிட்டத்தட்ட அறுபது வயதை அடைந்தவர்கள். வாழ்வைப் பூரணமாக – மொத்தமாக வாழ்ந்து —முழு ஓட்டத்தையும் கண்டவர்கள். சிலர் தங்கள் துறைகளில் மகத்தான சாதனைகள் புரிந்திருப்பினும் சிற்சில குறைபாடுகளையும் கொண்டிருந்தார்கள். உதாரணம் கவிஞர் பைரன்; ஓவியர் வான்கோ.

இவர்கள் அறிவை முன்வைத்து உணர்ச்சியைப் பின் வைத்து எதையும் ஆராய்ந்தார்கள். ஒரு பராபட்சமற்ற நோக்குடன் எதையும் அணுகினார்கள். பொதுவாக நாம் எதை ஆசைப்படுகிறோமோ அதைத்தான் கேட்க விரும்புவோம். இவர்கள் அப்படி அல்ல. தங்களது சொந்த அபிப்ராயங்கள் தங்களது பார்வையைப் பாதிக்காமல் கவனித்துக் கொண்டார்கள்.

பிறரைச் சரியாக எடைபோட்டார்கள். எது போலி எது உண்மை என்பதை எளிதில் புரிந்து கொண்டார்கள்.

சொந்த வாழ்வில் சரியான பெண்ணைத் தேர்ந்தெடுத்து மனைவியாக்கிக் கொண்டார்கள். அவர்களுடன் இனிமையாகக் குடும்பம் நடத்தினார்கள்.

உலக விஷயங்களில் எது சரி எது தப்பு என்பதைப் பற்றியும் எது செய்யலாம் எது செய்யக்கூடாது என்பதைப் பற்றியும் அவர்களுக்குத் தெளிவு இருந்தது. ஒரு பிரச்சினை என்று வரும்போது ஒரு தீர்மானமான முடிவுக்கு வரும் குணம் அவர்களுக்கு இருந்தது.

எளிமையாக வாழ்ந்தார்கள். 'கற்றது கைமண் அளவு' என்ற அடக்கம் இவர்களிடையே காணப்பட்டது. பிறரிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டினார்கள். தங்களைச் சரிவரப் புரிந்து கொண்டிருப்பதனால் ஏற்பட்ட ஒரு குணம் இது. அவர்களிடம் ஆணவம் இல்லை. ஒரு குழந்தை, உலகைப் பார்ப்பதுபோல் அவர்கள் பார்த்தார்கள்.

எதையும் ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் அவர்களுக்கிருந்தது என்று சொல்லிவிட முடியுமா? முடியாது. அவர்களுக்கென்று சொந்த அபிப்ராயம் ஏதும் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? முடியவே முடியாது!

இந்த மனோபாவ அடிப்படையில் அவர்கள் முடிவெடுத்தார்கள்; தீர்மானம் செய்தார்கள்; உண்மைகளைக் கண்டார்கள்; திட்டமிட்டார்கள்; செயல் புரிந்தார்கள். ஏதாவது ஒன்றில்—முக்கியம் என்று தாங்கள் கருதிய காரியத்தில், லட்சியத்தில் அல்லது தொழிலில் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தாகள். அதிலே கஷ்டப்பட்டு உழைத்தார்கள்.

'இப்படி உழைக்கிறார்களே, விளையாட்டு, பொழுதுபோக்கு என்ற ஏதும் இவர்களுக்கு இருப்பதில்லையா?' என்று நாம் கேட்கக்கூடும்.

·இவர்களிடம் அருமையான நகைச்சுவை இருந்தது, விளையாடினார்கள்; வேடிக்கைகளில் ஈடுபட்டார்கள். பெரும்பாலும் வேலையே விளையாட்டுபோல் சவாலாக இருந்தது இவர்களுக்கு

அவர்களிடம் ஆக்க சக்தி கொண்ட அபார மனம் இருந்தது. அது மனிதத் தன்மையுடன், ஆரோக்கியமான உடலுடன் செயல்பட்டது. அனுசரிப்பு, பீறிட்டெழும் இயல்பு, தைரியம், தவறு நேர்ந்தாலும் நிலைகுலைந்து போகாத மனம், திறந்த மனம்—இவை அவர்களிடையே இருந்தது. பிறர் பரிகாசம் செய்வார்களே என்று நினைக்காத குழந்தைபோல அவர்கள் செயல்பட்டார்கள்.

இந்த உயர் குணங்கள்—போகப்போக—வயதேற ஏற, சில சமயம் இவர்களிடை மங்கிப் போயிற்று. ஆனால் தற்காலிகமாக அவற்றை இழந்தாலும், மீண்டும் அந்த உயர் குணங்களையே புகலிடமாகத் தேடி வந்துவிடுகிறார்கள், இவர்கள். தானாக பீறிட்டெழும் இயல்பு என்று கூறினோமே (Spontaneity) அதை விளக்குவதானால், அவர்களால், சொன்ன மாத்திரத்தில் கண்ணதாசன்போல ஒரு கவிதை பாடமுடியும், பால சரஸ்வதி போல ஓர் அபிநயம் செய்து காட்ட முடியும்.

இந்த ஆக்க சக்தியின் உத்வேகம்தான் மனிதர்களைக் கவிஞர்களாகவும் காவியம் படைப்பவர்களாகவும். இசை—நாட்டிய மேதைகளாகவும், மகத்தான விஞ்ஞானிகளாகவும் ஆக்குகிறது. ஆனால் இவர்களது

ஆர்வம் உத்வேகத்துடன் நின்றுபோய்விடுவதில்லை. உத்வேகத்தையொட்டி. தொடர்ந்து உழைப்பு— உழைப்பு—உழைப்பு என அவர்கள் உழைப்பினால் காரியத்தை முடித்து நிறைவேற்றினார்கள்.

மகாபாரதம் எழுதிய வியாச முனிவரை எண்ணிப் பாருங்கள். உத்வேகம் எழுந்துதான் எழுதத் துவங்கினார். ஆனால் எத்தனை உழைப்பு, எத்தனை நாள், மாதம், ஆண்டு என்ற உழைப்பு மகாபாரதம் என்ற மகத்தான காவியத்தை உருவாக்கியது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவர்கள் தங்களைப் பற்றி நொந்துகொண்டதில்லை. எரிச்சல் பட்டதில்லை; 'என்னை எனக்கே பிடிக்கவில்லை' என்று சொன்னதில்லை. ஆகவே அவர்களது சக்தி—வருத்தத்திலும், தன்னைத்தானே உழப்பிக் கொள்வதிலும் செலவாவதில்லை; ஆக்கபூர்வமான காரியங்களில் செலவாயிற்று.

விஞ்ஞானபூர்வமாக விஷயங்களை அணுகும்போது —மனிதர்கள் சிலசமயம் மனிதத்தன்மையற்று யந்திரங்களாக மாறிவிடுகிறார்கள் என்று சிலர் குறைப்படுவதுண்டு. ஆனால் மாமனிதர்களோ தங்களது விஞ்ஞான அறிவும், அனுபவமும், பண்புகளும், பிரபஞ்ச உண்மைகளும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இழைந்து இயங்கக் காண்கிறார்கள். உண்மை எதுவோ, அது நன்மை தருவதாயும், அழகாக இருப்பதாகவும்; அவர்கள் நம்புகிறார்கள்,

மத நூல்கள் பெரும்பாலும், மனிதன் முழுக்க முழுக்கச் சுய நலமற்று வாழவேண்டும் என்று வலியுறுத்து

கின்றன. ஆனால் இவர்களோ மனித வாழ்வில் சுயநலமும் பொதுநலமும் சேர்ந்துதான் செயல்படுகிறது என்பதை உணர்ந்து வாழ்கிறார்கள்.

மனிதன் நல்லவற்றிற்கும் கெட்டவற்றிற்கும் இடையேயே போராடுகிறானா? அதுதானா வாழ்க்கை? என்ற கேள்விகள் எழலாம். அத்தகைய போராட்டம் உண்மையாக இருக்கலாம். ஆனால் உயர் மனிதர்களோ, மகாத்மாகாந்தி கூறியதுபோல, ''நல்லவற்றை நாடும் பேரவாதான் உலகை இயக்குகிறது; அதுதான் கெட்டவற்றை மிஞ்சுகிறது'' என்ற நம்பிக்கைகொண்டு வாழ்கிறார்கள். காரியம் செய்கிறார்கள்.

இயல்பாக இவர்களுக்குச் சீடர்கள் கூட்டம் ஏராளம். தங்களது கும்பலின் குறைபாடுகளை இவர்கள் சகித்துக் கொள்கிறார்கள். அதேசமயம், ஏமாற்று, பொய், கொடுமை என்பவற்றை அவர்கள் ஏற்பதில்லை. அநியாயம் கண்டவிடத்துப் போர்க்கொடி தூக்கிப் போரிடும் உள்ளம் கொண்டவர்கள் இவர்கள்.

அவர்கள் வாழ்வில் சங்கடம் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் அதை மிகைப்படுத்தாது மகிழ்வை அதிகம் அனுபவிக்கிறார்கள். உபயோகமற்ற பேச்சுக் களையும் அக்கப்போர்களையும், கிசுகிசுக்களையும் அவர் களால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. பிறரை உபயோகிக்கும் சுயநலம் அவர்களிடம் இல்லை. எல்லோரையும் மரியாதையுடன் நடத்துகிறார்கள். பாரதி யாரின், ''யாரையும் மதித்து வாழ்'' என்ற ஆத்திச்சூடி அவர்களது வாழ்வின் தாரக மந்திரமாக இயங்குகிறது. எதையும் சமாளிக்கும் மன இயல்பு கொண்டவர்கள் இவர்கள்.

தெரியாத விஷயங்களும் மறைபொருள்களும் புரிந்து கொள்ள முடியாத விஷயங்களும் இவர்களை வசீகரிக்கின்றன. விஞ்ஞானி ஐன்ஸ்டைன் இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவர் கூறுகிறார்: "உலகிலேயே மிக அழகான, அதிசய அனுபவம், தெரியாத விஷயங்களைப் பற்றியதுதான். கலையும் விஞ்ஞானமும் பிறப்பதற்கே அதுதான் காரணம்."

பிராய்டு, 'ஆழ்மனம் சுய போராட்டத்தில் ஈடுபட்டி'ருப்பதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் மாஸ்லோ 'ஆழ்மனம் அன்பு கொண்டதாகவும், ஆரோக்கியமானதாகவும் மகத்தான ஆக்க சக்தி படைத்ததாகவும்' இருக்கக் காண்கிறார்.

வாழ்வே மாமனிதனாகும் முயற்சிதான். அதுதான் நோக்கம் என்றால், பரிணாம வளர்ச்சி அதை நோக்கித்தான் செல்கிறது என்பது உண்மையானால், நாம் மாமனிதர்களையும், அவர்களது குணங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்; வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் நமது முழுத்திறமைகளும் வெளிப்பட்டு அவை பூரணத்துவத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும்.

4. திறமைகள் மலரட்டும்!

எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமலே பலர் சென்று கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குள் இருக்கும் திறமைகள் என்ன, தாங்கள் எங்கே பிரகாசிக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளாமலே பலர் ஏதோ கிடைத்த இடத்தில், அகப்பட்ட வேலையில், வாழ்வை ஓட்டிக்கொண்டிருக் கின்றனர்.

நாம் யார் என்பது அவ்வளவு முக்கியமான விஷய மல்ல. ஆண், பெண், வயோதிகர், இளைஞர், கீழ் சாதி, மேல் சாதி, ஏழை, ஊனமுற்றவர் என்பனவை எல்லாம் ஓரளவுக்குத்தான் நமக்கு எல்லை வகுக்குமே ஒழிய அவற்றால் நம்மைச் சிறைப்படுத்த முடியாது. நாம் எங்கே போகிறோம், எதை அடைய விரும்புகிறோம் என்பதுதான் முக்கியம். நமது திறமைகள் என்ன? அவற்றை உபயோகிக்கிறோமா என்று நம்மை நாமே புரிந்துகொள்வதுதான் முக்கியம்.

"கான்வெண்டில் படிக்கும் பெண்போல் அடக்கத்து டனும், உலகம் அறியாக் குழந்தை நிலையிலும் இருக்கிறார் இந்திராகாந்தி" என்று எழுதினார் வெல்ஸ் ஹேங்கன் என்ற பிரபல அமெரிக்க நிருபர். அந்த அடக்கம், பயம், அறியாமை என்பனவெல்லாம் நிஜமா என்பதை எண்ணிப்பாருங்கள். "செய்து முடிப்பேன்" என்ற திட மனமும், "நிரூபித்துக் காட்டுவேன்!" என்று சவால்களை ஏற்கும் குணமும், "அடைந்தே தீருவேன்!" என்ற லட்சியப் பற்றும் இருந்தது அவரிடம்.

எத்தனையோ பெரிய உலக ராஜ தந்திரிகளான நிக்சனையும், கிஸ்ஸிஞ்சரையும், தாட்சரையும், டிகாலையும், நாசரையும் அவர் சமாளித்தார். இந்திய அரசியலின் பழம் பெருச்சாளிகளும், புது முதலைகளும் விடுத்த சவால்களை அவர் ஏற்றார்.

இன்றைய தமிழ்நாட்டு முதல்வரைக் கவனியுங்கள். எம்.ஜி.ஆருக்கு நாட்டைப் பற்றிய தெளிவு இல்லை; தன்னைப் பற்றிய தெளிவு இருந்தது. அதை எப்படி உபயோகித்துத் தன் புகழை, தான் விரும்புவதைச் சாதித்துக்கொள்ளலாம் என்ற தெளிவு இருந்தது. இதன் விளைவாகத் தன் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொண்டு பதவியில் இருக்க முடிகிறதே தவிர தமிழ்நாட்டுக்கு—தமிழ்நாட்டின் நிகழ்காலத்துக்கோ, வருங்காலத்துக்கோ—ஏதும் நன்மை தருவதாய் அவர் ஆட்சி அமையவில்லை.

எஸ்.டி.எஸ். தமது பலம் எது, எங்கிருக்கிறது என்பதை உணராமல் அரசியலில் புதுக்கட்சி துவங்கினார் என்று சொல்வது தவறாகுமா? எல்லோருக்கும் தெரிந்த பெரிய மனிதர்கள் எதைத் தங்கள் லட்சியம் என்று பேசுகிறார்கள் என்பதையும் அந்த லட்சியத்தை அடைவதற்கு அவர்களுக்குள்ள திறமைகளையும், இரண்டையும் இணைக்க அவர்கள் உருவாக்கும் திட்டங்களையும், மூன்றாம் மனிதராக நின்று ஆராயுங்கள். வெற்றி பெற்றவர்களையும் தோல்வியடைந்தவர்களையும் எடுத்துக் கொண்டு ஆராயுங்கள். இது ஒரு நல்ல பயிற்சி. ஒரு தாளில் எழுதிப்பாருங்கள். பின்னால் நம்மைப் பற்றியும் ஒரு மூன்றாம் மனிதனாக நின்று ஆராய இது வழி காட்டும்.

எம்.ஜி.ஆரைப் பற்றியோ, எஸ்.டி.எஸ் பற்றியோ நான் காணும் முடிவுகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம்; ஏற்காமல் போகலாம். அது அல்ல முக்கியம். நம் திறமைகளுக்கேற்ற லட்சியத்தில் இறங்கவேண்டும் என்பதும் அல்லது நமது லட்சியத்திற்கேற்ப திறமைகளை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதும் இவற்றிலிருந்து புரியும்.

தங்களது திறமைகளையும், ஆர்வங்களையும் புரிந்து கொள்ளாமல் வழக்கறிஞர்களாக இருக்க வேண்டியவர்கள் வியாபாரிகளாகவும், போலீஸ் அதிகாரிகளாக இருக்க வேண்டியவர்கள் மருத்துவர்களாகவும், பகல் கொள்ளைக்காரர்களாக இருக்கவேண்டியவர்கள் அரசியல்வாதிகளாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். சுட்டுப் போட்டாலும் கணக்கு வராதவர்கள், அக்கவுண்டண்டாகப் போனால் எப்படி? ஒரு "பெண் யாருக்காவது தலையை நீட்டி, குழந்தை குட்டிகளைப் பெற்றுக் கொண்டு வாழவேண்டும்" என்று நினைக்க எப்படிப் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறாளோ, அதுபோல் ஏதாவது ஒரு வேலை பார்த்துப் பிழைப்பு நடத்தவேண்டும் என்று பெரும்பாலோர் சிந்திக்கவும், செயல்படவும், வாழ்க்கை நடத்தவும் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறோம். பள்ளங் கண்ட இடத்தில் ஓடும் தண்ணீர்போல் நடந்துகொள்ளும் இப் பழக்கம் நமது சிந்தனைச் சிறகுகளை ஒடித்துவிட்டிருக்கிறது.

எங்கள் ஊர் ராமசாமிக்கு ஓர் அண்ணன் இருந்தான்; கோவிந்தசாமி என்று பெயர். கோவிந்தசாமி பெரிய விளையாட்டு வீரன்; பெரிய உடல்வாகு—அதற்கேற்ற பயிற்சி—அதில் ஈடுபடும் ஆர்வம்.

ராமசாமிக்கோ தானும் அண்ணனைப்போல் பெரிய விளையாட்டு வீரனாய் வரவேண்டுமென்ற ஆசை. ஆனால் அதற்கேற்ற உடல் ஆகிருதி இல்லை. அண்ணனைப்போல் பயிற்சி செய்யப் போதுமான நேரமும் கிடைக்கவில்லை. ஆகவே ஒவ்வொரு விளையாட்டுக் கும்பலிலும் முயன்று பார்த்துத் தோற்றுக் கொண்டிருந்தான். "அண்ணன் வழியில் செல்ல—தான் ஒரு கோவிந்தசாமி அல்ல!" என்று புலப்பட ராமசாமிக்குக் கொஞ்ச காலமாயிற்று. ராமசாமிக்குப் படிப்பில் ஆர்வம், நன்கு படித்தான், பேராசிரியரானான். பாடம்: 'அண்ணன் வழியில் செல்ல முயலாதீர்கள்! அப்பன் வெட்டிய கிணறு என்று உப்புத் தண்ணீரைக் குடிக்காதீர்கள்!'

நாம் எதில் திறமை கொண்டிருக்கிறோம் என்பது, சில சமயம் பிறரால் பாராட்டப்படும்போது தான் நமக்கே புரிகிறது. நமது பள்ளிக்கூடங்களில் எதைதைத் தப்பாய்ச் செய்திருக்கிறோம் என்று திருத்துகிறார்களே ஒழிய, நாம் நல்லதாய்ச் செய்ததற்காக அதிகம் பாராட்டப்படுவதில்லை. விளைவு: பள்ளிப்படிப்பு நமக்கு வழிகாட்டுவதற்குப் பதிலாக, நமது குறைபாடுகளைப் பெரிதாக்கிக் காட்டுவதையே தலையாய கடமையாகக் கொண்டிருக்கிறது. நமது வாழ்க்கை எப்படி சிறக்கும்?

சிலசமயம் நாம் நாமாக இருக்கப் பயப்படுகிறோமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இரண்டு அங்குலம் உயரம் குறைவாக இருப்பதனால் நீங்கள் போலீசில் சேர முடியாமல் போகலாம். ஆனால் அதனால் நம் உலகம் இருண்டு போய்விடப் போவதில்லை என்ற மனோபாவம் ஏற்படவேண்டும். "நான் உளறிக் கொட்டினேன்!"

என்று தன்னைத் தானே திட்டிக்கொள்ளும் மனோபாவத்தை மாற்றி "எனக்குப் பேசும் திறமை இருக்கிறது; அதைச் சரிவரப் பயன்படுத்துவேன்" என்று சிந்திக்க நாம் பழகுவது நல்லது.

தமிழ்நாட்டில் சினிமாத்துறையில் ஈடுபட விரும்புகிறவர்களும், அரசியலில் ஆதாயம் தேட முனைபவர்களும் அதிகம் இருக்கிறார்கள் என்றால், காரணம், அதில் மட்டுமே அதிகத் திறமைகொண்ட மக்களைத் தமிழ்நாடு பெற்றெடுத்துவிட்டது என்று அர்த்தமல்ல. மக்கள்முன். இந்த இரு துறைகளும் தான் எல்லோருக்கும் தெரியும் படியும் புரியும்படியும் செய்யப்பட்டிக்கிறது. பண வசூல் செய்பவர்களது சொர்க்க பூமியாக இத் துறைகள் பொது மக்களால் கணிக்கப்படுகிறது. இந்தத் துறைகளில் உள்ளவர்கள் எத்தனையோ பேர், தொழிலிலோ, விஞ்ஞானத் துறைகளிலோ புகுந்திருந்தால் அங்கும் பிரகாசித்திருக்க முடியும், இன்னும் எவ்வளவோ பயன் தரத்தக்க, நிறைவு தரத்தக்க, சவால்களைச் சமாளித்திருக்க முடியும். மக்கள் தங்கள் திறமைகளைப் பூரணமாக உணராமைதான் ஓரிரு துறைகளில் மட்டும் கூட்டம் சேரக் காரணம். மற்றொரு காரணம் 'சாயுற பக்கமே சாயுற' செம்மறியாட்டுப் புத்தி.

ஏராளமான பேர் இன்று புதுக்கவிதை எழுதுவதைக் காண்கிறேன். வரவேற்போம்; ஆக்கசக்தி பொங்கிப் பிரவகிக்கட்டும்! ஆனால் உங்களது பிற திறமைகளையும் கண்டுபிடியுங்கள், வெளிக்கொணர முயலுங்கள் என்று தான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதே நோக்கில் அமெரிக்காவைப் பார்த்தால், சொந்தத் தொழில் செய்து பிழைப்பவர்களையும் பணக்காரரானவர்களையும்தான் அதிகம் காணலாம்— மற்றெல்லா நாடுகளையும்விட 42 சதவிகித மாணவர்கள் எடுத்துக்கொள்ளும் பாடம் தொழில், வியாபாரம் சம்பந்தமான படிப்புத்தான். அமெரிக்கா ஏன் பணக்கார நாடாயிருக்கிறது என்பதற்கு நாம் மிகப்பெரிய ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை.

நமது ஆர்வங்களை நாமே தட்டி எழுப்பவேண்டும். "எங்கே நமது ஆர்வம் இருக்கிறதோ, அங்கே நமக்குத் திறமை இருக்கிறது. அந்தத் திறமை இருப்பதனால் தான் அந்த ஆர்வமே எழுந்தது" என்று நெப்போலியன் ஹில், ஜேம்ஸ் ஆலன் போன்றோர் கூறுகிறார்கள்.

தறி நூல் விற்பவராக வாழ்வைத் துவங்கிய வட இந்தியத் தொழிலதிபர் அம்பாணியைப் பாருங்கள். எத்தகைய தொழில் அதிபராக உலகின் கவனத்தை ஈர்க்கிறார் என்பதைக் கவனியுங்கள். இந்தியாவில் எத்தனையோ அம்பாணிகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் திறமையைப் புரிந்துகொண்டார்கள். தங்கள் ஆர்வத்தை அறிந்துகொண்டார்கள். அதன் பின்னால் போனார்கள். 'பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், கருமமே கண்ணாயினார்' என்பதுபோல.

இந்த லட்சிய தரிசனத்தை வேறு பலர் காண முடியாமல் எது மறைக்கிறது? மூடநம்பிக்கை, பயம், அவநம்பிக்கை என்ற கறுப்புக் கண்ணாடி.

இன்றைய வாழ்வு நிலைபற்றி நாம் நொந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. நமக்கு இருக்கும்

எல்லைக் கோடுகளைப் பற்றி வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. எல்லைகள், வரையறைகள்—நமது படிப்பு, நாம் வாழும் இடம், வயது எல்லாம் ஓரளவு தான் மனிதனைக் கட்டுப்படுத்தும். அதற்குள்ளும் மனிதன் சுதந்திரமாகச் செயல்பட முடியும். அந்தச் சுதந்திர மனம் எல்லைகளைத் தாண்டிப் பறக்க முடியும்.

நாம் ஒவ்வொருவரும் ஒரு காரணத்திற்காகச் சில திறமைகளுடன் படைக்கப்பட்டிருக்கிறோம். நமது திறமைகள் நமக்கும் நாட்டுக்கும் தேவைப்படுகின்றன.

5. "காலம் மாறிப் போச்சு!"

முதன்முறையாக எனது உறவினர் வீட்டிற்கு ரேடியோ வந்தது. ரேடியோவைத் திருப்பினார்கள். இசை வந்தது. வீட்டுச் சிறுவனை இசை எங்கேயிருந்து வருகிறதென்று கேட்டார்கள்.

"மாமா உள்ளே ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்!" என்றான்.

உடனே வேறு ஒரு ஸ்டேஷனைப் போட்டார்கள். கீச்சுக்குரலில் பேச்சு வந்தது. சிறுவன் சொன்னான்: "மாமா, குரலை மாற்றிக்கொண்டு பேசுகிறார்கள்!"

மனித மனம் எந்தப் புதிய விஷயத்தையும் தனக்குத் தெரிந்த அளவிலேயே நின்று பரிசீலிக்கிறது! தனது சொந்த அனுபவத்தை முன்வைத்து எதையும் எடை போடுகிறது.

நியூயார்க் நகருக்குச் சமீபத்தில் ஓர் அரசியல் கட்சிப் பிரமுகர் வந்தபோது, நியூயார்க் தமிழர் ஒருவர் மிகவும் ஆதங்கத்துடன் கூறினார்:

"மற்றெல்லா நாடுகளையும் பார்க்கும்போது, தமிழ்நாடு கற்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறது என்ற பயம் ஏற்படுகிறது!"

உடனே அந்த அரசியல் தலைவர் தம் கடிகாரத்தை சரி செய்தவாறு, மூக்கைத் துடைத்தவாறு கூறினார்: "நமது ஊரில் பல சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு இப்போது லைசென்ஸ் கொடுத்திருக்கிறோமே!"

எல்லோரும் 'குபுக்'கென்று சிரித்துவிட்டார்கள்!

பிறநாட்டு நடப்புக்களைப் புரிந்துகொள்ளாமல், தனக்கு எட்டிய அளவிலே காரியம் செய்துகொண்டு போகும் ஒரு கிராம நாட்டாண்மை மனோபாவத்தைக் கண்டு இரக்கப்படுவதா அல்லது சிரிப்பதா...? சிரிப்பது உடம்புக்கு நல்லது.

இந்த உலகம் முன்புபோல் இல்லை. வெகுவேகமாக மாறிவருகிறது. அதை உணர்ந்து அதற்கு ஈடு கொடுக்க நாம் கற்றுக்கொள்ளாவிட்டால் அது நம்மை விட்டு விட்டு நம்மைப் பழங்குடி மக்களாக்கிவிட்டுப் போய் விடும். இன்று உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில், ஒன்றை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். மனித மனத்தின் மனித மூளையின் அபிவிருத்தியில்தான் எதிர்காலம் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்து செயல் படுகிறார்கள்.

நாடு இன்றிருக்கும் நிலை, நேற்றைய ஓட்டங்களின் விளைவு, நாட்டின் நாளைய நிலை, நாம் இன்றெடுக்கும் முடிவுகளையும் செயல்களையும் பொறுத்திருக்கிறது. பழங்காலம் போல, நாம் 'நடப்பது நடக்கட்டும்' என்று அசமந்தமாக உட்கார்ந்திருக்கமுடியாது.

உலகில் மாறுதல்கள் நிகழ்ந்தவண்ணம் இருக் கின்றன. மாறுதல்கள் மூலம்தான் வளர்ச்சியும் முன்னேற்றமும் நிகழ்கின்றன. மாற்றங்களை எப்படி நாம் பயன்படுத்துவது?

உலகில் நடக்கும் சம்பவங்கள் செல்லும் திசையை நாம் கணிக்கத் தெரிந்திருக்க வேண்டும். நம்மை மாறுதல்களுக்குத் தயார் செய்துகொள்ள வேண்டும். நம்மிடமுள்ள தாதுப்பொருட்கள் என்ன, விளை

பொருட்கள் என்ன, கச்சாப்பொருட்கள் என்ன, நமது திறமைகள் என்ன என்று நமது வலிமைகளைப் பயன் படுத்த நாம் முன்வரவேண்டும்.

சினிமா முதல் கம்ப்யூட்டர்வரை கூட்டுக்குடும்பம் முதல் தனிக்குடித்தனம் வரை எப்படியெல்லாம் கடந்த ஐம்பது ஆண்டுகளில் நமது வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று எண்ணிப்பாருங்கள்; பட்டிய லிடுங்கள்; பிரமிப்பாக இருக்கும்.

"மாறுதல்கள் வெகு வேகமாக நிகழ்கின்றன, நம்மைச்சுற்றி. அவற்றை உணர்ந்து அதைப் புரிந்து கொண்டு அதற்கு ஈடு கொடுத்து, வாழக் கற்றுக் கொள்ளாவிட்டால் நாம் பின்தங்கிவிடுவோம்" என்ற கருத்து தொனிக்கக் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஆல்வின் டாப்ளர் என்ற ஓர் எழுத்தாளர் எழுதி வருகிறார்; பேசி வருகிறார்.

தொழில் அதிபர்கள் இந்த மாறுதல்களைப் புரிந்து கொண்டால்தான் மாறிவரும் தேவைகளுக்கேற்ப புதிய பொருட்களை உற்பத்திசெய்ய முடியும். தனிமனிதர்கள் இதைப் புரிந்துகொண்டால்தான், மாறுதல்களுக்குத் தங்களைத் தயார் செய்துகொள்ள முடியும்.

டாப்ளர் தான் சமீபத்தில் எழுதிய புத்தகத்தில் (Third Wave) மனித சரித்திரத்தை மொத்தமாகப் பார்க் கிறார். இன்றுவரை மனித சரித்திரம் மூன்றுவகையான, மகத்தான மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது என்று எழுதுகிறார்.

என்ன அந்த மூன்றுவகை மாற்றங்கள்?

மனித வாழ்வு துவங்கியதிலிருந்து சுமார் 1800 வரை மனித சமுதாயம் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்தது. கிராமத்தில் வாழ்ந்தார்கள். சிறுசிறு கூட்டமாக அதே ஊரில் வாழ்ந்தார்கள். தங்கள் தேவைகளை—அரிசி, பால், விறகு, வீடு, துணி என்று அவற்றைத் தாங்களே தயார் செய்து கொண்டார்கள். பண்டமாற்றின் மூலம் தங்களது பிற தேவைகளை—மருந்து, படிப்பு—போன்ற வற்றைத் தீர்த்துக்கொண்டார்கள். மனிதர்கள் பெரும்பாலும் உடல் உழைப்பையே நம்பி வாழ்ந் தார்கள்.

1800—லிருந்து 1925வரை ஒரு தொழில் புரட்சி நடந்தது. இது இரண்டாவது நிலை. யந்திரங்கள் தோன்றின. துப்பாக்கி, அறுவடை செய்யும் மிஷின், பஞ்சைப் பிரித்தெடுக்கும் யந்திரம் என யந்திரங் கள் தோன்றின. 1896—ல் கார் வந்தது. இரும்பு ரப்பர், பெட்ரோலியம் போன்ற பொருட்களை மக்கள் உபயோகிக்கக் கற்றுக்கொண்டனர். தொழில் சாம்ராஜ்யங்கள் உருவாகின. நகரங்கள் தோன்றின. பாங்கு? இன்ஷ்யூரன்ஸ் போன்ற புதிய நிறுவனங் கள் தோன்றின. வெற்றியும் பணமும் அதிக செல்வாக்கைப் பெற்றன. தொழிலதிபனும் அரசியல் தலைவனும் முக்கியத்துவம் பெற்றார்கள்.

1925—லிருந்து இன்றுவரை ஒரு புதிய மூன்றாவது நிலை உருவாகி வருகிறது. ஒரு பாதுகாப்பற்ற உணர்வு முன்னைவிட மக்களிடம் அதிகம் வளர்ந் திருக்கிறது. வேலை நிரந்தரமல்ல என்ற உணர்வு. மக்களது மாறி வரும் தேவைகளால், தொழில் சாசுவதமல்ல என்ற உணர்வு. ஏவுகணைகளை

யும், அணுகுண்டுகளையும் எண்ணும்போது வாழ்வு—குடும்பம்—சாசுவதமல்ல என்ற உணர்வு.

செல்வாக்கில் இடமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் தலைவனுக்குப் பதில் 'மக்கள் சக்தி' அதிகம் மேவி நிற்கிறது. தொழில் அதிபர்களுக்குப் பதில் தொழில் நிர்வாகிகள் வந்துவிட்டார்கள், புதிய பொருட்களான கம்ப்யூட்டரும், குரோமோசோமை மாற்றி அமைக்கும் மருந்துகளும் வந்து கொண்டிருக்கின்றன. பெட்ரோலிய எண்ணெய் விரைவில் தீர்ந்து போய்விடும் நிலையில் நிரந்தரமாகக் கிடைக்கும் சூரிய சக்தியையும், கடல் அலைகளையும் காற்றையும் உபயோகிக்க மனிதன் முயன்று கொண்டிருக்கிறான். நாட்பட்டுப் பயன்படும் பொருள்கள் போய், தூக்கி எறியும் பொருள்கள் மிகுந்துவிட்டன. அதாவது சவரக் கத்திபோய் ரேஸர் பிளேடுகள் வந்துவிட்டன.

உலகம் அமெரிக்காவாலும் ரஷ்யாவாலும் தீர்மானிக்கப் படுகிறது என்ற நிலை மாறி உலக செல்வாக்கு ஜப்பானாலும், சவூதி அரேபியாவாலும், தாய்வானாலும், தென்கொரியாவாலும் நிர்ணயிக்கப் படுகிறது. மனிதர்கள் செய்கிற வேலையைக் கார் தயாரிக்குமிடங்களில் அமெரிக்காவிலும், ஜப்பானிலும் மனித யந்திரங்கள் (Robots) செய்கின்றன.

வீடு, வசதி என்ற கவலைகள் நீங்கிய மனிதன் ஆத்ம திருப்திதான் அவசியம் என்று பேசுகிறான். சம்பத்திய சர்வேயில் மக்கள் இந்த ஆத்ம நிறைவுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தெரிய

வருகிறது. அமெரிக்காவில் வளர்ந்து வரும் யோக சாதன நிலையங்களும், நமது இந்தியச் சாமியார் களது மடங்களின் வளர்ச்சியும் செல்வாக்கும் இதைக் கோடி காட்டுகின்றன.

ஜோன்ஸ் சாக் என்ற நோபெல் பரிசி பெற்ற விஞ்ஞானி கூறுகிறார் : 'மனிதமனம்...அதன் சக்தி— இன்னும் கண்டுபிடிக்கப்படாத விஷயமாக இருக்கிறது!''

மனித வாழ்வில், இனி மனிதர்கள், மனித உறவு களைப்பற்றி அதிகம் அக்கறை எடுத்துக்கொள்வார்கள் என்றும், சமாதானமாக வாழ வழி காண்பார்கள் என்றும் அறிஞர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். இன்றிருக்கும் ஏவுகணைகளையும் அணுகுண்டுகளை யும் வைத்துக்கொண்டு பதினெட்டே நிமிஷங்களில் உலகை பஸ்பமாக்கிவிடலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆகவே செய்திப் பரிமாற்றம், கருத்துப் பரிமாற்றம் மனம்விட்டு உண்மைகளைப் பரஸ்பரம் தெரிவித்துக்கொண்டு சேர்ந்து வாழ்தல்—இவை அதிக முக்கியம் பெற்றாக வேண்டும்.

உலகத்தோடு ஒட்டி ஒழுகல்தான் வாழ்க்கை. ஆகவே இந்த உலகம் எப்படி இயங்குகிறது எப்படி மாறிவருகிறது என்பதை நாம் புரிந்துகொண்டால் தான் நம் வாழ்வை அதற்கேற்பச் சரி செய்துகொண்டு ஈடுகொடுத்து வாழமுடியும். நாம் எல்லோரும் அதில் கவனம் செலுத்தினோமானால்தான் நமது நாடும் நமது சமுதாயமும் ஜீவனுடன் அடுத்த தலைமுறையைச் சந்திக்க இயலும்.

6. மாறுவதற்குத் துணிவு உண்டா நம்மிடம்?

மாற விரும்பாதவர்கள் 'எல்லாம் விதி, எல்லாம் தலையெழுத்து, அதன்படிதான் நடக்கும்' என்று விதியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டுப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள், பொறுப்பைத் தட்டிக் கழிப்பதில் சுகம் இருக்கிறது!

மற்றும் சிலர், "எங்க அப்பா இப்படி, எங்க தாத்தா இப்படி, இதெல்லாம் பாரம்பரிய விஷயம். என்னால் எப்படி வேறுவிதமாக நடந்துகொள்ள முடியும்?" என்று பாரம்பரியத்தின்மீது, ஜீன்கள் குரோமோசோம்கள் மீது பழியைப் போடுகின்றனர். நாம், இங்கே விதிக்குப் பதில், வேறு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து விட்டோம்! சந்தோஷப்படலாம்!

மற்றும் சிலர் மனவியல் அறிஞர் பிராய்டைத் துணைக்கு அழைப்பார்கள். ஏனெனில் இளமையில்—ஆறு வயதுவரை—நாம் எப்படிப் பழக்கப்படுத்தி வளர்க்கப்பட்டோம் — பயமுறுத்தப்பட்டோம் — என்பதைப் பொறுத்துத்தான் நமது அணுகுமுறையும் வாழ்க்கை முறையும் அமைகிறது என்று பிராய்டு கூறி இருக்கிறார்.

சமுதாயவாதிகளையும், வழக்கறிஞர்களையும் கேட்கும்போது, "வளர்ந்த சூழ்நிலையில் அவன் பாதிக்கப்பட்டான்! திருடனானான்! கொலை

காரணானார்! சமுதாய விரோதி ஆனான்! அந்தச் சமுதாயத்தைக் குற்றக் கூண்டில் ஏற்றுங்கள்!' என்று உணர்ச்சிப் பிரசங்கம் செய்வதுண்டு.

விதி, சூழ்நிலை, பாரம்பரியம், வளர்க்கப்பட்ட விதம் என்பனவற்றின் முத்திரைகள் நம் வாழ்வில் விழத்தான் விழுகின்றன.

வாழ்வு ஒரு சீட்டு விளையாட்டுப்போல. நமது சீட்டுக்களை நாம் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. அதே போல் நமது அப்பா, அம்மாவை, நாம் பிறந்த ஊரை, நாம் வளர்க்கப்பட்ட விதத்தை, எதிர்பாராது ஏற்படும் சம்பவங்களை நம்மால் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. கட்டுப்படுத்த முடிவதில்லை. நம் கையில் சில சீட்டுக்கள் வந்திருக்கின்றன. இவைதானே வந்திருக்கின்றன என்று நொந்து கொள்ளாமல்—அலுத்துக்கொள்ளாமல்—இருப்பதை வைத்துச் சிறப்பாக விளையாடும் திறமை தான் வாழ்க்கை.

இங்கிலாந்தின் ராஜ குடும்பத்தில் பிறந்திருந்தால் நீங்கள் ஒருவேளை ராணியை மணந்திருக்கக் கூடும். நேருவின் பாரம்பரியத்தில் பிறந்திருந்தால் ஒருவேளை உங்களுக்குப் பிரதமராகும் வாய்ப்பு அதிகம் இருந் திருக்கலாம். இந்த வாய்ப்புக்கள் ஏதும் இன்றி, எங்கோ பிறந்த லால்பகதூர் சாஸ்திரியையும், காமராஜரையும் நடிகர் ரேகனையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். குறைபடுவதில் அர்த்தமில்லை. இருப்பதை வைத்துக் கொண்டு நம்மை வளர்த்துக் கொள்வதில், உயர்த்திக் கொள்வதில், நம்மை உயர் பதவிக்குத் தகுதி உள்ளவ னாக மாற்றிக் கொள்வதில்தான் திறமை இருக்கிறது.

சைபீரியாவில் கடுங்குளிரில் சிறை வைக்கப்பட்டிருந்தனர் அந்தக் கைதிகள். தினந்தோறும் காலையில் எழுந்து குளிரில் பல மைல் நடந்து போக வேண்டும். கல் உடைக்க. போதுமான உணவு தரப்படுவதில்லை. ஆகவே, அடிக்கடி தளர்ந்து போனார்கள். சிறை அதிகாரிகளின் கெடுபிடியும் மிருகத்தனமும் வேறு, ஆனால், அந்தக் கைதிகள் இந்த நிலையிலும் பல சுதந்திரங்களைத் தாங்களே கண்டுபிடித்தார்கள். கைக்கொண்டார்கள்,

நடக்கின்ற பாதைகளில் கிடந்த பலநிறக் கற்களை எடுத்து, அவற்றை மாணிக்கக் கற்களாக எண்ணி மகிழ்ந்தார்கள். நடக்கும் வழியின் சிரமத்தைக் குறைக்கப் பாடினார்கள். வேலையின் கடுமையைக் குறைக்க, 'யார், வேலை அதிகம் செய்கிறார்கள்' என்ற போட்டியை ஏற்படுத்திக் கொண்டார்கள். திரும்பி வரும்போது நடக்க முடியாமல் தள்ளாடுபவர்களை, மற்றவர்கள்' தோளில் சுமந்து உதவினார்கள். கைதிகள் தான் அவர்கள்! ஆனால் மனித மனம் சிறைப்படவில்லை அங்கே!

மனமாற்றங்கள் தான்—நமது அணுகுமுறைதான்—நமது மனமகிழ்வுக்கும் நிறைவுக்கும் காரணமாகிறது. நாம் செய்யும் புறச் செயல்கள்—காரியங்கள் தான் நமது அகமாற்றங்களுக்கு வித்தாகிறது.

வாழ்வைப் பற்றி ஆதியோடந்தமாக ஆராய்ந்த அறிஞர்கள் முக்கியமான இரண்டு விஷயங்களை நம் கவனத்திற்கு வைக்கிறார்கள். அவை யாவை?

வாழ்வில் எது முக்கியம் என்ற தெளிவு;

அதை அடைய எது நம்மைத் தடுக்கிறது என்ற அறிவு.

இன்றிருக்கிறபடியே இருந்து வாழ்நாளைக் கழித்து விடுவேன் என்று எண்ணி இருப்பீர்களானால் நீங்கள் இந்தக் கட்டுரைத் தொடரைப் படிக்கத் துவங்கி இருக்க மாட்டீர்கள். ஒரு ஜீவனின் அடிப்படை இயல்புகளை ஆராய்ந்த அறிஞர்கள், "ஜீவனுக்கு வாழும் துடிப்பு, வளரும் ஆசை, தெரிந்துகொள்ளும் ஆர்வம், தன் எல்லாத் திறமைகளையும் உபயோகித்து வாழும் முயற்சி ஆகியவை அடிப்படையிலேயே இருக்கிறது" என்று எழுதுகிறார்கள்.

ஆகவே, அந்த ஜீவ இயல்பை எதிர்த்துப் போராடுவதைப் போன்ற முட்டாள்தனம் வேறேதுமில்லை. அதே போல் ஜீவ இயல்பை உணர்ந்து, அத்துடன் ஒத்துழைத்து. வாழ்வாங்கு வாழும் புத்திசாலித்தனம் போல் வேறேதுமில்லை.

மாற்றங்களை வரவேற்பதிலும், மாற்றங்களுக்கு நம்மைத் தயார் செய்து கொள்வதிலும்தான் பரிணாம வளர்ச்சி இருக்கிறது. எது தகுதி உள்ளதோ, எது புதிய சூழ்நிலைகளைச் சமாளிக்கிறதோ—அதுதான் வாழ்கிறது என்பது டார்வினின் பரிணாம வளர்ச்சித் தத்துவம். 'டைனசோர்' என்ற மிருகம் மிகப் பெரிதாக இருந்த போதிலும் புதிய சூழ்நிலைகளைச் சமாளிக்கும் திறமை இன்மையால், காலச் சுவடுகளால் அழிக்கப்பட்டு விட்டது. இதற்கு மறுபுறமாகக் கற்கால மனிதனுடன் இன்று வாழும் மனிதனை ஒப்பிடும்போது, இன்று வாழும் மனிதன் எப்படி ஜீவத் துடிப்புடன் வேகமாக வளர்ந்து முன்னேறி இருக்கிறான் என்பதை நாம் உணரலாம்.

நாம் புதிய மனிதனாக, வேறு வகைக் குணங் களுடன் வாழவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? நாம் விரும்பும் மாறுதல்கள் நமது உள் மனத்திலிருந்து புறப்படவேண்டும். அந்தப் புது குணங்கள் நமது ஆத்மா வின் அந்தரங்க அபிலாஷைகளாக மாறவேண்டும்,

நம்மிடமெல்லாம் எப்போதாவது ஒரு முறை மிகுந்த பரோபகாரக் குணம் தோன்றுகிறது. என்றோ ஒருநாள் மன்னிக்கும் மனோபாவம் வெளிப்படுகிறது. எப்போதாவது பாரபட்சமற்று விஷயங்களைப் பரிசீலிக் கிறோம். அதாவது நாம் எல்லோரும் எப்போதாவது ஒரு முறை காந்தி ஆகிறோம். மகாத்மா காந்தியோ திரும்பத் திரும்ப, தினந்தோறும் காந்தி ஆகிக்கொண் டிருந்தார். அப்போதுதான் நிரந்தர மாறுதல் ஏற்படு கிறது. அப்படி நிரந்தர மாறுதல் நம்மிடம் ஏற்படும் வரை நாம் விடாமுயற்சியுடன் முயன்றுகொண்டே இருக்கவேண்டும்.

பலருக்கு . ஏற்பட்ட அனுபவங்கள் ஆழப் பதிந்து அவர்களது வாழ்வை 180 டிகிரி அளவில் தலைகீழாக மாற்றி இருக்கின்றன. அருணகிரிநாதருக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அதனால் விளைந்த மகத்தான மாற்றத்தையும் எண்ணிப்பாருங்கள். வயோதிகமும், பிணியும், சாவும் சித்தார்த்தன் வாழ்வில் விளைவித்த சிந்தனை மாற்றங்களையும் துறவையும் எண்ணிப் பாருங்கள். கலிங்கப்போரும், யுத்த களமும், போர் வீரர் களின் சாவுக் குரலும் அசோகரை எப்படி மாற்றியது என்று எண்ணிப்பாருங்கள். பைபிளில் எலைஜா மகம்மது என்று ஒரு மனிதர் பெரிய திருடனாக

வாழ்வைத் துவங்குகிறார். சமுதாய அநீதிகளை எதிர்ப்பதற்காகவே இப்படி ஒரு ராபின் ஹூடாக இவர் மாறுகிறார். ரோம் நாட்டில் செல்வந்தர் வீட்டில் பிறந்த அசிசி என்ற இளைஞர் ஏழைத் துறவியாக ஒரு ஞானியாக வாழ்வை முடிக்கிறார்.

நாமும் மாறத் தயாராவோம். இன்று நம்மிடமுள்ள மோசமான இயல்புகளை உதிர்த்து, இன்றுள்ளதை விட ஒருபடி மேலான நிலைக்கு உயரும் வகையில் மாறுவோம். அந்த மாற்றம் பொருளாதார ரீதியில்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை. மனத்தளவில் நம்மை உயர்த்தினாலும் வரவேற்க வேண்டியதே. மனம் உயர்ந்தால் தன்னால் வாழ்க்கையும் வளமுறும்.

7. வாழ்வு ஓர் இயக்கம்; மாற்றம் ஒரு தூண்டுகோல்!

மாறுதல்களைக் கண்டு மனிதன் ஏன் பயப்படு கிறான்? மாற்றங்கள் நம் வாழ்வில் என்ன கொண்டு வருமோ என்ற பயம். இந்தப் பயம் நம்மை முடக்கி விடுகிறது. பயத்தில், இயல்பான பயம், இயல்பில்லாத பயம் என்று இரண்டு வகை உண்டு. அதைத்தான் 'அஞ்சுவதஞ்சாமை பேதமை. அஞ்சுவது அஞ்சலறிவார் தொழில்' என்றார் வள்ளுவர். புயல் வரப்போகிறது என்று வானொலி அறிவிக்கும்போது நாம் பயணத்தை மேற்கொள்வது பற்றி அஞ்சத்தான் வேண்டும். இது நியாயமான பயம். மாறாக, தினந்தோறும் பஸ்ஸில் ஆபீசிற்குப் போகிறோமே, பஸ்ஸுக்கு விபத்து நேர்ந்தால், என்ன செய்வது என்றெண்ணிப் பயப்படுவது அர்த்தமில்லாத பயம்!

'எனக்கு அதைப் பற்றிய பயம்' என்று வெளியே சொன்னால், எங்கே நம்மைப் பிறர் 'பயந்தாங்குளி' என்று எண்ணிவிடுவார்களோ என்று நினைத்து நமது பயத்தை மறைத்து நாம் பேசுகிறோம்; நடந்துகொள் கிறோம். இப்படி மறைத்துப் பேசுவதே தொழிலானால் 'எதைப் பற்றிப் பயந்தோம்? எது நம்மை உண்மையில் ஆட்டிப் படைக்கிறது?' என்ற அடிப்படையே நமக்குப் புரியாமல் போய்விடுகிறது. எப்போது பயத்தின் அடிப்படை நமக்குப் புரியவில்லையோ அப்போது அதைக் கட்டுப்படுத்தும் வழிகளும் நமக்குப் புலப்படுவ தில்லை.

மரணத்தைப் பற்றிச் சற்று நேரம் எண்ணிப்பாருங்கள். அடிமனத்தில் இலேசான பயம் எட்டிப் பாராமல் இருக்காது. கவலைகள் ஆட்கொள்ளாது போகாது. ஆயினும் அன்றாடம் நாம் மரண பயத்தை எப்படிச் சமாளிக்கிறோம்? அதை மறப்பதன் மூலம்; அதைப்பற்றி அதிகம் சிந்திக்காததன் மூலம்; அதை ஏற்றுக்கொள்ளாததன் மூலம். அதைக் 'கண்டு கொள்ளாமல்' இருப்பதன் மூலம். அதேபோல் மாற்றங்களைப் பற்றியும் பயப்படாதிருக்கப் பழகுங்கள். மாற்றங்கள் வளர்ச்சியின் தேவைகள் என்பதை உணர்ந்து அவசியமான மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

நாம் மாற விரும்பாததற்கு மற்றொரு காரணம் விரக்தி மனோநிலை. வாழ்வில் ஏதும் அர்த்தமில்லை என்ற உணர்வு. "எது செய்து என்ன பயன் கண்டோம்?" "என்ன எழுதி என்ன சாதித்தேன்?" "ஏன் வாழ்கிறேன்? இதில் அர்த்தமில்லை!" என்பது போன்ற எண்ணங்கள் பலரிடம் மேவி நிற்கிறது. "ஈ, எறும்பு, புழு போன்றது மனித வாழ்க்கை. இதிலே ஆசைகள் என்ன? சபலங்கள் என்ன? லட்சியங்கள் என்ன?" என்று இவர்கள் அலுத்துக் கொள்கிறார்கள்.

'நாம் இருப்பது இவ்வுலகம். இதில் மனிதத்தொடர்பு கொண்டு குடும்பமாக, சமுதாயமாக வாழ்கிறோம், நமக்குக் கடமை இருக்கிறது, ஆத்மாவுக்குத் தாகம் இருக்கிறது' என்று சிந்தித்துப் பார்க்கும்போது விரக்தி மனோநிலை அகலும்.

வாழ்வு நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போது நமக்கு 'ராஜா' போன்ற நினைவும் நிறைவும் ஏற்படு கிறது. வாழ்க்கையைத் தமது விருப்பத்துக்கு ஏற்ப நிர்வகித்து வெற்றி கண்டவர்கள் 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்று தத்துவம் பேசமாட்டார்கள். ஆனால் 'விஷயங்கள் நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை' என்ற நிலை ஏற்படுமானால், "போனால் போகட்டும் போடா! வந்தது தெரியும், போவது எங்கே? வாழ்க்கை நமக்கே தெரியாது!" என்று தத்துவம் பேசுவார்கள். இப்படி தத்துவம் பேசுபவர்களிடம் தன்னம்பிக்கை இருப்ப தில்லை. சுயகௌரவம் போய்விட்ட உணர்வால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சுய பச்சாத்தாபம் இவர்களை ஆட்கொள்கிறது. வாழ்வில் பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஒன்றுபோனால் இன்னொன்று என்ற சிந்தனைக்கே இவர்கள் போவதில்லை. இதனால் வாய்ப் புக்கள் இருந்தும் இவர்களுக்குத் தெரிவதில்லை. அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதில்லை.

நமது லட்சியத்தில் நமக்கு ஆர்வம் இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் அதற்காக உழைக்கவும் மாற்றங்களையும் தியாகங்களையும் ஏற்கவும் முன் வருவ தில்லை. எனவே லட்சியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு, கடமை உணர்வு, பொறுப்புணர்வு தேவை. வாழ்வில் வாய்ப்புக் கள் இருக்கலாம். வாய்ப்புக்களை உபயோகித்தால் ஒழியப் பலன் ஏதும் கிடைக்காது. வாய்ப்புக்கள் இருக் கின்றன என்று பேசிக்கொண்டிருந்தால் வாய்ப்பு மட்டும் தான் தங்கும்! பலன் விளையாது!

மாறினால்—வேறுவிதமாக நடந்துகொண்டால் பிறர் என்ன சொல்வார்கள், ஊர் உலகம் என்ன எண்ணும்

என்ற நினைப்புதான் பலரையும் புதிய காரியங்கள் செய்யமுடியாமல் தடுத்து, முடக்கி விடுகிறது. இதனால் தன்னைப் பற்றிய மதிப்பு குறைந்து தாழ்வு மனப் பான்மையில் இவர்கள் மூழ்கி விடுகிறார்கள்.

மாற்றங்கள் வரும்போது புதிய நிலைகள் உருவாகின்றன. புதிய பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. பொறுப் பேற்கப் பலருக்குப் பயம் ஏற்படுகிறது இதனாலேயே பல இளைஞர்கள் 'கல்யாணம் வேண்டாம்' என்று கூறி விடுகிறார்கள்! உத்யோக உயர்வில் பலருக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது. சுதந்திரம்— என்றுமே பொறுப்புடன் சேர்ந்துதான் வருகிறது. மாற்றங்களைச் சமாளிக்க முடியாதவர்கள், குற்ற உணர்வால் சங்கடப்படுவதோடு பிறரைக் குற்றம் சொல்லவும் பிறர்மீது பழி சுமத்தவும் முற்படுகிறார்கள். அல்லது பிறரைச் சார்ந்து அவர்கள் பலத்தில் நிற்க முயல்கிறார்கள். 'பிறர்மீது குற்றம் சாட்டினால் தன் குற்றத்தை மக்கள் பார்க்க மாட்டார்கள்' என்ற நினைப்புதான் மந்திரிகளை வீட்டுக்கனுப்புவதற்கு ஒரு காரணம். இதை ஆங்கிலத்தில் Scapegoats என்பார்கள். வாழ்விலோ, நாட்டிலோ, மாற்றங்கள் நிகழவேண்டுமானால் தலைவனுக்குத் துணிந்து இறங்கும் தைரியம் வேண்டும். நமது தலைவர்கள் பலர் யோசித்துக் கொண்டே இருக்கிறார்கள். யோசித்துக்கொண்டிருந்தால் யோசனைதான் மிஞ்சும். காரியமாற்றினால்தான் பலன் மிஞ்சும்.

நமது கொள்கைகளில் பிடிப்பும், நமது வாழ்க்கை நெறிகள் பற்றிய பெருமையும் நமக்கு இருக்கும்போதுதான் துணிவு ஏற்படுகிறது. இவை இல்லாதவர்கள்,

காத்திருப்பார்கள்; அல்லது பிறர்முடிவு செய்ய விஷயங்களை விட்டுவிடுவார்கள். அரசியல் முடிவுகளை ஆராயும் போது ஒரு தலைவர் தனக்குத்தானே முடிவு எடுக்கிறாரா அல்லது எதிர்க்கட்சித் தலைவரை எண்ணி அவரைக் கவிழ்க்க, அல்லது முந்திக்கொள்ள, அல்லது தர்மசங்கடத்தில் ஆழ்த்த முடிவெடுக்கிறாரா என்பதைப் பரிசீலியுங்கள். ஒரு தலைவரின் வாழ்க்கை நெறியும் கொள்கைப் பிடிப்பும்விளங்கும்!

மாற்றங்களை வரவேற்பவர்கள் தன்னைப் பற்றிய தெளிந்த அறிவுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் பயம் இல்லாமல் இல்லை; பயம் இருந்தும் காரியங்களைச் செய்வார்கள். தடை இருந்தும் மேலே நடப்பார்கள். அவர்களிடம் பலன்களைப் பற்றிய கணிப்பு தெளிவாக இருக்கும். தங்களுக்கிருக்கும் உரிமைகளைப் பற்றிப் பெருமைப்படுவார்கள். அந்த உரிமைகளை உபயோகித்துச் சாதனைகளை நிகழ்த்துவார்கள். இவர்கள் தங்கள் உள் உணர்வை மதிப்பவர்கள். தங்கள் ஆழ்மனம் கணிப்பதை நம்பிச் செயல்படுகிறவர்கள். நமக்கு இருக்கும் உரிமைகளையே சரிவரப் பயன்படுத்தாத போது மேலும் மாநில உரிமைகள் வேண்டும் என்று கூப்பாடு போடுவதில் என்ன பலன்?

மாற்றங்களை, வாழ்வு நலம் வேண்டி, நாட்டு நலம் வேண்டிப் புகுத்தும் புதிய தலைவர்கள்—புதிய பொறுப்புக்களைச் சவால்களாக எடுத்துக்கொள்பவர்கள் நமது நாட்டுக்குத் தேவைப்படுகிறார்கள்.

வாழ்க்கை என்பது கடைசியாகப்போய் அடைய வேண்டிய ஊரல்ல; செல்லவேண்டிய திசை அது.

8. புதிய எல்லைகளை வகுப்போம்!

அவனை பாரசூட்டிலிருந்து குதிக்கச் சொன்னார்கள். அவனுக்கோ தயக்கம், பயம், குதிப்பது எப்படி என்று பலரையும் கேட்டான். அதுபற்றி விவரமாகப் படித்துக்கொண்டிருந்தான். அங்கு வந்த ஆசிரியர் சொன்னார்: "தம்பீ! படிப்பதன்மூலம் விமானத்திலிருந்து குதிப்பதைப் பற்றி ஓரளவுதான் தெரிந்து கொள்ளமுடியும்."

'தரையில் இருந்துகொண்டு நீந்தக் கற்றுக்கொள்ள முடியாது' என்பது வசனம். தொழிலில் இறங்காமல் அதன் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொள்ளாமல் தொழிலில் வெற்றியடைய முடியாது

ஆபத்து என்று தெரிந்தும், விபத்துக்கள் இருக்கும் என்று பிறர் விளக்கியும், நஷ்டம் ஏற்படலாம் என்று அறிந்தும், ஒரு மனிதன் துணிந்து இறக்குகிறானே அந்தத் தைரியத்தைத்தான் ஆங்கிலத்தில் 'ரிஸ்க்' (Risk) எடுத்தல் என்று கூறுகிறார்கள். "துணிந்தவனுக்கு துக்கமில்லை!" என்பது பழமொழி.

துணிந்து இறங்கும்போது நாம் நமது எல்லைகளை மீறுகிறோம். நமது திறமைகளைச் சோதிக்கிறோம். புது எல்லைகளை வகுக்கிறோம். தெரியாத உலகில் காலடி எடுத்து வைக்கிறோம். இருக்கும் நிலையில் நமக்கு ஏற்படும் அதிருப்தியின் விளைவாக இன்றுள்ள நிலையினைவிட உயரவேண்டும் என்ற உந்துதலின் விளைவாக எழும் செயல் அது. நிறைவை நோக்கிய பயணத்தில் புதிய ஓர் இலக்கை நிர்ணயித்துக்

கொண்டு முன்னேறுவதில், ஆபத்துக்களை எதிர் கொள்வதில் ஒரு 'திரில்' இருக்கிறது. வீர உள்ளம் படைத்தவர்கள் அந்த 'திரில்'லை அனுபவிக்கவே விரும்புவார்கள்.

துணிந்து இறங்குவது என்பது குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு கொஞ்சம்கொஞ்சமாக இறங்கி கரைக்கருகே குளித்துவிட்டு வருவதைப் போன்றது அல்ல. மரக் கிளையிலே இருந்து நடுக்குளத்தில் துணிந்து குதிப்பதைப் போன்றது. பொங்கும் அலைகளைச் சமாளித்து, கடலில் இறங்கிக் குளித்துவிட்டு வருவதைப் போன்றது.

திட்டமிடாமல் எதிர்காலத்துக்குள் புகுவது அசட்டுத் தனம். எந்தப் புதிய முயற்சியிலும் யோசித்தல், திட்டமிடல், வெற்றிக்கான வழிகளை ஆராய்தல், படிப்படியான முன்னேற்றத்தை நிர்ணயித்தல் முதலிய பல படிகள் உண்டு. ஆயினும் துணிந்து இறங்குவதில், லாபமா நஷ்டமா, பலன் விளையுமா விளையாதா, என்பதைத் தெளிவாகக் கடைசிவரை, காரண காரியங் காட்டி விளக்கிவிட முடியாது. அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. நாம் எடுக்கும் விஷயத்தின் முடிவு இப்படித் தான் இருக்கும் என்று முன்கூட்டியே நாம் நூறு சதவிகிதம் தெரிந்துகொள்ள முடிவதில்லை.

துணிந்து காரியத்தில் இறங்குபவர்கள், நஷ்டம் ஏற்படலாம் என்று தெரிந்தும் இறங்குகிறார்கள். ஆபத்து—ரிஸ்க்—உண்டு என்று அறிந்தும் செய்கிறார்கள். ஓய்வு நேரத்தை இழப்பது, குடும்பத்தைச் சில காலம் மறப்பது போன்ற சில தியாகங்களைச் செய்ய முன் வருகிறார்கள். தாங்கள் இன்று இருக்கிற நிலையையே பணயம் வைக்கிறார்கள். சுய கௌரவத்தையே அந்தப்

போட்டியில் பணயம் வைக்கிறார்கள். கிடைக்கும் பலன் இதை எல்லாம் ஈடுகட்டும் என்ற நம்பிக்கைதான் காரணம்.

எனது நண்பர் ஓர் இளைஞர், இருபத்தி எட்டு வயது இருக்கும். பி.ஏ. படித்தவர். 'சப்—ரிஜிஸ்டிரார்' அலுவலகத்தில் ஏழு வருடங்களாகக் குமாஸ்தாவாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார். முன்னேற்றத்திற்கு அதிகம் வழியில்லாத இடம் அது. தெரிந்தும் இருந்தார். ஆனால் தினமும், அதுபற்றிக் குறைபட்டுக்கொண்டிருந் தார். "சனியன்! இதை விட்டு விலகினால்தான் விமோசனமுண்டு!" என்று கூறுவாரே தவிர, துணிந்து வேறு ஒன்றில் இறங்கத் தைரியம் இல்லை. யாரோ ஒருவர் இவருக்காகப் பாடுபட்டு முயற்சி எடுத்து இவரை வேறு ஒரு நல்ல வேலையில் உட்கார வைப்பார் என்று நம்பிக்கொண்டு இவர் காலத்தை ஓட்டுவதுபோல் தோன்றும், அவ்வளவுதான். முணுமுணுத்தபடியே காலத்தை ஓட்டி ரிடையரும் ஆகிவிட்டார். மாட்டிக் கொண்ட வேலை அவர் வாழ்வை நிர்ணயித்தது.

நமது எதிர்காலத்தை நாம்தான் உருவாக்குகிறோம். நாம் துணிந்து ஒரு முடிவு எடுத்து இறங்கினால்தான் விஷயங்கள் நாம் விரும்புகிற மாதிரி போகும். நாம் விரும்புகிற மாதிரி இன்று போகாவிட்டாலும், நமது வாழ்வை நிர்மாணிக்கும் ஒரு முயற்சி, ஒரு சக்தி, நம்முடையதாக இருக்கும். தவறுகளை யோசித்துத் திருத்திக்கொண்டு மீண்டும் முயன்றால் நல்ல பலன் ஒரு நாள் விளையும்.

உலகில் பலர், எதிர்பாராத சந்தர்ப்பங்கள் நமது மடியில் மந்திரத்தில் மாம்பழங்கள் உதிர்வதுபோல் உதிரும் என்று எண்ணிக்கொண்டு வாழ்நாளைக் கடத்து

கின்றனர். காதல் மணம்தான் நல்லது என்று நம்பினால் போதாது. உலகில் இருக்கும் பல பெண்களுக்கும் அது தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் தாங்களாகவே நம்மை வந்து காதலிக்கத் துவங்க மாட்டார்கள். நாம் தான், துணிந்து, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அணுகவேண்டும். இந்தப் பெண், நமது பெற்றோர் தேடித் தரும் வாழ்க்கைத் துணையைவிட நல்ல பெண்ணாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம் என்று விளைவுகளை அறிந்து நெருங்க வேண்டும். அந்த நெருக்கம் வளரலாம் அல்லது குறையலாம். மனம் உடையலாம். ரிஸ்க் எடுக்கத்தான் வேண்டும்.

'மெனக்கெட்டால் என்னால் முடியும்?' என்று சிலர் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். இவர்களை யார் 'மெனக்கெட' வேண்டாம் என்று சொன்னார்கள்? தங்களது துணிவின்மைக்கு—கையாலாகாத்தனத்திற்கு மனிதர்கள் கட்டும் சப்பைக்கட்டு இருக்கிறதே—ஏராளம்! சப்பைக்கட்டும், சமாதானமும் நமது துணிவின் மண்டையிலடிக்கிறது; நமது உழைப்பை முடக்குகிறது.

மூட நம்பிக்கைகள் நாம் துணிவுடன் இறங்குவதை—'ரிஸ்க்' எடுப்பதைத் தடை செய்கின்றன. பெரிய பதவி வந்தபோதும் அதைக் கண்டு ஒரு மனிதன் அஞ்சுகிறான்; அந்தப் பதவி தன் குறைகளை எங்கே காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயப்படுகிறான்!

இதைச் செய்தால் அப்பாவுக்குப் பிடிக்காதோ? அவருடைய அன்பை இழந்து விடுவோமோ

என்று அஞ்சும் குழந்தை, சுதந்திர உணர்வு அதிகம் இல்லாத குழந்தையாகத்தான் வளரும். தமிழ்ச் சமுதாயம் ஒரு சார்ந்து நிற்கும் சமுதாயமாக இன்று இருக்கிற காரணத்தால்தான் அது முன்னேறவில்லை. மாநில அரசு எதற்கும் தில்லியை எதிர்பார்க்கும் மனோபாவம், அமைச்சர்கள் எதற்கும் முதல்வரை எதிர்பார்க்கும் மனோபாவம். இருக்கிற நிதி வசதிகளை வைத்துக்கொண்டு துணிந்து நாமே காரியங்களைச் செய்யவில்லையானால், இருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தி நமக்குட்பட்ட முடிவுகளை நாமே எடுக்க வில்லையானால் எங்கே நாடு முன்னேறும்?

"தேங்கிக் கிடந்த குட்டை நாற்றமெடுத்து விடும்!" என்றான் ஓர் அரேபிய அறிஞன்,

9. "தம்பி! ஊருக்குப் புதுசு!"

மருந்து சாப்பிடப் பயந்தால் நோய் எப்படிக் குணமாகும்? மருந்து கசக்கக் கூடும். மருந்தின் விலை அதிகமாயிருக்கலாம். "நோயுடன் வாழக் கற்றுக் கொண்டுவிட்டேன்!" என்று பலர் நம்மிடையே கபம் கட்டி இருமிக்கொண்டிருக்கிறார்கள்; தலைகுனிந்து நடக்கிறார்கள்.

துணிந்து முடிவெடுக்கத் தைரியமின்றி காரியங்களை ஒத்திப்போடுவதால் சுமைகள்தான் அதிகமாகின்றன. ஒத்திப்போடுவதன்மூலம் நாம் நம் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. நம் பொறுப்புக்களை நாம் என்றாவது சந்தித்தாக வேண்டும்.

யோசித்து எண்ணி முடிவெடுப்பதற்கும் பலன்களை எண்ணி அதைப் பரிசோதித்து முடிவெடுப்பதற்கும் இடையே ஒரு தராசு முனை இருக்கிறது. அந்த உறவை உணர்ந்து, நல்ல பலனை எதிர்பார்த்து, சரியான சமயத்தில் காரியத்தில் இறங்கவேண்டும்.

கிண்டி குதிரைப் பந்தயம், உத்தரப் பிரதேச லாட்டரி என்று பலர் துணிந்து; நூறு, ஆயிரம் என்று பணத்தைப் போடுகிறார்கள். வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் இப்படிச் சூதாடுவதில்லை. காரணம், அந்தச் செயல்களில் அடிப்படை நியாயம் இருப்பதில்லை. நாம் பெறும் பணம் பொதுவாக உழைப்பின் ஈடாக இருக்க வேண்டும்; இதுதான் உலக நியதி. இந்த உலக நியதிக்கெதிராக இருக்கும் நம்பிக்கைகள், செய்யும்

யாவும் நிரந்தரமான பலனைப் பொதுவாகத் தருவ தில்லை.

ஒரு காரியத்தில் இறங்கும்போது, "இதில் நஷ்டம் எத்தனை சதம்?" என்று நாம் கணக்கிடக் கற்றுக் கொள்ளவேண்டும். நாம் வெற்றிபெறும் வாய்ப்பு எத்தனை சதம் என்பதைக் கணிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "தொழிலில் வெற்றிபெற்றவர்களெல்லாம், எங்கே வெற்றி வாய்ப்பு அதிகமாயிருக்கிறதோ—மிக அதிகமாக இருக்கிறதோ—அந்தச் சந்தர்ப்பங்களைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதுதான் அவர் களது வெற்றியின் ரகசியம் என்று ஹார்வார்டு பல்கலைக் கழகக ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது. "வந்தால் வரட்டும், போனால் போகட்டும்!" என்று சிலர் பேசுகிறார்கள். அந்த மனோபாவமே தவறு. வெற்றிபெறும் வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கும்போது பணத்தை அத்தகைய தொழில் அல்லது வியாபாரத்தில் போடாமல் கடலில் கொண்டு கொட்டுவதுகூட நல்லது. என்றாவது அது கரையில் சேர்ந்து வேறு யாருக்காவது உபயோகப்படக் கூடும்!

துணிந்து ஒரு காரியத்தில் இறங்கும்போது நம்மிடம் பலனைப் பற்றிய ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது. மேலும் இதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு, நமது முழு உயிரையும் கொடுத்து, விளையாடும் ஆட்டம் இருக்கிறதே, அது தரும் உற்சாகம் நமக்குந் துணை நிற்கிறது.

எது எத்தகைய பலன் கொடுக்கும் என்று ஒரு பட்டியல் போடுங்கள். வெற்றி வாய்ப்பின் சதவிகி தத்தைக் கணக்கிடுங்கள்,

சினிமா எடுக்கிறீர்கள். லாப நஷ்டம் எப்படி?* இருபதில் ஒருவர் வெற்றியடைகிறார். பத்தில் ஒருவருக்குப் போட்ட பணம் வருகிறது என்கிறார்கள். வாய்ப்பு இவ்வளவு குறைந்திருந்தும் ஏன் பலர் இதை மோகிக்கிறார்கள்? மோகம் ஒரு முக்கியக் காரணம்! அதற்கு அடிமையாகக் கூடாது.

ஸ்டாக் மார்க்கெட்டில், அல்லது தொழிலில் பணம் போடுகிறீர்கள். வெற்றி வாய்ப்பு இன்னும் அதிகம்.

மனை வாங்கி வியாபாரம் செய்கிறீர்கள். நஷ்டமாகும் நிலை மிக மிகக் குறைவு. லாபமும் வெற்றி வாய்ப்புமே அதிகம்.

இன்ஷ்யூரன்ஸ் தொழில் இருக்கிறது. மனிதர்கள் சாவதை வைத்துப் பணம் கொடுக்கிறார்கள். ஏதோ பெரிய சூதாட்டம்போல் தோன்றுகிறது. ஆனால் எவ்வளவு மனிதர்கள் எத்தனை வயதில் என்ன காரணங்களுக்காகச் சாகிறார்கள் என்ற ஆராய்ச்சிப் பின்னணியில் உங்கள் உயிரை 'இன்ஷ்யூர்' செய்கிறார்கள். அந்தக் கணக்கெடுப்பு பாதுகாப்பையும் நல்ல வருமானத்தையும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்குத் தருகிறது.

துணிந்து இறங்கும்போது நாம் ஏந்த விதங்களில் நஷ்டங்களைக் குறைத்துக்கொள்ளலாம்? ஆபத்துக்களின்—நஷ்டங்களின்—தன்மையைக் குறைத்துக் கொள்ள நாம் முயலவேண்டும். ரேஸ் கார் ஓட்டுபவர், கார் நல்ல கண்டிஷனில் இருக்கிறதா என்றும், நல்ல பாதுகாப்புக் கருவிகளுடன் கட்டப்பட்டிருக்கிறதா என்றும் சரிபார்த்துக் கொள்கிறார். நிறைய இன்ஷ்யூர் செய்து கொள்கிறார்.

சிறந்த மருத்துவரைத் தன் செலவில் போட்டி மைதானத்தில் தயாராக இருக்க ஏற்பாடு செய்கிறார். சட்டங்களை மீறிக் கண்டபடி ஓட்டும் தன்மைகொண்ட போட்டியாளர்களை நீக்கும்படி சொல்லி—ரேஸ்கோர்சின் சட்ட திட்டங்களைச் சரிவரப் பரிபாலிக்கிறார்களா என்று பார்க்கிறார்—ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்கிறார். அவ்வாறே புதிய தொழில் அல்லது வியாபாரத்தில் ஆர்வமுடன் துணிந்து இறங்கும்போது நஷ்டங்களைத் தவிர்க்க என்னவெல்லாம் செய்யலாம் என்பதையும் யோசிக்கவேண்டும்.

எலெக்ட்ரானிக் கால்குலேட்டரை முதலில் கண்டு பிடித்த மனிதன், எல்லோரும் சிறிய கால்குலேட்டர்களைத் தங்கள் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும் நிலை ஒருநாள் வரும் என்று தீர்க்க தரிசனத்துடன் கூறினார். மற்றவர்கள் சிரித்தார்கள். ஏன்? கால்குலேட்டர் மிக பெரிதாக இருந்தது. அதன் விலை அதிகமாய் இருந்தது. எல்லோராலும் வாங்கக்கூடிய நிலையில் அது அன்று இல்லை. அதனால் சிரித்தார்கள். சிரித்தவர்களுக்கு இன்றிருக்கிற நிலையை மீறி எதிர்காலத்தைப் பார்க்கும் தன்மை இல்லை. ஆனால் கால்குலேட்டரைக் கண்டுபிடித்தவனுக்கு அந்தத் திறமை இருந்தது. இவ்வாறே தொழில் அல்லது வியாபாரத்தில் எதிர்காலத்தைக் கணித்து அதற்கேற்ப இப்போதே திட்டமிடும் ஆற்றல் அவசியம்.

“பாதுகாப்பு என்று எண்ணுவது முக்கால்வாசி மூடநம்பிக்கை. இயற்கையில் அப்படி ஏதுமில்லை. மனித சமுதாயம் அப்படி எதையும் அனுபவித்ததில்லை!”

என்கிறார் ஹெலன்கெல்லர் என்ற அமெரிக்கப் பெண்மணி; கண்களைப் பிறவியில் இழந்த பிரமுகர் அவர்.

நாம் துணிந்து எதில் இறங்கினாலும், எதைப் புதிதாகச் செய்தாலும், பலர் "தம்பி, ஊருக்குப் புதிசு!" என்று சொல்லி பயமுறுத்தக்கூடும். "அண்ணே, அரசியல்லே என்ன பண்றீங்க?" என்று திருப்பிக் கேளுங்கள். தம்பி ஊருக்குப் புதிசல்ல என்று தெரிந்து கொள்வார்கள்.

10. சாதனைப் பாதையில் கட்டுப்பாடு என்ற படிகள்

ஆசையை அழைத்துச் செல்லும் வழிக்குப் பெயர், கட்டுப்பாடு, கட்டுப்பாடற்ற பாதையில் சென்றால் இலக்கை அடைய முடியாது. வாழ்க்கையில் வெற்றி கிட்டாது. வாழ்வு ஒரு நிரந்தரப் போராட்டம். நல்லவற்றிற்கும் கெட்டவற்றிற்கும் சுயகட்டுப்பாட்டிற்கும்—மனம்போன போக்கிற்கும் அந்தப் போராட்டத்தில் சுயகட்டுப்பாடு வெற்றி பெறுகிறதா அல்லது மனம் போன போக்கு மேவுகிறதா என்பதைப் பொறுத்துத் தான் வெற்றி அமைகிறது; நமது சாதனைகள் அமைகின்றன.

சுயகட்டுப்பாடு வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் நமக்குத் தேவைப்படுகிறது. சாப்பாடு; உடலின்பம்; வரவு—செலவு; குழந்தை வளர்ப்பு; கோபம், சந்தோஷம், பொறாமை போன்ற உணர்வுகள் என்று, வாழ்வின் எல்லா அம்சங்களிலும் சுயகட்டுப்பாடுடன் இருப்பவர்களே நல்ல பலன்களைக் காண்கிறார்கள்.

ஆழ்ந்து நோக்குமிடத்து இந்த உலகமே—இந்தப் பிரபஞ்சமே—ஒரு கட்டுப்பாட்டில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெரிய வரும். பூமியும், சந்திரனும், செவ்வாய்க் கோளமும், சூரியனும் ஒரு கதியில்-ஓர் ஒழுங்கில்தான் இயங்குகின்றன. "என்னைச் சுற்றி வா!" என்று சொல்லிவிட்டு, சூரியன் பூமியைத் திடீரென்று விட்டு விடுகிறதென்றால் என்னாகும்? எப்படி பிரபஞ்சத்திலுள்ள கோளங்கள் அனைத்தும்

பரஸ்பர ஈர்ப்புச் சக்தியால் கவரப்பட்டு ஓர் ஒழுங்குடன் இயங்குகின்றனவோ அது போலத்தான் மனித வாழ்வும், சமுதாயமும் இயங்குகிறது. அதாவது நமது கட்டுப்பாடு, நம் வாழ்வை மட்டுமின்றி, பிறர் வாழ்வையும் தொடுகிறது; பாதிக்கிறது.

கற்பு என்பதும் ஒரு வகை கட்டுப்பாடுதான். கற்பு என்பது வாழ்வின் ஒரு நெறி. அதை ஏன் போற்றுகிறோம் என்றால் அந்த நெறியைக் கடைப்பிடிப்போரின் வாழ்க்கை பூராவும் அது ஊடுருவுகிறது. அதனால் அவர்கள் வலிமை பெறுகிறார்கள். அவர்கள் மனக்கட்டுப்பாட்டின் வலிமையை 'பெய்யெனப் பெய்யு மழை!'' யாகக் காண்கிறோம். மதுரையைத் தீப்பிடிக்க வைக்கும் கண்ணகியின் கோபமாகக் காண்கிறோம். ஆணுக்கும் பெண்ணுக்கும் அதனைப் பொதுவில் வைத்த பாரதியின் நேர்மையாகக் காண்கிறோம். கட்டுப்பாட்டின் வலிமையை நாம் இவற்றிலிருந்து புரிந்துகொள்ளவேண்டும்.

முதல் நாள் விரதமிருந்த மகாத்மா காந்தியின் தாய் மறுநாள் சூரியனைப் பார்க்காமல் சாப்பிடுவதில்லை. தானும் மற்ற சகோதரர்களும் தெருவில் நின்று, சூரியன் வராதா என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அம்மாவிடம் ஓடிப்போய்ச் சொல்லும் விஷயத்தை மகாத்மா காந்தி நம் சுயசரிதத்தில் எழுதுகிறார். கவனியுங்கள் : ஒரு தாய் கொண்டிருந்த பழக்கம் எத்தகைய நெறிகளை, மன உறுதியை இளைஞர் மோகன்தாஸ் காந்தியின் மனத்தில் வளர்த்தது; எப்படி அது சத்தியாக்கிரகத்திற்குப் பின்னால் வழிவகுத்தது என்பதை எண்ணிப் பாருங்கள் ஆகவேதான், நாம் நம் குழந்தை

களைக் கண்டித்துச் சொல்வதைவிட, வாழ்ந்து காட்டுவது நல்லது.

சுயகட்டுப்பாடு ஒன்றும் சுலபமான விஷயமல்ல. கட்டுப்பாடு என்று நமக்கு நாமே விதித்துக்கொண்டு வாழ்க்கையின் சுகங்களைத் தியாகம் செய்ய வேண்டுமா. என்று எனக்கே நான் யோசிப்பதுண்டு துவக்கத்தில் அது ஒரு தண்டனையாகவும், தியாகமாக வும்தான் ஆரம்பிக்கிறது. ஆனால் அதன் விளைவு களில் ஏற்படும் நிறைவு, நமது தியாகங்கள் எல்லா வற்றையும் ஈடு செய்கிறது. நமது மதிப்பில் நம்மை உயர்த்திவிடுகிறது. பிறர் சொல்கிறார்களோ இல்லையோ நாம் நம் மதிப்பில் பெரிய மனிதர்களாகி விடுகிறோம்.

டிசம்பர் 10ஆம் தேதி வந்த ஒரு தமிழ் வார இதழைப் பார்த்தேன். 96 பக்கங்களில் விளம்பரம் 36 பக்கம். மிகுந்த 60 பக்கங்களில் 15 பக்கங்கள் சினிமா நட்சத்திரங்களைப் பற்றிய கவர்ச்சிச் செய்திகள். அதாவது நாலில் ஒரு பங்கு சினிமா. இதைப் படிப்பவர் கள் இளைஞர்கள் தான் பெரும்பாலும்.

இப்போது நமது சமுதாயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் உழைக்கும் நேரமான எட்டு மணி நேரத்தில் நாலில் ஒரு பங்கை சினிமாவைப் பற்றிச் சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் செலவிடு கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாடு எங்கே போகும்?

இத்தகைய பத்திரிகையைக் கட்டுப்பாடற்ற பத்திரிகை எனலாமா? பொறுப்பற்றது என்று கூறுவதா? காசு மட்டுமே குறி என்று எதையும் விற்கத் தயாராயிருக்கும் ஒரு மனப்பக்குவம் என்று கூறுவதா?

கட்டுப்பாட்டிற்கு மறுபெயர் பொறுப்பு. பொறுப் பில்லாமல் காரியம் செய்துகொண்டு, இளைஞர்கள் மனம் போகிற போக்கில் நாங்களும் போகிறோம் என்று பத்திரிகைகள் சொல்லுமேயானால், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்று அர்த்தம். நாட்டின் வருங்கால இளைஞர் சமுதாயத்தை வஞ்சிக்கிறோம் என்று அர்த்தம்.

ஒரு முக்கியமான துறை—ஜனநாயகத்தில் இன்றி யமையாத பத்திரிகைத்துறை எப்போது தன் கட்டுப் பாட்டை இழக்கிறதோ, எப்போது நாம் அதைக் கண்டும் காணாததுபோல் போகிறோமோ, அப்போது இந்தக் கட்டுப்பாடற்ற தன்மை சமுதாயத்தின் மற்ற துறைகளிலும் சுலபமாகப் பரவும் — பரவுகிறது; அரசியலில், கல்லூரிகளில், போலீஸில், நீதித்துறையில் என...மக்கள் அபிப்பிராயங்களை உருவாக்குபவர் களுக்கு இதில் மகத்தான பங்கிருக்கிறது. இவர்கள் கட்டுப்பாடு இழந்தால் மக்களும் இழப்பர். மக்களின் எண்ண ஓட்டத்தைத் திசை திருப்பும் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும், பொது வாழ்வில் ஈடுபட்ட அரசியல்வாதிகளும் இதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"காமக்கிளர்ச்சியில் மகிழும் — தன்னை மறக்கும் — சமுதாயம் ஆண்மையை இழக்கிறது" என்றான் ஓர் அறிஞன். ரோம் சாம்ராஜ்யத்தை இதற்கு உதாரணங் காட்டுவார்கள். நமது தேசத்திலும் உதாரணங்கள் உண்டு என்ற சரித்திரம் பேசுகிறது.

விலங்குகள், மனிதர்களைப்போல காமக்கிளர்ச்சி யில் ஈடுபடுவதில்லை. இனம் அழிந்துவிடாமல்

இருக்க எப்போது தேவையோ—அப்போதுதான் அதில் ஈடுபடுகின்றன என்று விலங்கியல் அறிஞர்கள் எழுது கிறார்கள்.

"காமம் என்பது மனிதன் கற்றுக்கொண்ட கலை. இயல்பாக உள்ள உந்துதல்—உணர்வு—ஒரளவுதான். மற்றவை எல்லாம் தானாக வளர்த்துக்கொண்ட நினைப்புக்கள்" என்று அவர்கள் எழுதுகிறார்கள்.

நமது ஊரிலோ மனிதன் செக்ஸை ஆண்மைக்கு உரைகல்லாகக் கருதத்தொடங்கி விட்டான்! 'ஆடவர்க் கழகு சின்ன வீடு அமைத்தல்' என்று புதிய பழமொழி உலவுகிறது. நானறிந்த ஒருவர் போதும் போதாதென்று ஆபீசிலேயே ஒரு சின்ன வீடு வைத்திருக்கிறார்!

கட்டுப்பாடும், கட்டுப்பாடான நோக்கமும்—நாடு தழுவிய நிலையில் இருந்தால்தான் இந்த நாடு முன்னேறும், இல்லாவிட்டால், "அவர் ஆசாரங்க! ஆம்லெட்டில் வெங்காயம் சேர்த்துக்கமாட்டார்!" என்கிற கதைதான்!

11. கட்டுப்பாடும் சுதந்திரமும் கைகோத்துச் செல்லட்டும்

மனக்கட்டுப்பாடு என்னும் புத்தகத்தின் பக்கங்கள் தான் விரதங்கள் எல்லாம். சோமவார விரதம், கந்தசஷ்டி விரதம், கார்த்திகை நோன்பு, சபரிமலை வேண்டுதல் என்று பல வகைகளில் வாழ்வில் மனிதன் மனக்கட்டுப் பாட்டை வளர்த்துக்கொள்ள முயல்கிறான்.

பாஞ்சாலி சபதம், கண்ணகியின் சினம், சிவகாமியின் சபதம் எல்லாம் மனக்கட்டுப்பாட்டின் மிகப் பெரிய இயக்கங்கள்; அத்தியாயங்கள்.

பிரம்மசரிய விரதம் என்பது காம எண்ணங்களின் கட்டுப்பாடு மட்டுமலல, அது சுய வளர்ச்சியின் உன்னத நிலையை அடைவதற்கான துவக்கம்.

நமது எண்ணம்தான் நமது செயலைத் தூண்டுகிறது. ஆகவே, நமது கட்டுப்பாட்டை வளர்க்கும் எண்ணங்களை நாம் வரவேற்க வேண்டும். இல்லையென்றால் எண்ணங் களோடு கட்டுப்பாடும் நம்மை விட்டு அகலும்! சுயக் கட்டுப்பாடு மனத்தில் தான் துவங்குகிறது. அதை மனஉறுதி என்று கூறலாம். பிடிவாதம் என்றும் கூறலாம்.

ஒரு நோக்கத்தையும் அதனை 'அடையும் வழியையும் ஆராய்ந்து பார்த்தோமானால், கட்டுப்பாடு, ஒழுங்கு, நெறி ஆகியவை வாழ்வுக்கு இன்றியமையாதவை என்பது புரியவரும். இதைத்தான் எலிசபெத் ஹெய்க் என்ற அறிஞர் 'விழிப்புணர்வு' என்று எழுதுகிறார். இந்த

விழிப்புணர்வு சதாசர்வ நேரமும், முக்கியமாக முடிவெடுக்கும் சமயங்களில் நமக்கு வழிகாட்டுமானால் வாழ்வில் வெற்றி காண்பது எளிதாகும்.

கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் மனஉறுதிக்கு எது உதவுகிறது? நமது கட்டுப்பாட்டைச் சோதிக்கும் சூழ்நிலையில் நம்மை வைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. துறவறம் பூணும் இளைஞன் இளம் பெண்களுக்கு ஞானம் புகட்டும் சூழ்நிலையில் தன்னை வைத்துக் கொள்வது நல்லதல்ல. சாப்பாட்டைக் கட்டுப்படுத்த விரும்பும் மனிதர் விருந்துகளுக்குப் போவது உசிதமல்ல.

புத்தர் வெகுநாள் வரை பெண்களைச் சீடராக ஏற்றுக்கொள்ளவில்லை. ஹாவாயியிலிருக்கும் தவத்திரு சுப்பிரமுனிய சுவாமி, கடவுள் கோயிலில், பெண் தெய்வங்களின் சிலைகளைக்கூட நிறுவவில்லை. நமது கட்டுப்பாட்டை சோதிக்கும்—தகர்க்கும்—எந்த எண்ணம் வந்தாலும் அதைத் தொடராதீர்கள். பிரம்மசரியத்தைப் பற்றி எழுதும் நமது நூல்கள் உணர்வுகளைத் தூண்டி விடும் உணவுப் பொருள்களான பூண்டு, வெங்காயம், மிளகாய், தேநீர், சர்க்கரை, நெய் ஆகியவற்றையும் சுருட்டு, பீடி, மது போன்றவற்றையும் ஒதுக்குமாறு எழுதுகின்றன.

கட்டுப்பாடுகள் கைவர நாம் முக்கியமாக செய்ய வேண்டியது முயற்சி. நமது கட்டுப்பாட்டிலிருந்து ஓரிரு முறை நாம் நழுவிப் போய்விட நேரலாம். அப்போதெல்லாம் நாம் நம்மை மிகவும் கடிந்து கொள்ளாமல், சாந்த

மாக இழுத்து வந்து மீண்டும் கட்டுப்பாட்டில் நுழைப்பது தான் முக்கியம்.

கஸ்தூரிபா காந்தியை அறுபதுக்குமேல் சந்தித்த அமெரிக்கப் பத்திரிகையாளர், அவர்களது பிரம்மசரியத்தைப் பற்றிக் கேட்கிறார். "எடுத்துக்கொண்ட பிரம்மசரிய விரதத்திலிருந்து இரண்டு முறை தவறி விட்டார் காந்தி! ஆனால் இம்முறை இதுவரை அதைக் கடைப்பிடித்து வருகிறார்!" என்று பதில் கூறுகிறார் கஸ்தூரிபா.

காந்தி, ரமண மகரிஷி, மொரார்ஜிதேசாய் போன்றவர்கள் கட்டுப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள்.

கட்டுப்பாட்டுடன் செயல்படும் ராணுவ வீரனை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். விண்வெளிக்குச் சென்ற அபோலோ குழு எத்தகைய பயிற்சிகளையும் கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டது என்று எண்ணிப் பாருங்கள். கிரிகெட் வீரர்களான வெங்கட்டும், கவாஸ்கரும், கபில்தேவும் கட்டுப்பாட்டினைக் கடைப் பிடிக்காமல் இந்த அளவுக்கு முன்னேறி இருக்க முடியுமா? ஹெலன்கெல்லர், மில்டன், என்று கண் தெரியாத மனிதர்கள் இத்தனை சாதனைகளை எப்படிச் செய்தார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சாதனைகள் எல்லாம் மனக்கட்டுப்பாட்டிலிருந்து பிறந்தவையே.

சுயகட்டுப்பாட்டை எப்படி வளர்க்கலாம்? நமது வாழ்வின் ஒரு பகுதியாக எப்படி அமைத்துக் கொள்ளலாம்? சுயகட்டுப்பாட்டைப் பற்றிய 'விழிப்புணர்வு' கொண்டிருக்க வேண்டும் நாம். 'நான் சுயகட்டுப் பாடுள்ளவன்' என்று நமக்கு நாமே அடிக்கடி பேசிப்

பெருமைப்பட்டுக் கொள்வது அவசியம் என்கிறார்கள் மனவியல் அறிஞர்கள். சுயகட்டுப்பாட்டால் விளையும் நன்மைகளை மனத்தில் அடிக்கடி கற்பனை செய்வது; அந்தக் கற்பனைகளின்போது எழும் இனிய உணர்வுகளை அடிக்கடி நினைவில் கொணடு வருவது; கட்டுப்பாட்டின் விளைவாக வெற்றிகள் வரும்போது, ''அதுதான் நான்! இந்த சிங்கம்!'' என்று நம்மை நாமே தட்டிக்கொடுத்துக் கொள்வது; நமது லட்சியங்களையும் அதிலுள்ள நமது ஈடுபாட்டையும் நினைவில் கொள்வது; கடைசியாக, தளராத மனம்; ஓரிரு முறை தவறினாலும் மீண்டும் மீண்டும் ஓர் ஒழுங்கிற்கும், கட்டுப்பாட்டிற்கும் வந்து சேருவது; அதிகம் சிந்திப்பவர்கள், உடற் பயிற்சியில் ஒழுங்காகத் தொடர்ந்து ஈடுபடுவது போன்றவை நல்ல மன உறுதியை வளர்க்கும்.

கட்டுப்பாடு என்பது, தோட்டத்தில் பாத்தி கட்டி, வாய்க்கால் வழியாக ஒவ்வொரு பாத்திக்கும் வரிசையாகத் தண்ணீர் பாய்ச்சுவதுபோல. பாத்தி கட்டும் போது தண்ணீர் வீணாவதில்லை. கட்டுப்பாட்டின் மூலம் நம் சக்தியை அதிக அளவுக்கு உபயோகிக்கிறோம்.

கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்படும் குழந்தைகள் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். குழந்தையை இரண்டுவிதமாக வளர்க்கலாம். கண்டிப்புடன், தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதுடன் சிறு சிறு தண்டனைகள் அளிப்பது—இது ஒரு வழி. ''சின்னப் பையன்! போனால் போகிறான்! எல்லாம் போகப் போகத் தெரிந்து கொள்வான். அவனைச் சும்மா விடு!'' என்று கூறி வளர்க்கும் முறை—இது இரண்டாவது.

கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்த பின், வாழ்க்கையை எளிதாகச் சமாளித்தார்கள். அதிகம் மரியாதை கொண்டவர்களாக, நன்றி உள்ளவர்களாக, சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுபவர்களாக படிப்பிலும், வேலையிலும் அதிகக் கவனம் உடையவர் களாக, உத்தரவுகளை ஏற்றுக்கொள்பவர்களாக இருந்தார் கள். நல்ல மனோபாவம் கொண்டிருந்தார்கள் இவர்கள்.

இதன் மறுபக்கமும் இருக்கத்தான் இருந்தது. இவர் கள், அதிகம் வெட்கப்படுகிறவர்களாகவும், உணர்ச்சி வசப்படக் கூடியவர்களாகவும், தன்னைப் பற்றிய நினைப்பும், பிறர் என்ன சொல்வார்களோ என்று கவலைப்படுபவர்களாகவும் இருந்தார்கள். இவர்களிடம் சற்று அளவுக்கு மீறிய பணிவு இருந்தது. ஒதுங்கி நின்றார்கள். தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்து வதில் இவர்களிடம் தயக்கம் இருந்தது. சொல்ல நினைப்பதைச் சொல்ல முடியாமல் திணறினார்கள்.

பெற்றோர்கள் அடங்கிப்போய்க்குழந்தைகளுக்குச் சுதந்திரம் கொடுத்து வளர்க்கும்போது அத்தகைய குழந்தைகள் தனித்துத் தம் காலிலேயே நிற்கும் தைரியம் பெற்றிருந்தார்கள். தன்னம்பிக்கை அசாத்தியமாய் இருந்தது. சிலசமயம் ஆணவம் என்கிற அளவுக்குக்கூட இருந்தது. பொதுவாக இவர்கள் கீழ்ப்படிய மறுத்தார் கள். பொறுப்பற்றவர்களாய் இருந்தார்கள். பிடிவாதம் அதிகமாகி பிறரால் எளிதில் சமாளிக்க முடியாதவர்களாக விளங்கினார்கள்.

இவற்றின் மறுபக்கம் என்ன? இவர்களுக்கு எதிலும் தொடர்ந்த ஆர்வமிருப்பதில்லை. திறமையும் கம்மி. எடுத்த காரியத்தை முடித்தோம் என்பது

இவர்கள் அகராதியிலேயே இல்லை! அதிகாலையில் எழுந்தோம் என்பது போன்ற ஒழுக்கங்கள் ரொம்பக் குறைவு. தாமதமாக வருவார்கள். சோம்பேறிகளாக இருப்பார்கள். அதிகாரத்தை எதிர்ப்பார்கள்.

கண்டிப்பும் வேண்டும், குழந்தைகளுக்குச் சுதந்திரமும் நாம் அளிக்கவேண்டும். ஆனால், இந்தியாவில்—குறிப்பாகத் தமிழ்நாட்டில் எப்படி நாம் குழந்தைகளை வளர்க்கிறோம்? ஒன்று ஒரேயடியாகக் கண்டித்து அடக்கி வளர்க்கிறோம். அல்லது கண்டு கொள்ளாமலேயே விட்டுவிடுகிறோம். இதுபற்றிப் பெரிய புத்தகமே எழுதலாம். யாராவது எழுதவேண்டும். ஒரு தலைமுறைக் குழந்தைகள் சரியாக வளர்க்கப்படாததால் தான் ஒரு தான்தோன்றித் தனமான அரசியல் நிலை இன்று உருவாகி இருக்கிறதோ என்று நான் எண்ணுவதுண்டு. வீட்டில் கொடுக்கும் செல்லம், பள்ளியில் இருக்கும் கெடுபிடி இவை இரண்டும் முரண்படும்போது ஒரு வகையான தான்தோன்றித்தனத்திற்கும் அதன் எதிர்மறையான அடிமைப் புத்திக்கும் காரணமாக இருக்கிறதோ என்று நான் யோசிப்பதுண்டு.

குழந்தை வளர்ப்பு—இது கறுப்பு, இது வெள்ளை—என்று கூறுகிற மாதிரி எளிதான விளக்கத்திற்கு உட்பட்டதல்ல. ஒன்று மட்டும் உண்மை. ஜப்பானைப் பார்க்கும்போது, நம் நாடு இன்றிருக்கும் அலங்கோல நிலைக்கு நாம் குழந்தைகளை வளர்த்த முறையும் ஒரு காரணம்தான்.

12. சுய கட்டுப்பாடு எனும் சக்தி

வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு முக்கியமான குணம்—அதிகம் அலசி ஆராயப்படாதது ஒன்று இருக்கிறதென்றால் அது சுயகட்டுப்பாடு (Discipline) தான். வாழ்வில் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள் தான் வெற்றி அடைகிறார்கள். நம்மை நாமே ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் புற சூழ்நிலையையும் நாம் கட்டுப்படுத்துகிறோம்.

தொழில் துவங்குபவன் கட்டுப்பாடுடன் செயல்படுகிறான். இரவு பகல் என்று பார்க்காமல், தாகம், தூக்கம், பசி பாராமல் உழைக்கிறான். பொருளின் தரத்தில் கட்டுப்பாடுகளை உருவாக்குகிறான். மக்களுடன் பழகி விற்பனை செய்வதில் சில மரியாதைகளை—நியாயங்களைக் கடைப்பிடிக்கிறான். சிறிது சிறிதாக வரும் லாபத்தைச் சேர்த்து அடுத்த தொழில் துவங்குகிறான். அல்லது இருக்கும் தொழிலை விரிவு படுத்துகிறான். லாபம் வந்தவுடன் அவன் அதை உல்லாசமாக செலவழித்து விடமுடியும்; ஆனால் செலவழிப்பதில்லை. கட்டுப்பாடு; மனக் கட்டுப்பாடு அவனுக்கு அதிகம்.

இளமையின் சக்தி அபாரமானது. அங்கும் கட்டுப்பாடுதேவை. பையனுக்கு அல்லது பெண்ணுக்கு வயது வந்துவிட்டது என்று திருமணம் செய்து வைக்கிறார்கள். அல்லது அவனே திருமணம் செய்து கொள்கிறான். புதிதாகக் கண்ட உடலுறவு சுகங்களை நாடி அவன் தன் சக்தியைச் சிதற விடுவதில்லை. சிற்றின்ப விஷயங்களில் நெறியில்லாமல், ஒழுக்கமில்லாமல் செல்பவன்

வாழ்நாள் பூராவும் மனத்திட்பம் இழந்து, குற்ற உணர்வுடன் உடல் சக்தி இழந்து அல்லலுறுகிறான். மனித சக்தியை ஒரு நெறியுடன் கட்டுப்பாட்டுடன் செலவு செய்பவன் தான் வாழ்வின் லட்சியத்தை உணர்கிறான்.

தனது வருமானத்தை கட்டுப்பாட்டான செலவுக்குள் வைத்திருப்பவன் தான் வெற்றியடைகிறான். கட்டுப்பாடுகளை மீறுபவன் கடனாளியாகிறான்; கௌரவத்தை இழக்கிறான்.

லட்சியத்தில் பற்றுக் கொண்டவன் ஒரு கட்டுப்பாட்டுடன் அதுபற்றியே சிந்தித்து செயல்படும் போது தான் அதை அடைகிறான். இல்லாதவன் ஒரு லட்சியத்திலிருந்து மற்றொன்றுக்கு தாவி எதையும் சாதிக்காதவனாக முடிகிறான்.

ஒரு துறை அறிவைப் பேணி வளர்ப்பவன் தான் அத்துறையில் நிபுணனாகிறான்; வல்லுனராகின்றான். ஆசைப்பட்டதில் எல்லாம் இறங்குபவன் "எல்லாம் தெரிந்தவன், ஒன்றுக்கும் உபயோகமற்றவன்!" என்ற பட்டத்தைப் பெறுகிறான்.

மனக்கட்டுப்பாடு நமது பழக்க வழக்கங்களாக மாற வேண்டும். 'காலையில் எழுவேன்' என்பது, 'பிரார்த்தனை செய்வேன். உடலுக்குப் பயிற்சி அளிப்பேன்' என்பது, 'சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவேன்' என்பது'! 'நேராநேரத்திற்கு செல்வேன்' என்பது, எடுத்த காரித்தை முடிப்பேன் என்பது, பொய் சொல்ல மாட்டேன், திருடமாட்டேன், ஏமாற்ற மாட்டேன் என்பதெல்லாம் மன எண்ணங்களிலிருந்து மன உறுதியிலிருந்து மனிதனின் செயல்களாகி பழக்கங்களாகும் போது, இந்தப் பழக்கவழக்கங்கள் நமது குணங்களாக நம்மை வாழவைக்கின்றன. வாழ்க்கை எளிதாகிறது.

இந்தக் குணங்களைப் பெற்றிருப்பதற்காக நாம் பெருமைப் படுகிறோம். ஊர் உலகம் "அவர் இப்படிப்பட்ட மனிதர்!" என்று சொல்லிப் பெருமைப்படுத்துகிறது,

சாதனைகள் புரிவது என்பதை மனக் கட்டுப்பாட்டின் மூலம் ஒரு பழக்கமாக்கிவிட முடியும். இதைத்தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

எண்ணம் என்ற ஆறு சரியாகத் தேக்கி வைக்கப்பட்டு சரியானபடி செலுத்தப்படும்போதுதான் சக்தி கிடைக்கிறது. தறிகெட்டுப் பேராறாக ஓடும்போது அல்ல. எண்ணம் கட்டுப்பாடுடன் செயல்படவேண்டும்.

இதைத்தான் கூறுகிறார் வள்ளுவர், "எண்ணுபவர்கள் எண்ணியதை அடையலாம். அவர்கள் மட்டும் மன உறுதி—மனக்கட்டுப்பாடு படைத்தவர்களாக இருக்கும் போது" என்று.

கட்டுப்பாடு, ஒழுங்கு, பொறுப்புணர்ச்சி என்று பல்வேறு வார்த்தைகளில் கூறப்படும் இந்தக் குணம்தான் நம்மை ஒரு பதப்படுத்தப்பட்ட எஃகினால் ஆன கத்தி போல் கூர்மையாக மனிதனை வைத்திருக்கிறது.

ரே. கிராக் என்ற பிரபல அமெரிக்க உணவு விடுதியாளர் சுமார் பத்தாயிரம் உணவு விடுதிகளை உலகெங்கும் திறந்திருக்கிறார், மெக்டானல்டு என்கிற பெயரில். அவர் வெற்றியடைந்ததன் ரகசியம் என்ன? மிக அடிப்படையான விஷயம்தான் அவருக்கு உதவியது. சாப்பிடும் இடத்தை பாத்ரூம் உட்பட—சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் எனபது முதல் விதி; இரண்டாவதாக உணவுப்பொருட்களை சுடச்சுட கொடுக்க வேண்டுமென்ற நியதி; மூன்றாவதாக ஒரு நியாயமான விலைக்கு, எல்லோரும் வாங்குகிற விலையில்

பொருள்களைக் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு விதி; கேட்பதற்கு சாதாரண விஷயங்கள் என்று யாரும் அலட்சியப்படுத்திவிடும் கருத்துக்களான இவற்றை வேதவாக்குபோல நடைமுறையில் கடைப்பிடித்த போது அதிசயங்கள் நிகழ்ந்தன. என்ன அதிசயம்? உணவு விடுதியின் வளர்ச்சியும் வருமானமும் ஆகாயத்தைத் தொட்டன! அதைத்தான் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உணவு உட்கொள்வதில் ஒரு கட்டுப்பாடு. நன்றாக இருக்கிறது, எனக்குப் பிடித்திருக்கிறது என்று அளவுக்கு மீறி உண்டோமானால் நம் உடல்நிலை என்ன ஆகும்? அப்படி உண்டு தொந்தி பெருத்திருந்த ஒருவர் ஒரு துறவியின் காலில் விழப் போனபோது அந்தத் துறவி அவர் கையைப் பிடித்துக்கொண்டு சொன்னார். 'காலில் விழாதே! விழுந்தாயானால் உன் தொப்பையைத் தூக்கிக் கொண்டு உன்னால் எழுந்திருக்க முடியாது. உன்னை என்னாலும் தூக்கிவிட முடியாது!'

தொந்தியும் தொப்பையுமாக இருக்கும் துறவிகளைப் பார்த்திருக்கிறீர்களா? மனத்தைக் கட்டுப்படுத்தி துறவறத்தில் ஈடுபடுத்தியவர்களால் மற்றைய ஆசைகளில் கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியவில்லை! மனக் கட்டுப்பாடு செயல்படும் விதங்களைப் பாருங்கள்!

நம்மை நாமே நிர்வகித்து. சுய கட்டுப்பாடுடன் வாழ்கின்ற தன்மை இருக்கிறதே, அதுதான் வாழ்வில் அதி முக்கியமானது என்பதை வயதேற ஏற நான் அதிகம் உணர்கிறேன்! என்கிறார் ரே. கிராக்.

எதையும் சிறப்பாகச் செய்வது எதைப் பொறுத் திருக்கிறது? என்ற ஒரு கேள்வியை கேட்டுவிட்டு கார்டனர் என்ற அமெரிக்க சிந்தனையாளர், அவரே

பதிலும் கூறுகிறார். லட்சியத்திலே உடும்புப் பிடியும் சுயகட்டுப்பாடும்தான் நம்மை உயர்வுக்கு அழைத்துச் செல்கின்றன.

கட்டுப்பாட்டிற்கு பல எதிரிகள் இருக்கிறார்கள். ''தள்ளிப்போடு! பிறகு பார்த்துக் கொள்ளலாம்!'' என்று திருநாளைப்போவாரைப் போல விஷயங்களை ஒத்தி வைக்கும் சோம்பேறித்தனம், பயம், இருக்கிறதே அது தான் முதல் எதிரி.

ஒரு காரியத்தில் இறங்கி அதைக் கொஞ்சம் செய்ய ஆரம்பித்தவுடன் அடேடே? இவ்வளவு இலகுவான காரியமா? இதற்குப் போய் இவ்வளவு நாள் பயந்து கொண்டிருந்து விட்டேனே! என்ற நகைப்பும் மகிழ்வும் நம் முன்னே எழும். கட்டுப்பாட்டின் முதல் நண்பன் இன்றே செய். ஒத்திப் போடாதே என்பது தான்.

சபலம் ஒரு எதிரி; மகா பெரிய எதிரி. அல்வாவைக் கண்டால், நீரிழிவு வியாதி உள்ளவர்களுக்கு ஒரு ஆசை—சாப்பிடவேண்டும் என்று எழுகிறதே அதைத்தான் சபலம் என்கிறோம். அழகான பெண்ணைப் பார்த்தால் ஒரு ஏக்கப் பெருமூச்சும் காம இச்சையும் எழுகிறதே அதையும்—வாய்ப்புக் கொடுத்தால் நிலை தடுமாறி தன்கட்டுப்பாட்டை இழக்கத் தயாராயிருக்கும் மனநிலை இருக்கிறதே—அதைத்தான் சபலம் என்கிறோம்.

துறவறம், ஏகபத்தினி விரதம், பிரம்மசரியம் என்பதெல்லாம் கட்டுப்பாட்டின் உச்சங்கள் தான். ஆனால் சபல எண்ணங்களை விரிவுபடுத்தாமல், அதில் ருசிக்காமல் அதை அகற்றும் குணம் இருக்கிறதே அது தான் கட்டுப்பாட்டின் ஆரம்பம். சபல சித்தமுடையவர்கள் அந்தச் சபல எண்ணங்களில் தோய்கிறார்கள்;

மூழ்குகிறார்கள். அதன் விளைவாக தங்கள் உடலையே உணர்ச்சிக்குள்ளாக்கிக் கொள்கிறார்கள். நம்மை ஒரு மூன்றாவது மனிதனாகக் கருதி நமது சபல எண்ணங் களை விரிவு படுத்தாமல் அதைப் பார்த்து நகைக்கும் ஒருகுணம் இருக்கிறதே அதுதான் கட்டுப்பாட்டின் நண்பன்.

அடுத்ததாக சமுதாயத்திலும் தனி மனித வாழ்விலும் நாம் காணும் குறை அக்கப்போர், வம்பு, கிசுகிசு பேசுதல் தான். இப்போது இதை எல்லாம் ஊரறிய பத்திரிகை யிலேயே போட்டு இதை மனித வாழ்வின் ஏற்றுக்கொள்ள வேண்டிய பகுதியாக்கி விட்டார்கள். நல்ல பத்திரிகை யாளர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும். ஆங்கிலத்தில் இதை (GOSSIP) வதந்தி, கிசுகிசு என்று சொல்வார்கள். இதன்மூலம் மனிதன் பிறரது உரிமைகளில் தலையிடு கிறான். தன்னையறியாமல் மன அளவில் பிறரது உரிமை களில் தலையிட்டு, அவர்களது மதிப்பை பொதுமக்கள் மத்தியில் இறக்குவது பாபகரமான செயலாகும். ஒரு மனிதனை, ஒரு நடிகையை—கல்லால் அடிப்பதற்கு சமானம் இது. ஆனாலும் சிரித்துக் கொண்டே மகிழ்ச்சி யினூடே இதைச் செய்கிறோம் தனி மனித கட்டுப் பாட்டை மீறி பிறரது உரிமைகளில் தலையிடும் செயல் இது. இதன் பலன் என்னவென்று நீங்கள் கேட்கலாம்.

எந்த எண்ணமும் அதற்கேற்ற எண்ணங்களையும் செயலையும் சூழ்நிலையே உருவாக்குகிறது. எந்த எண்ணமும் துவங்கியவனையே வந்தடைகிறது என்ற இயற்கை விதிகளை உணர்ந்துகொண்டீர்களானால், உங்களது புற சூழ்நிலை உங்களது எண்ணங்களால்,

அவ்தூறுகளால் எப்படி பாதிக்கப்படும் என்பதை உணர்வீர்கள். இது நுட்பமான விஷயம்.

கட்டுப்பாடு, கட்டுப்பாடு என்று சொல்லிக்கொண்டு வாழ்வைப் போட்டு சட்டதிட்டங்களால் பிணைத்து நெருக்கி சிறைக் கைதிபோல் ஆக்கிக்கொள்வதா என்று சிலர் குமுறுகிறார்கள். வாழ்க்கை வாழ்வதற்கும் அனுபவிப்பதற்கும் தான் அமைக்கப்பட்டிருக்கிறது—அதாவது பிறரது உரிமைகளில் தலையிடாத வரையில்—இயற்கை விதிகளுக்கு எதிராக செயல்படாத வரையில், மேற்கூறிய கட்டுப்பாட்டை மதிக்காதவர்கள், இதை எல்லாம் மீறுகிறார்கள். அதற்குரிய பலனைப் பெறுகிறார்கள்.

ஆனால் சமூகத்தில் கட்டுப்பாடு என்கிற பெயரில் அநீதிகள் நியாயப்படுத்தப்படுகின்றன; சம்பிரதாயம் என்ற பெயரில் பல கடைப்பிடிக்கப் படுகின்றன. அத்தகைய மூட நம்பிக்கைகளை—அநியாயங்களை மீறுபவன், புரட்சிக்கு—நன்மைக்கு வித்திடுகிறான். அது மீறப்பட வேண்டிய கட்டுப்பாடு!

கட்டுப்பாடு என்பது ஒரு ஆக்க சக்தி. நமது மன சக்தியை ஒரு பயன் கருதி திட்டமிட்டு செலவிட்டு பலன் பெறுவதாகும்.

கட்டுப்பாட்டின் மறு எல்லை சுதந்திரம். சுதந்திரம் என்ற பெயரில் நாம் ஆடைகளை அவிழ்த்துப்போட்டு விட்டு எப்படி தறிகெட்டு ஓடுவதில்லையோ, அதே போலவே சுதந்திரத்திற்கும் ஓர் எல்லை இருக்கிறது. கட்டுப்பாடு—சுதந்திரம்; ஒழுங்கு—பொறுப்புணர்ச்சி; மன உறுதி—ஆசைகள் என்பவற்றிற்கு ஒரு உறவுநிலை உள்ளது. துலாக்கோல்போல ஒரு சமநிலை உள்ளது.

அதை உணர்ந்து செயல்படும்போது நம்மால் அதிக சாதனைகளைப் புரிய முடிகிறது.

அணுவைப் பார்த்தோமானால் அதற்குள்ளே ஏற்படும் ஓட்டம் எல்லாம் ஒரு ஒழுங்கில்தான் நடைபெறு கிறது. நமது உடலை எடுத்துக் கொண்டோமானால், கை, கால், கண், மூக்கு, வாய் என்று எல்லாம் இணைந்து ஒரு காரியத்திற்காகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன.

ஒரு சின்னஞ்சிறு தும்பைப்பூகூட ஒரு நியதியில், ஒரு பருவத்தில், ஒரு காலத்தில்தான் பூக்கிறது. உள்ளுக் குள்ளே ஒரு ஒழுங்கு அதற்குள் இருக்கிறது.

நாட்டுப் பொருளாதாரம் இன்று சீர் கெட்டு இருக்கிறதென்றால் அரசாங்கத்தின் கட்டுப்பாடில்லாத செலவினங்கள்தான் காரணம். கட்சிகள் உடைகின்றன. சட்டசபையில் அமளி என்றால், கட்டுப்பாடின்மைதான் காரணம். கட்டுப்பாட்டை மீறுபவன் தண்டிக்கப் படுகிறான். சட்டங்கள் தண்டிக்கின்றன. இயற்கை தண்டிக்கிறது.

நாட்டிலே பஞ்சம், பசி, பட்டினி, ஏழ்மை, வேலை வாய்ப்பின்மை என்றெல்லாம் விளைவுகள் இருக்கு மானால், எந்தக் கட்டுப்பாடுகள், தனிமனித வாழ்க்கை நெறிகள், சமுதாய சட்டங்கள் மீறப்பட்டன என்று நாம் ஆழமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சுதந்திரம் அதிகம் கொடுத்து வளர்க்கப்பட்ட குழந்தைகளைவிட, கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள்தான் சமுதாயத்தின் சாதனையாளர்களாக மலர்ந்தன.

"பொருளாதாரத்திலும், அரசியலிலும், ஒருசுதந்திர மனிதனுடைய கட்டுப்பாடு, ஒரு படை வீரனுடைய கட்டுப்பாட்டைப் போலிருக்க வேண்டும். இல்லா விட்டால் அந்தச் சுதந்திரம் அழிந்துவிடும்," என்கிறார் ஜனாதிபதியாக இருந்த ஜான் கென்னடி.

சுய கட்டுப்பாட்டைத் தனிமனித வாழ்க்கை—நெறிகள் என்று நான் கூறுவதுண்டு. இல்லறத்திலே துறவறம்; சுதந்திரத்திலே கட்டுப்பாடு! இதுதான் அந்த வாழ்க்கை நெறி.

13. முன்னுக்கு வர—மூன்று விஷயங்கள்

ஒரு லட்சியம்—ஒரு காரியம்—ஒரு தொழில் வெற்றி பெற நாம் முக்கியமாக மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டும்

லட்சியத்தில் தெளிவு.

சோர்ந்து போகாமல், திரும்பத்திரும்ப முயலுதல்.

உருப்படியான செயல்.

இந்த மூன்றையும் நமது சொந்த வாழ்க்கையிலிருந்து, செய்யும் தொழிலிலிருந்து, நாட்டு பிரச்சினைகள் வரை நாம் பொருத்திப் பார்க்கலாம்.

பெரும்பாலானவர்கள் பணக்காரனாக வேண்டும், புகழ் பெற்றவனாக வேண்டும், நோபெல் பரிசு பெறவேண்டும், நாட்டுத் தலைவனாக வேண்டும் என்று பெரும்போக்காக, மேலெழுந்தவாரியாக ஆசைப்படு கிறார்கள். "யாராவது வெள்ளித்தட்டில் ஒரு ராஜ குமாரியை வைத்து எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்வார்கள்" என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். மேலெழுந்தவாரியாக 'நானும் எழுதினேன்' என்று எழுதப்படும் புத்தகங்களைப் பார்த்திருப்பீர்கள். அவற்றில் 'கனம்' இருக்காது. படித்து முடித்தவுடன் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கு மாறாக 'குப்பை' என்று கோபப்படுவோம்.

மேலெழுந்தவாரியாக பத்திரிகை நடத்துவோர் இருக்கிறார்கள். மேலெழுந்தவாரியாக சாமியாராகி யுள்ளோர் நம்மிடையே உலவுகிறார்கள். கர்வித்

துணியும் தாடியும் விபூதியும் போதும் என்று மக்களை ஏமாற்றுபவர்கள் இவர்கள்.

இத்தகைய ஆஷாடபூதிகளை நாம் எல்லாத் துறையிலும் காணலாம். ஏனெனில் இவர்களுக்கு தாங்கள் கொண்ட லட்சியத்தில் தெளிவிருக்காது; ஆழ்ந்த நம்பிக்கை இருக்காது; சந்தேகத்துடன் காவி வாங்கிக் கொண்டவர்கள் இவர்கள். 'காஷாயம்' வாங்கிக் கொண்டவர்களெல்லாம் சாமியாராகிவிட முடியாது. துறவியாக, கடும்தவம் செய்யவேண்டும். மனத்தை ஒருமுகப் படுத்தவேண்டும். புற நிகழ்ச்சிகளிலிருந்தும் நிலைமைகளிலிருந்தும் கடந்து அப்பாற்போகும் மனப் பக்குவம், பசி, தாகம், தூக்கம், பிறர் கூற்று என்று எதையும் லட்சியம் செய்யாத உள்ளமும் வேண்டும்.

பெண்கள் கல்லூரிமுன் மாலைவேளைகளில் நின்று ஏக்கப் பெருமூச்சுவிடும் என் நண்பன் கனக சுந்தரத்தை நினைத்துப் பார்க்கிறேன். "தம்பீ! இப்படி மொத்தப் பெண்களையும் எண்ணி ஏக்கப்பட்டால் எதுவும் நடக்காது. யாரையாவது குறிப்பாக, வசந்தாவையாவது, சரோஜாவையாவது காதலிக்க—சந்திக்க—பேசிப்பார்க்க, முயல்.'' என்று யாரும் அவனுக்கு எடுத்துச் சொன்ன தில்லை. முடிவில் தினம் இப்படி நின்று மூன்றாண்டுகளை வீணாக்கிவிட்டு பட்டம் வாங்காமல்போனபோது அவனது பெற்றோர் கிராமத்தில் வளர்ந்த கோடிவீட்டு குண்டுமணியை அவனுக்குக் கட்டிவைத்தார்கள். மேலெழுந்தவாரியாக எண்ணுபவர்கள் கதை—கனக சுந்தரம்—குண்டுமணி கதைதான். ஆசை ஒன்றாயிருக்கும்; அடைவது வேறொன்றாயிருக்கும்.

மேலெழுந்தவாரியாக எண்ணுபவர்களுக்கு தங்கள் மீதே நம்பிக்கையில்லை. அவர்கள் பொதுவாக

குழப்பவாதிகள். ஆயிரம் நேர் யோசனைகளையும் எதிர் யோசனைகளையும் மனத்தில் போட்டுக் குழப்பிக் கொள்வார்கள். செயல்—காரியத்தை செய்ய முயலுவது —அவர்களுக்கு பரம விரோதம். இவர்கள் 'சோம்பேறி சாமியார்கள்', 'பொறுப்பற்ற பொதுநலவாதிகள்'.

நமது ஊரில் ஒரு அரசியல் தலைவர் இருந்தார். அவருக்குப் பதவிக்கு வரவேண்டுமென்ற ஆசை இருந்ததே தவிர, ஏன் வரவேண்டும் என்ன செய்ய வேண்டும் நாட்டுக்கு, என்பதைப்பற்றி லவலேசமும் 'ஐடியா' கிடையாது. ஆகவே யார், எதை வந்து சொல்கிறார்களோ, அதையே மறுநாள் கட்சிக் கொள்கையாக—திட்டமாகப் பேசுவார். கொஞ்சகாலம் அரசியல் சதுரங்கத்தில் அமைச்சர்களை இடம் மாற்றுவதில் காலம் கழிந்தது. கொஞ்சகாலம் அந்தப்புர அரசியலில் காலம் சென்றது. கொஞ்சகாலம் மானசீக எதிரியை உருவாக்கிக்கொண்டு அவருடன் போராடிக் கொண்டிருந்தார். எதைச் செய்தால் பிறர் மெச்சுவார்கள் என்று எல்லாக் காரியங்களையும் செய்தார். தன்னுடைய சொந்த புகழ், புகழ் என்று புகழை நோக்கி காரியங்களை செய்து கொண்டிருந்தார்.

இதனால் நாடு என்னாயிற்று? 'களப்பிரர்களின் இருண்ட காலம்' என்று சரித்திராசிரியர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள்! நாடு தொழில்வளத்தில்,—தனி மனித வருமானத்தில்—பின்னோக்கிப் பின்னோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

லட்சியமில்லாத தலைவன்! தெளிவு இல்லாத மனிதன்! கொள்கையில்லாத கூட்டம்! இப்படி முடிந்தது ஒரு தலைவனது ஆட்சி.

அரசியல் தலைவன் என்று மட்டுமல்ல. அந்தக் காலத்தில் பி.ஏ. படித்துவிட்டு ராமசாமி சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகத்தில் குமாஸ்தாவாகப் போய்ச் சேர்ந்தார். ராமசாமி 57 ஆவது வயதில் குமாஸ்தாவாக 'ரிடைய' ரானார்!

அவருக்கு ஆசை இருந்தது. ஆனால் இந்த உலகமே தன் முன்னேற்றத்திற்கு தடைபோடுவதாக குற்றம் சொல்லிக்கொண்டிருந்தார். தான் பார்த்த வேலை "உயர்வுக்கு வழியில்லா வேலை" என்று தெரிந்தபோதும் அதை உதறிவிட்டு வெளியேவர ராமசாமிக்கு தைரியம் இல்லை. சப்-ரிஜிஸ்டிரார் ஆபீசானாலும் சரி—அரசிய லானாலும் சரி துணிந்து முடிவெடுத்து களத்தில் இறங்காதவரை—சதா, பிறர் செய்வது தப்பு—உலகம் எனக்கு எதிரி என்று சொல்லிக் கொண்டிருக்கும்வரை ராமசாமி கோப சாமியாகவே போய்ச்சேர்வார்! சேர்ந்தார்.

தம் லட்சியத்தில்—எடுத்த காரியத்தில்—செய்யும் தொழிலில் தெளிவில்லாதவர்கள்—சில சமயம் அதில் இறங்கினால்போதும் என்று எண்ணிக்கொண் டிருப்பார்கள். அதாவது ரயிலில் ஏறி உட்கார்ந்தால் போதும், நாம் செல்லவேண்டிய ஊர் ரயிலுக்குத் தெரியும் என்று எண்ணிக்கொண்டிருப்பார்கள். கடவுளை வேண்டும்போதுகூட இவர்கள், "ஆண்டவனே, உனக்குத் தெரியாதா, எனக்கு என்ன வேண்டுமென்று?" என்று முறையிடுவார்கள். "தெளிவான லட்சியத்தை—இது, இன்னது இப்போது என்ற காலவரையறையுடன் நாம் நம் மனத்திற்கு சொல்லவேண்டும்" என்கிறார்கள் மன இயல் நிபுணர்கள்.

"அச்சடிக்கும் யந்திரம் இருக்கிறது. தாளைக் கொடுத்துவிட்டால் பத்திரிகை வந்துவிடும்" என்று எண்ணினால் எப்படி?

சிலருக்கு லட்சியம் இருக்கும். ஆனால் போகும் பாதையைப் பற்றியே கடைசி நாள்வரை சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். நான் வேலை பார்த்த கல்லூரியில் கல்வி மாற்றங்களை ஏற்படுத்த பெரிய திட்டம் வகுத்தார்கள். ஆனால் ஒவ்வோராண்டும் திட்டத்தைப் பேசிக்கொண்டிருந்தார்களே ஒழிய திட்டத்தை, நிறைவேற்றுவதில் ஒருசிறிதும் கவனம் செலுத்தவில்லை. எப்படி?!

குழப்பத்தை விட்டொழிப்பது எப்படி? எதையாவது ஒன்றை நம்பி இறங்கி அது பலன் தருமா என்று பார்ப்பதுதான் வழி. அது வேலை செய்யாவிட்டால், வேறு ஒரு வ்ழியில் பிரச்சனையை அணுகுவதுதான் முறை. செயல்தான் குழப்பத்தைப் போக்கும்! குமைவது அல்ல.

நமக்கு, நம் லட்சியத்தில் எது முக்கியம் என்பதைப் பற்றிய நிச்சயம் வேண்டும். வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது முக்கியமா? இல்லை இன்னும் நிறையக் கல்லூரிகளை திறந்து கொண்டிருப்பது முக்கியமா என்பதை நாம் நாட்டுப் பிரச்சனையாக, யோசிக்க வேண்டும். சாமான்கள் விற்பனையாகும் போதுதான்—பொருள்களை உற்பத்தி செய்வது புத்திசாலித்தனமான காரியமாக இருக்கும். மற்றபடி விற்பனை ஆகாதபோது பொருளை உற்பத்தி செய்து கொண்டுபோனால் எப்படி? அப்படிச் செய்யும்போது உற்பத்தியான பொருள் தேக்கம் ஏற்படும். நமது ஊரில் 'திறமை தேக்கம்'!

லட்சியங்களைக் கண்டு பயப்படுவார்கள் பலர். "ஏன் இதை நம் தலையில் வைத்துக்கொண்டு திண்டாடிக் கொண்டிருக்க வேண்டும்? இதற்குப் பதில் மக்கள் கவனத்தை திசை திருப்பும் காரியத்தில் செலவிடுவோம்" என்பார்கள் இவர்கள். திண்டுக்கல் என்ற, ஊர் பெயர் நன்றாயில்லை என்றோ, எந்த தலைவர் எந்த குச்சிப்புடியிலிருந்து பிறந்து வந்தார் என்றோ நாட்டு மொத்த மக்களையும் ஆராய்ச்சியில் ஈடுபடுத்துவார்கள் இவர்கள்.

"பஞ்சாப் மாநிலத்தில் நமக்கு விற்பனை குறைவாக இருக்கிறது. என்னுடைய நாலு விற்பனையாளர்களையும் அழைத்துக்கொண்டு பஞ்சாபில் ஒருமாத முகாம் போடப்போகிறேன். விற்பனையை கூட்டப் போகிறேன்!" என்று புதிய பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்கிறான் ஒருவன். அவன் தலைவன். முன்னுக்கு வருபவன். பொறுப்பைத் தட்டிக் கழிப்பவர்கள், தெளிவில்லாதவர்கள்—துணிவில்லாதவர்கள்.

தாழ்வு மனப்பான்மை, பயம், படபடப்பு, நிரந்தர சோகம் என்று பல விஷயங்கள் நமது லட்சியத் தெளிவைப் பாதிக்கின்றன.

இரண்டாவது விஷயத்திற்கு வருவோம்.

பலரும், சிறு தடங்கல்கள் வந்தவுடன் சோர்ந்து போகிறார்கள். பெரிய திட்டத்தையே கைவிட்டு விடுகிறார்கள்.

சோர்வு உடலின் இயல்பு. சோர்வைப் போக்கத் தான் இரவு நேரத்தில் உடல் தூங்கப்போகிறது. அதே போல உள்ளமும் பல சமயம்—அசதி கொள்ளும், அதைரியம் ஏற்படும். இது இயல்பு. அந்த சமயத்திலெல்லாம் நாம் பல்லைக் கடித்துக்கொண்டு

காத்திருக்க வேண்டும், மீண்டும் நமக்கு "இரண்டாவது காற்று" எனப்படும் ஒரு உற்சாகம் பிறக்கும் வரை காத்திருக்க கற்றுக்கொள்ளவேண்டும். உள்ளச் சோர்வு ஏற்படாத நிர்வாகியையோ ஞானியையோ நான் பார்த்த தில்லை.

மனநிலையை உற்சாகமாக வைத்திருப்பவர்கள் தான் எளிதில் வெற்றியடைகிறார்கள். துக்கமாக, சோகமாக உட்கார்ந்திருப்பதும் ஏக்கப்பாட்டுபாடுவதும், புலம்புவதும் உங்கள் கையில்தான் இருக்கிறது. குதிரையைத் தட்டிக் கொடுப்பதைப்போல, நம் மனத்தைத் தட்டிக் கொடுத்து, கடிவாளத்தை வெட்டி ஓட்டிச்செல்வதும் நம் கையில் தான் இருக்கிறது. நீங்கள் ஒரு விற்பனையாளராகப் போனால், சோகத்துடனும், துக்கத்துடனும், கோபத் துடனும், அலட்சியத்துடனும் ஒரு தலை துவட்டும் துண்டைக்கூட நீங்கள் விற்பனை செய்ய முடியாது. நிலைமை அப்படி இருக்கும்போது ஏன் நீங்கள் உங்களை உற்சாகப்படுத்திக் கொண்டு, பிறரை உற்சாகப் படுத்தும் ஒரு சிறு சொல்லுடன், புன்முறுவலுடன், நல்ல மனநிலையுடன் விஷயங்களை அணுகக் கூடாது?

மேலதிகாரியாக இருந்தால் கடுகடுப்பாக இருக்க வேண்டுமென்று யார் சொன்னது? நீங்கள் அமைச்ச ரானால் கீழே உள்ள போலீஸ் அதிகாரியை தரக்குறை வாகப் பேசலாம் என்று யார் சொன்னது? முதல்வரானால் கல்லூரி முதல்வரை ஒருமையில் அழைக்கலாம் என்று யார் கூறினார்கள்? நல்ல மனநிலை உங்களை உயர்வில் வைக்கும்.

உற்சாகமான மனநிலை இரண்டு பக்கமும் செல்லும் சாலை ஓட்டம்போல. "யாரையாவது நல்ல வார்த்தை சொல்லிப் பாராட்டிப்பாருங்கள்" என்று கூறுகிறார்கள்

அனுபவசாலிகள். செய்து பாருங்கள். உங்களுக்கும் உற்சாகம் பிறக்கும்; அவர்களும் உற்சாகமடைவார்கள்.

விடாமுயற்சியைப்பற்றி, ராபர்ட் புரூஸ்—சிலந்தி கதையிலிருந்து, தெரிந்து கொள்ளவில்லையா? ஏதாவது ஒரு கதையை அல்லது ஏதாவது ஒரு வாழ்க்கைச் சம்பவத்தை நினைத்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் நம்முள் புது நம்பிக்கை பிறக்கும்; புது ஜீவன் பிறக்கும்.

பிரபல எழுத்தாளர் ஏ.ஜே. கிரானின் தான் எழுதிய நாவலை குப்பைக் கூடையில் தூக்கிப்போட்டுவிட்டு, சுமை நீங்கிய விடுதலை உணர்வுடன் கிராமத்து சாலையில் நடக்கிறார். அங்கே ஓர் உழவனை சந்திக்கிறார். அந்த உழவன் காட்டைக் கழனியாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் கூறுகிறான். இந்தக் காட்டு நிலத்தை என் பாட்டனார் பண்படுத்தினார். என் தந்தையும் பாடுபட்டார். நானும் முயல்கிறேன். முயன்றால் இங்கே ஒரு அருமையான விளைச்சல் நிலம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்! அதற்காகத்தான் முயன்றுகொண்டிருக்கிறேன் என்கிறார் வியர்வை சொட்டும் முகத்துடன்.

மனம் சோர்ந்த அந்த எழுத்தாளர் திரும்ப வீட்டுக்குப் போனார். குப்பைக் கூடையில் மழையில் நன்னைந்துபோன நாவலை எடுத்து அடுப்பின்மீது காயவைத்தார். பக்கம் பக்கமாக எடுத்து திருத்தினார், அடித்தார், மீண்டும் எழுதினார். எழுதி புத்தகக் கம்பெனி ஒன்றிற்கு அனுப்பி வைத்துவிட்டு மறந்து போனார். ஆறுமாதம் கழித்து ஒரு தந்தி வந்தது. ''ஐயா! உங்கள் நாவல் அற்புதம்! பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. உடனே வரவும்!''

இது உண்மைக் கதை.

அவர் பெயர் ஏ.ஜே.கிரானின்.

எடுத்த காரியத்தைப் பற்றி அயராதீர்கள். சளைக்காதீர்கள்.

மனம் சளைக்காதபோது, செயலில் சளைக்கமாட்டீர்கள், ஒரு காரிய வெற்றியும் சரி, வாழ்வும் சரி—ஒரு தொடர்ந்த முயற்சி, "கடமையைத்தான் நாம் செய்யலாம்; கடமையைத்தான் நாம் செய்ய வேண்டும்" என்று பகவத்கீதை கூறவில்லையா ஆகவே நாம் சளைக்காது முயன்றுகொண்டே இருக்கவேண்டும்.

மூன்றாவதாக: செயல்.

"ஆசைகளெல்லாம் குதிரைகளாக மாறக் கூடுமானால் பிச்சைக்காரர்கள்கூட சவாரி செய்வார்கள்" என்று ஒரு அரேபிய பழமொழி உண்டு. வெறும் ஆசை—வெறும் கனவு எந்தப் பலனையும் தராது. பெரும் பெரும் மாளிகைகள் ஒவ்வொரு செங்கற்களால் தான் அடுக்கப் பட்டு கட்டப்படுகின்றன என்றான் ஓர் அறிஞன். சின்னச்சின்ன செயல்களின் கூட்டுமுயற்சி பெரிய சாதனையாக மலரும்.

சிந்தனையையும் கனவையும் சோம்பேறித் தனத்தின் புகலிடமாக மாற்றாதீர்கள். உற்றாருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். உங்கள் மனைவிக்கு உதவியாக வீட்டுவேலை செய்யுங்கள். தோட்டத்தில் சென்று ஒரு செடியை நடுங்கள். ஒரு ஏழைச் சிறுவனுக்கு, ஒரு முதியவருக்கு சிறு காரியம் செய்ய முடியுமானால் செய்து பாருங்கள்.

செயல். செயல். செயல். அது ஆக்க சக்தி படைத்தது. புயத்தை போக்கும் சக்திகொண்டது. அது

கொடுக்கும் நிறைவு அபாரமானது. செயல்—நீங்கள் விரும்பும் லட்சியத்தை நோக்கி உலகின் எல்லா சக்தி களையும் ஓடவைக்கும் தன்மை கொண்டது.

தெளிவான லட்சியம், சளைக்காத மனம், உருப் படியான செயல்—இவை மூன்றும் உங்கள் சொந்த வாழ்க்கையையும், நாட்டு வாழ்க்கையையும், நல்லபடியாக அமைக்கும்.

உங்களது லட்சியங்களுடன் இந்த மூன்று விஷயங் களையும் பொருத்திப் பாருங்கள். நீங்கள் எங்கே இருக் கிறீர்கள் என்பது புரியும். மேலே போக என்ன செய்ய வேண்டும் என்பது புரியும்.

14. வியூகம்

தொழிலிலும், அரசியலிலும் இன்று அதிகமாகப் பேசப்படும் ஒரு வார்த்தை (Strategy) என்பதுதான். அது என்ன வியூகம்? வாழ்க்கைக்கு எவ்வளவு தூரம் இது அவசியம்? எத்தகைய பலனை அது அளிக்கும்?

"வச்சகுறி தப்பாது" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். இலக்கை—இலட்சியத்தை அடைய நாம் போடும் திட்டங்களின் உயர் தன்மைதான் வியூகம். "அபிமன்யுவின் வியூகம்" என்பதைப்பற்றி மகாபாரதத்தில் படித்திருக்கிறோம். வெற்றியடைய ஒரு அருமையான திட்டத்தை வகுக்கிறோமே அதைத்தான் வியூகம் என்கிறோம்.

தொழில் துறையில் வரவு செலவுக்கணக்கு, 'அடுத்த இரண்டாண்டுகளுக்கு எப்படி இருக்கும்?' எனத்திட்டமிடுவதை பட்ஜெட் என்கிறோம். பட்ஜெட்டிலிருந்து ஒரு மேல்படியில் உள்ள கணிப்பைத் திட்டம் என்று கூறுகிறோம். திட்டத்திற்கு ஒரு மேல்படி உயர் நிலையிலுள்ள ஒரு மனக் கணிப்பை வியூகம் என்கிறோம்.

இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் இதன் பல்வேறு நடைமுறைப் பிரயோகங்களைக் கவனிக்கவேண்டும். அவை: அரசியல் வியூகம்; தொழில் வியூகம்; போர் வியூகம்; விளையாட்டு வியூகம்.

நம் வாழ்வே சில சமயம் தொழில் போலவும், போர் போலவும், விளையாட்டு போலவும் அரசியல் போலவும் அவ்வப்போது உரு எடுக்கிறது. ஆகவே

வாழ்க்கைக்கு எல்லா வகை வியூகங்களும் தேவை; வியூகத்தின் வெவ்வேறு நிலைகளை யுக்தி என்றும், தந்திரம் என்றும், சாகசம் என்றும் அழைக்கிறோம். மிக அழகான, வலிவான வார்த்தையில் கூறவேண்டுமானால் இதைச் சாணக்கியம் என்றும் கூறலாம். மேனாட்டு அரசியல் அறிஞர்கள் இதை 'மாக்கிய வெல்லியம்' என்று இத்தாலிய நாட்டு அரசியல் அறிஞரின் பெயரால் அழைப்பதுமுண்டு.

புதுதில்லியில் சாணக்கியபுரி என்ற ஒரு நகர்ப் பகுதியே இருக்கிறது. வெளிநாட்டுத் தூதுவர்கள் வசிக்கும் பகுதி அது. வெளிநாட்டுத் தூதுவர்களை ராஜதந்திரிகள் என்று பொதுப்படையாக அழைப்பதுண்டு. எவ்வளவு பெரிய சாணக்கியபுரி இருந்தாலும் தில்லித் தலைவர்கள் சாணக்கியம்—ராஜதந்திரம் என்ற ஏதுமின்றி முடிவெடுப்பதுண்டு; அதன் பலனை அனுபவிப்பதுமுண்டு!

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியை பங்களாதேஷ் என்ற ஒரு தனி நாடாக்கினாரே திருமதி இந்திராகாந்தி அது அரசியல் சாணக்கியம். எந்த ஒரு வல்லரசும் வாலாட்ட முடியாதவாறு செய்து, எந்தவிதமான பலன்களையும் ஏற்றுக்கொள்ளும் துணிவுடன் இந்தியப் படைகளை அனுப்பினார் நமது முன்னாள் பிரதமர். அகதிகள், ராணுவ அடாவடித்தனம் என்றெல்லாம் நடந்தும், சில ஆண்டுகள் காத்திருந்து, உலகின் அனுதாபத்தைப் பெற்று, பாகிஸ்தானத்தை இரு கூறாக்கியது—திருமதி காந்தியின் சாணக்கியம்—அரசியல் வியூகம்.

ஓர் உணவுக் கம்பெனி ஒரு கேக் மாவை விற்பனைக்குக் கொண்டு வந்தது. கேக் மாவுடன்

தண்ணீர் கலந்து ஊற்றி அடுப்பில் வைத்துச் சுட்டால் கேக் கிடைக்கும். இது நல்ல கேக்தான். எளிதான முறை; நயமான விலையும் கூட; எனினும் பெண்மணிகள் விரும்பி இந்த 'கேக் மிக்சை' வாங்கவில்லை. காரணம் கண்டுபிடித்தபோது, இப்படித் தங்களுடைய சாமர்த்திய மின்றி ஓர் உணவுப் பொருளைத் தயார் செய்வதில் வெட்கப்பட்டார்களாம் பெண்கள். ஏதோ தாங்கள் அதில் ஈடுபட்ட பெருமை இல்லையாம். என்ன செய்தார் நமது கம்பெனிக்காரர்? கேக் மாவில் போட்டிருந்த ஒரு மூன்று பொருட்களை—திராட்சை, சர்க்கரை, முந்திரிப் பருப்பு போன்ற பொருட்களை—எடுத்துவிட்டு, பெண்மணிகளை, கேக் தயார் செய்யும் போது இவற்றை அவர்களே போட்டுக்கொள்ளுமாறு கூறினார். அவ்வளவு தான். பெண்கள் பெருமைப் பட்டார்கள். ஏதோ 'கேக்'கைத் தாங்களே தங்கள் திறமையால் செய்வது போல் எண்ணிப் பெருமைப் பட்டார்கள். கேக் மாவின் விற்பனை கிடுகிடுவென்று ஏறியது!

நமது உணவுக் கம்பெனிக்காரர் செய்தது தொழில் வியூகம்!

மௌண்ட் பேட்டன் தளபதியாயிருந்தபோது கூறுவாராம்; "துருப்புகளைச் சரியான இடத்தில் சரியான சமயத்தில் நிறுத்திவிட்டால் துப்பாக்கியைத் தூக்கவும் வேண்டுமா?" என்று. இதுதான் போர் வியூகம்!

ஓர் இளைஞன் ஒரு கடைக்குச் சென்று காசு கொடுத்துவிட்டு அவர்கள் டெலிபோனை உபயோகித்து ஒரு நிறுவனத்தின் தலைவரைக் கூப்பிட்டான். அவரிடம் தன் படிப்பையும், திறமையையும் கூறி வேலை கேட்டான், அவர் கூறினார்: "என்னிடம் உதவியாளராக ஒருவர்

வேலை பார்க்கிறார்!" என்றார். தான் அவரைவிடத் திறமையாக வேலை பார்ப்பதாக இளைஞர் கூறினார். தலைவர் இந்த இளைஞனின் ஆர்வத்தைப் பாராட்டி விட்டு, 'தன்னிடம் வேலை செய்யும் இளைஞனின் வேலை யில் தனக்குத் திருப்தி என்றும், இப்போதைக்கு வேலை இல்லை' என்றும் கூறினார். டெலிபோனை வைத்து விட்டு வெளியே நடந்த இளைஞனைப் பார்த்து அந்தக் கடைக்காரர் சொன்னார்: "தம்பி! நீ டெலிபோனில் பேசியதைக் கேட்டேன். நீ சாமர்த்தியசாலி. எனக்கு ஒரு ஆள் தேவைப்படுகிறது. நான் உன்னை வேலைக்கு வைத்துக் கொள்கிறேன்!" என்றார். அதற்கு அந்த இளைஞன் கூறினான். "ஐயா! மன்னிக்கவும். நான் அந்தத் தலைவரிடம்தான் வேலை பார்க்கிறேன். நான் பார்க்கும் வேலை அவருக்குத் திருப்தியாய் இருக்கிறதா என்பதைச் சோதிப்பதற்குத்தான் இப்படி ஒரு நாடக மாடினேன்" என்றான்.

அன்றாட வாழ்வில் சாணக்கியம் எப்படி விளையாடு கிறது என்பதைக் கவனியுங்கள்.

கிழவியிடமிருந்து வடையைக் கொத்திக்கொண்டு போய் மரக்கிளையில் உட்கார்ந்தது காகம். அதைக் கண்ட நரிக்கு வாயில் ஊற்றெடுக்க "காக்கையாரே! நீங்கள் எவ்வளவு அழகு! நீங்கள் பாடினால் என்ன இனிமை! வாயைத் திறந்து ஒரு பாட்டுப்பாடக் கூடாதா? நான் கேட்கக்கூடாதா?" என்றது நரி. காகம் பாட, வடை கீழே விழ, நரியார் அதைக் கௌவிக்கொண்டு நடக்க... நமது பஞ்சதந்திரக் கதை கள் அனைத்துமே சாணக்கியத்தின் 'பாலபாடம்' தான்! ராஜகுமாரனுக்கு 'ராஜகுரு சொன்ன

பஞ்சதந்திரக் கதைகள் இன்று எல்லாக் குழந்தைகளுக்கும் சொல்லிக்கொடுக்கப் படுகின்றன. ஏனெனில் வாழ்க்கைக்குச் சாணக்கியம், வியூகம், யுக்தி எல்லாம் தேவைப்படும் ஒரு குணம்.

வியூகம் என்பது ஒரு சிந்தனை முறை. பல வியூகங்களை வகுத்துப் பழகியவனுக்கு அடுத்த பிரச்னையில் வகுக்கப்போகும் வியூகம் எளிது. வியூகம் பழக்கத்தினால், சிந்தனையினால், அனுபவ அறிவினால் வெளிவரும் அறிவு. மகாத்மா காந்தியின் வரலாற்றை (அல்லது காந்தி பற்றிய அட்டன்பரோ எடுத்த திரைப்படத்தை) உன்னிப்பாகக் கவனிப்பவர்களுக்கு ஒரு விஷயம் புரிய வரும். மோகன்தாஸ் காந்தி எவ்வளவு சாதுரியத்துடன், சாணக்கியத்துடன் தமது இளவயது போராட்டங்களைத் தென்னாப்பிரிக்காவில் நடத்தினார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

வியூகம், சாமர்த்தியம், சாணக்கியம் என்பது என்ன? அது தந்திரம், ஏமாற்றுதல் என்ற எல்லைக்குள் நுழையக் கூடாது. அப்படிக் கடக்கும்போது வியூகம் தன் குண நலன்களை இழக்கிறது; மதிப்பை இழக்கிறது; வியூகம் என்பது மிகக் குறைந்த துருப்புகளை வைத்துக்கொண்டு அதிகப்படியான எதிரிகளைத் தோற்கடிப்பதுதான்; பதினைந்தாம் புலி ஆட்டம் சில காய்களை வைத்துக் கொண்டு மூன்று புலிகளைக் கட்டுவதுதான், குறைந்த செலவில் நிறைந்த பலன் காண்பதுதான் வியூகம்.

ஒரு பிரச்னைபற்றி நாம் ஒரு திட்டம் வகுக்கும்போது எத்தனையோ எதிர்பாராத சம்பவங்கள், விபத்துகள், தடைகள் ஏற்படக்கூடும். எத்தனையோ மாற்றங்கள் நிகழக்கூடும். அதை எல்லாம் எதிர்பார்த்து ஒரு

சுருங்கிய வழியில் லட்சியத்தை அடைவதுதான் வியூகம்.

வியூகத்தின் முக்கியப் பகுதி பேச்சு வன்மை என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள், ஒரு தலைவனின் தன்னம்பிக்கையின் தெறிப்பாகப் பேச்சு வெளிப்படுகிறது. அவன் பேசக்கேட்டதும் மக்கள் அப்படியே நம்பி அவன் பக்கம் திரும்புகிறார்கள். வியூகக் கலையில் தேர்ந்தவனா யிருக்கவேண்டும் தலைவன் என்கிறார்கள் அரசியல் பேராசிரியர்கள்.

ராஜீவ்காந்தி நல்லவராயிருக்கலாம். வியூகத்தில் அவரது தாய்போல் வல்லவரா என்பதில் நம்மிடையே சந்தேகம் எழுகிறது.

நமது ஊரில் எம். ஜி. ஆரையும், சிவாஜிகணேசனை யும் எடுத்துக்கொண்டால், இரண்டுபேரும் தொழிலால் ஒரே பழக்கத்திற்குட்பட்டவர்கள்தான். ஆனால் அவர் களது சொந்த குண நலன்களால் அவர்கள் எடுக்கும் வியூகங்கள் வேறுபடுகின்றன.

நாணயமில்லாத அரசியல்வாதிகள் வகுக்கும் வியூகம் எல்லாம் பொதுமக்களை ஏமாற்றுவதில்தான் முடியும். அத்தகைய வியூகத்தைத்தான் இன்றைய அரசியலில் காண்கிறோம். வியூகத்திற்கு நாணயம் மிக முக்கியம். வியூகத்திற்கு ஒரு வரைமுறை உண்டு. இவ்வளவு தூரம் தான் போகலாம் என்ற வரைமுறை. காரியமாற்றும் போது தர்மநெறிகளை அது மீறுமானால் அது ஒதுக்கத் தக்கது.

வியூகம்—'காலம் மாறும்' என்று காத்திருப்பதற்கு நேர்மாறானது. வியூகம் செயலைத் தூண்டுகிறது.

வியூகச் சிந்தனையாளர்கள் ஒரு பிரச்னையில் எது முக்கியம் என்று சிந்தித்து அதை முதலில் நிறைவேற்ற முயல்கிறார்கள். காலமறிதல், இடமறிதல், மாறிவரும் சூழ்நிலைகளை அறிதல் என்ற மூன்றும் வியூகத்தில் கவனிக்கப்படுகின்றன. இன்னொரு வகையில் சொன்னால் நம்மிடமிருக்கும் கையிருப்பை அதிகப் பயன்தரும் வகையில் உபயோகிக்கும் சாமர்த்தியம்தான் வியூகம். நமது வியூகத்தின் மூலம் நமது நிலையை வலுவாக்கி ஸ்திரப்படுத்திக் கொள்வதுதான் நோக்கம்.

வியூகத்தைத் தற்காலிக நன்மைக்கும், நீண்ட நாளைய நன்மைக்கும் பயன்படுத்தலாம். செஸ் விளையாடுகிறோம். அதில் நமது சிந்தனை, கணிப்பு, வியூகம் எல்லாம் பயன்படுகிறது. செஸ் விளையாட்டில் வெற்றி என்ற லட்சியத்தை நோக்கிக் காயை நகர்த்துகிறோம். எதிரி எப்படி அடுத்தபடி விளையாடுவார் என்று எதிர்பார்த்துக் காயை நகர்த்துகிறோம். எதிரியின் காயை எப்படி வெட்டலாம் என்ற எண்ணம் தலைதூக்கி நிற்கிறது. அதே சமயம் எப்படிப் போக்குக் காட்டினால் எதிரி ஏமாறுவான் என்று எண்ணி விளையாடுகிறோம். எல்லா நிலைகளிலும் நமது துருப்புகளையும் எதிரியின் துருப்புகளையும், நன்கு கணித்த பிறகுதான் அடுத்த காயை நகர்த்த முற்படுகிறோம். நமது காய்களும், எதிரியின் காய்களும் போர்க்களத்தில் எல்லோரும் காணும்படி நிற்கின்றன. இங்கே ஒளிவுமறைவு இல்லை.

‘‘போக்கர்’’ (poker) எனப்படும் சீட்டாட்டத்தைக் கவனியுங்கள். நம் கையிலுள்ள சீட்டு பிறருக்குத் தெரியாது. நாம் விளையாடுகின்ற ஒரு ஜம்ப முறையில் எதிரியை ஓரளவு கலங்க அடிக்க முடியும். ‘‘நம் கையில் நல்ல சீட்டுக்கள் இருக்கின்றன. எதிரியை ஒழித்துவிட

முடியும்'' என்கிற ஒரு பயத்தை எதிரிக்கு நாம் ஏற்படுத்துகிறோம்.

ஆட்டத்திற்குத் தகுந்தாற்போல வியூகங்கள், பார்வனைகள் வேறுபடுகின்றன.

சீட்டாட்டத்திலும் சரி, அரசியலிலும் சரி தலைவன் எப்படித் தனது நம்பிக்கையை வெளியிடுகிறான் என்பதைப் பொறுத்து வெற்றி தோல்விகள் அமைகின்றன. வியூகத்தில் தன்னம்பிக்கையும், தன்னம்பிக்கை வெளிப்பாடும் மிக அவ்சியம்.

ஒரு நிறுவனத்தில் வேலைக்கு எடுக்கும்போது முதல் தரமான ஒருசிலரை ஒதுக்கிவிடுவார்கள்; அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள நபர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள். முதல்தரமான மனிதர்கள் பல சமயம் நாடகத்தில் கதாநாயகனாக வேடம் போடுபவனைப் போல நமக்குப் பிரச்னைகளை உருவாக்குவார்கள் என்று சொல்கிறார்கள். இது அந்த நிறுவனத்தின் போர்த் தந்திரம். அவர்கள் பலன் காணும் வியூகம், அணுகுமுறை.

ஐ.பி.எம் என்று அழைக்கப்படும் கம்ப்யூட்டர் கம்பெனி. ''பர்சனல் கம்ப்யூட்டர்களைப் பிற எல்லாக் கம்பெனிகளும், தயார் செய்வதையும் விற்பதையும் பார்த்துக் கொண்டிருந்தது. இரண்டாண்டுகளுக்குப் பின் மிகச் சிறந்த பர்சனல் கம்ப்யூட்டரை வெளிக் கொணர்ந்து. மிக அதிகமான விளம்பரத்துடன், விற்பனை செய்து, பெரிய மார்க்கெட்டை உடனடியாகப் பிடித்தது. பிறரை முதலில் ஓடவிட்டார்கள். பின்னால் வந்து அடித்தார்கள். அதுதான் ஐ.பி.எம் மின் வியூகம்,

கொக்கு சின்ன மீன்களை எல்லாம் ஓடவிடுகிறது. பெரிய மீன் வரும்போது கொத்தித் தூக்குகிறது. இது கொக்கின் தந்திரம்.

தனி மனித வாழ்விலும் சரி, ஒரு நிறுவனத்தின் வாழ்விலும் சரி, போரிலும், விளையாட்டிலும் சரி எதை எப்போது செய்யவேண்டும் என்கிற கணிப்புத்தான் நம்மை வெற்றிக்கு அருகில் அழைத்துச் செல்கிறது.

நிர்வாகத்தின் மிக முக்கியமான பகுதி, வியூகம், யுக்தி, சாகஸம், சாணக்கியம். ஒரு கம்பெனியின் லாப நஷ்டத்தையும், ஒரு நாட்டுத் தலைவனின் வெற்றி தோல்வியையும், அது நிர்ணயிக்கிறது. கொக்கிலிருந்து நரியின் கதையிலிருந்து, சாணக்கியன் முதல் ராஜீவ்காந்தி வரை வியூகம், நமது விதியை, நாட்டு விதியை நிர்ணயிக்கிறது.

அதிக லாபம் பெறும் எண்ணம் சில சமயம் நம்மிடையே ஆசை என்ற பெயரை எடுக்கிறது. ஆசை எல்லை மீறும்போது பேராசையாகிறது. பேராசை பெரு நஷ்டம் என்கிற உண்மையான வார்த்தையை வேறு வழியில் சொல்வதானால், ''எலுமிச்சம்பழத்தைக் கசக்கிப் பிழியாதீர்கள்; அதிகம் கசக்கினால் கசப்புத்தான் மிஞ்சும்'' என்றுதான் சொல்லவேண்டும்.

வியூகத்தின் நாணயமான எல்லையில் நின்று கொண்டு நாம் செயலாற்ற வேண்டும்.

இந்த அடிப்படைகளை வைத்து நமது தலைவர்களை, அவர்களது நடவடிக்கைகளை எடைபோட்டுப் பாருங்கள்! உங்களுக்கே பல ஆச்சரியமான புதிய விஷயங்கள் தெரியவரும்!

15. அதிர்ஷ்டசாலி நீ!

உலகிலே அதிர்ஷ்டம் என்பது இருக்கிறதா? இருக்கிறது. அது வெளியில் இல்லை; அது நம்முள் இருக்கிறது. அதை நாம் புரிந்துகொள்ளும்போது; அது உள்ளுணர்வாக நமக்குக் கோடி காட்டுகிறது. 'இந்த திசையில் போ!'' என்று வழிகாட்டுகிறது. சூழ்நிலையில் உள்ள வாய்ப்பை உணரச் செய்கிறது. நம்மைச் செயல்படத் தூண்டுகிறது.

ஒரு பிரச்சினையில் அல்லது தொழிலில் இறங்கும் போது எல்லாம் தெளிவாக—திசை காட்டும் கம்பம் போல—எதுவும் வெளிப்படையாகத் தெரிவதில்லை ஆனால் ஆர்வம் உள்ளவன் மனத்தில் ஒரு உந்துதல் ஏற்படுகிறது. சரியோ தப்போ, கஷ்டமோ நஷ்டமோ, பார்ப்போம் என்ற துணிவுடன் சத்தம் போடாமல் இறங்குகிறான். அவன் உள்ளத்தில் பயமும் ஓடுகிறது. கஷ்டம் வந்தால் என்னாகும் என்கிற பயம். ஆனால் அது அவனை முடக்கி விடுவதில்லை. அந்த பயத்துடனே துணிந்து இறங்குகிறான். செயல்படுகிறான். முடிவில் தான் தெரிந்துகொள்கிறான் தான் அதிர்ஷ்டசாலி என்று,

தலைவனாக வேண்டும், தொழிலதிபராக வேண்டும், பெரிய எழுத்தாளனாக, விஞ்ஞானியாக வேண்டும் என அடிமன ஓட்டம் மனத்திலே அடிக்கடி கற்பனையாக - அவன் மனத்திலே எழுந்து கொண்டிருந்தது. அடிக்கடி ''தம்பி நீ கெட்டிக்காரன்! மகளே, நீ திறமைசாலி!'' என்ற மந்திர வாசகங்கள் அவனுள் ஓடி அவனைச் சதா தட்டிக்

கொடுத்துக் கொண்டிருந்தன. அவன் மனத்துள் ஒரு எதிர்பார்ப்பை—தன் மனக் கற்பனையின் நிதர்சனத்தை—ஒருநாள் தான் விரும்பியதை அடையப் போவதைப் பற்றிய ஒரு நிச்சயம் அவன் மனத்துள் ஓடியது. பிள்ளைதாச்சிப் பெண், பெறுநாளை எதிர் பார்த்திருப்பதைப் போன்ற ஒரு நிச்சயம்.

என்ன அந்த எதிர்பார்ப்பு? என்ன அந்த நிச்சயம்? மாலை நாலு மணிக்கு காப்பி சாப்பிடவில்லை என்றால் எனக்குத் தலைவலி வரும் என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது நாலு மணிக்கு காப்பிவரத் தாமதமாகும் போது, தலைவலி நான்கு மணிக்குச் சரியாக வந்துவிடு கிறது. இது எதிர்பார்ப்புத் தரும் பலன்.

எல்விஸ் பிரஸ்லி என்ற பிரபல பாடகன் ஒருவன் இருந்தான். இளைஞன். ''நான் 42வது வயதில் செத்துப் போய்விடுவேன். ஏனெனில் என் தாய் 42வது வயதில்தான் செத்துப் போனார். நான் என் தாயைப் பெரிதும் நேசிக்கிறேன்!'' என்றான். சரியாக 42வது வயதில் செத்துப் போனான்—எதிர்பார்த்தான். அதுவே நடந்தது.

ஒலிம்பிக் பந்தயத்திற்கு ஒரு சிறுமி போனாள். வெற்றி மேல் வெற்றியாகப் பெற்றுக்கொண்டிருந்தாள். ''அடுத்து வரும் பெரிய நிகழ்ச்சி எப்படி இருக்கும்? வெற்றி பெறுவாயா?'' என்று நிருபர்கள் கேட்டார்கள். குழந்தைத்தனத்துடன் சொன்னாள். ''நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்! ஏனெனில் நான் வெற்றி பெற்றால் என்னை டிஸ்னி உலகிற்கு என் பெற்றோர் அழைத்துப் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள்!'' என்றாள். உண்மையில் அவள் வென்றாள்.

மனம் எதை நம்பி எதிர்பார்க்கிறதோ, எதைக் குறித்துச் செயல்படுகிறதோ அதைச் சாதனையாகப் பெறுகிறது. இதுதான் உலக உண்மை. இதுதான் மனத்தின் மகத்தான ரகசியம். அதற்கு அடுத்தபடியாக ஒரு நம்பிக்கை நம்முள் ஆழமாக வேர் விடவேண்டும்.

பேராசிரியராக வாழ்நாள் முழுவதையும் கழித்த என் நண்பர், ஆசிரியர் வேலையை விட்டுவிட்டுத் தொழிலில் இறங்கினார். இத்தனை ஆண்டுகாலம் இதில் பழகிப் போன உங்களுக்கு, தொழில் செய்து சம்பாதிக்க முடியும் என்ற தைரியம் எப்படி வந்தது என்று கேட்டார்கள்.

அவர் சொன்னார், ''நான்சொல்லிக்கொண்டேன். நான் ஒரு வைசிய குடும்பத்திலிருந்து வருபவன். ஆகவே தொழிலும் வியாபாரமும் செய்யும் திறமை என் ரத்தத்தில் இருக்கிறது; இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டேன். இறங்கினேன். நம்பினேன்; முடியும் என்று செயல்பட்டேன்!'' என்றார்.

''அப்படியானால் வேறு சாதியில் பிறந்திருந்தீர் களானால் சங்கடப்பட்டிருப்பீர்களோ?'' என்று கேட்டார்கள். அவர் சிரித்தார். ''இதெல்லாம் நமக்கு நாமே கொடுக்கிற நம்பிக்கை. அவ்வளவுதான். ஒன்று மில்லாவிட்டால்கூட 'என் தந்தையின் வெள்ளிப் பொடிமட்டை என்னிடம் இருக்கும்வரை யாரும் என்னை எதுவும் செய்ய முடியாது!' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டிருந்திருப்பேன்'' என்றார் அந்தச் சாதனையாளர்!

''எப்படியாவது கஷ்டப்பட்டுச் சாதிப்பேன்; சாதிப் பேன்'' என்கிற மனோபாவம்—நம்பிக்கை அதுதான் அதிர்ஷ்டத்தின் அடிப்படை.

சிலர் கேட்கிறார்கள்.

''நம்பிக்கை, சூழ்நிலைகளை உருவாக்குகிறதா?'' என்று. நிச்சயமாக. நமது ஆழ்மனத்தில் வேர்விடும் நம்பிக்கை தனது எண்ண சக்தியைப் பரப்பிக் கொண்டே இருக்கிறது. இதனுடைய விளைவுகளைத் தான் சூழ்நிலையில் நாம் காண்கிறோம். நம் நம்பிக்கைக் கேற்பச் சூழ்நிலையே மாறுகிறது.

நம்பிக்கைக்கு முன்னாலும், பின்னாலும் காரியத்தை நிறைவேற்றும் பல குணங்கள் நமக்குத் தேவை. அவை தான் ஆர்வம், துடிப்பு, சளைக்காத மனம், விடா முயற்சி என்பவை.

''சிலர் லாட்டரிச் சீட்டு வாங்கி அதிர்ஷ்டத்திற்காக காத்திருக்கிறார்களே?'' என்று நீங்கள் கேட்கக்கூடும். தமிழ்நாட்டில் உள்ள எல்லோரும் ஹரியானா அல்லது ஹிமாசல பிரதேஷின் லாட்டரிச் சீட்டுக்களை வாங்கி விட்டு, வீட்டுத் திண்ணையிலே, எல்லாத் தமிழ் மக்களும் உட்கார்ந்திருந்தார்களானால், என்ன ஆகும் இந்தநாடு? அதேபோல நமது எல்லாத் தேவைகளையும் அரசாங்கம் கொடுக்கும் என்று எதிர்பார்த்து, ஏழை மக்கள் தெருவிலே நின்றிருந்தார்களானால் என்ன ஆகும்?

அதேபோல என் பெண்ணுக்கு மாப்பிள்ளை எங்கோ பிறந்திருக்கிறான். வந்து கொத்திக் கொண்டு போய் விடுவான் என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன ஆகும்? கல்யாணமாகாமல் கிழவியாகிப்போன கன்னிப் பெண்ணைத்தான் நாம் சந்திப்போம்.

இங்கே என்ன தவறு என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனம் காட்டும் சாதனைப் பாதையிலே சில படிகள் இருக்கின்றன. அதாவது எண்ணம் என்ற முதல் படி, நம்பிக்கை என்ற இரண்டாவது படி, செயல் என்ற மூன்றாவது படி, அதன் பிறகுதான் சாதனை பிறக்கிறது. செயல் என்ற படியில்லாதபோது, அங்கே பெரிய இடைவெளி ஏற்படுகிறது.

நமது உழைப்புக்கேற்ற ஊதியத்தைத்தான் நம் வாழ்வில் பெறுகிறோம். இந்த உலகிலே எதற்கும் ஒரு விலை உண்டு; இந்த உலகம் செயலினால் உழைப்பினால் தான் முன்னேறி இருக்கிறது. விதை விதைத்து, களை எடுத்து, நாற்று நட்டு, நீர் பாய்ச்சி வளர்ந்த பின்தான் அறுவடை செய்கிறோம்.

மந்திரத்தில் மாங்காய் விளைவதில்லை. இவ்வுலகம் காரண காரியத் தொடர்பு கொண்டது. செயல்தான் உலக நியதி. இதைச் சுற்றித்தான் இப் பிரபஞ்சம் செயல் படுகிறது. இந்த இயற்கை விதியை மீறி யாரும் எதையும் பெற முடியாது. பெற்றால் அது நிலைப்பதில்லை. உழைப்பு சம்பந்தப்படாத லாட்டரிச்சீட்டு நிலையான தல்ல.

தம்பீ! மறந்துவிடாதே. அதிர்ஷ்டத்திற்கு மனக் கற்பனை—லட்சிய தரிசனம்—வேண்டும். நான் "அடைவேன்" என்ற எதிர்பார்ப்பு வேண்டும். "முடியும்!" என்ற நம்பிக்கை வேண்டும். "செயல் செயல்!" என்கிற உழைப்பு வேண்டும்.

ஒருவன் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து பத்திரிகை நிருபர் கேட்டார். "நீங்கள் மட்டும் எப்படி இவ்வளவு நிறைய கோல்களைப் போடுகிறீர்கள்? நீங்கள் அதிர்ஷ்டசாலி!" என்றார்,

அதற்கு அந்த சாம்பியன் கூறினார்:

"அதிகமாக பயிற்சி செய்யும்போது அதிகமாக அதிர்ஷ்டம் கிடைக்கிறது!" என்று.

என்ன சொல்கிறார் அவர்? "அட முட்டாளே! ஏன் அதிர்ஷ்டத்தை அழைக்கிறாய்? நான் நன்கு தினமும் பயிற்சி செய்யாவிட்டால் எப்படி என்னால் சமாளிக்க முடியும்? எப்படி அதிர்ஷ்டம் வரும்?" என்று கேட்கிறார் அவர்.

அதிர்ஷ்டத்தைப்பற்றி பலரையும் கேட்டு ஆராய்ச்சி செய்தார் ஒருவர். பலர் அதிர்ஷ்டத்தினால்தான் ஏற்பட்டது என்று சத்தியம் செய்தார்கள். சிலர் அதெல்லாம் இல்லை என்று சொன்னார்கள்.

சரி அதிர்ஷ்டத்தினால்தான் வாழ்க்கை மலர்கிறது—பணம், புகழ், ராஜகுமாரி எல்லாம் கிடைக்கிறாள்—என்று வைத்துக்கொள்ளுங்கள், நாம் என்ன செய்ய முடியும்? அதிர்ஷ்டத்தினால் அடையலாம் என்ற முடிவை கண்டு பிடித்தபின்? இந்த முடிவினால் ஒரு பயனுமில்லை.

ஏதோ ஒருசிலருக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது என்பதை மட்டுமே தெரிந்து கொள்கிறோம். அதை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்ய முடியும்? அதிர்ஷ்டம் எப்படி வருகிறது என்பதை இவர்களில் யாரும் சொல்லிக்கொடுப்பதில்லை; கண்டு பிடிப்ப தில்லை.

சிலர் சொல்கிறார்கள், அதிர்ஷ்டம் என்பது சரியான சமயத்தில் சரியான இடத்தில் இருப்பதாகும். தொழிலில் வெற்றி காண வேண்டுமானால், "சரியான சமயம்" என்கிற கணிப்புதான் பெரிதும் உதவுகிறது என்கிறார்கள்,

உண்மைதான். தன் லட்சியத்தில் குறியாக இருப்பவனது மனம் சூழ்நிலைகளை சதா பரிசீலித்த வண்ணம் இருக்கிறது. (Jig saw puzzle) ஜிக்சா விளையாட்டில் இந்த வளைகோட்டு பலகை எந்த இடத்தில் பொருந்தும் என்று மனம் துழாவிக் கொண்டிருக்கிறதே, அதுபோல.

ஆகவே சூழ்நிலையை உணர்ந்து, காலத்தை உணர்ந்து அவன் பயன்படுத்துகிறான்; செயல்படுகிறான்.

பொதுவாழ்வில் இத்தகைய அதிர்ஷ்டங்களைப் பார்ப்போம். அறிஞர் அண்ணா இறந்துபோனார். மூன்றாவது இடத்தில் இருந்த கலைஞர் கருணாநிதி முதல்வரானார். அங்கே அப்போது அதிகம் பாராட்டப் பட்ட இரண்டாவது இடத்தில் இருந்த நெடுஞ்செழிய னும் இருந்தார். அவரால் எடுபட முடியவில்லை.

அதிர்ஷ்டம் யாரை நாடியது? எப்படி நாடியது? ஏன் நாடியது? அதிர்ஷ்டம் என்பது என்ன என்று சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்து அதே அதிர்ஷ்டம் கலைஞருக்கு கை கொடுத்த சூழ்நிலை—அவருடைய திறன்—எல்லாம் எம். ஜி. ஆர். என்ற மனிதர் வந்தவுடன் என்ன ஆயிற்று என்பதையும் எண்ணிப்பாருங்கள். ஏன் சூழ்நிலை கலைஞருக்கு உதவவில்லை, ஏன் திறமைகள் இருந்தும் அது அவருக்கு பயன் தரவில்லை என்பதை எண்ணிப் பாருங்கள். எம். ஜி. ஆர். சினிமாக்காரர் என்று சொல் பவர்கள், மற்றொரு நடிப்புத் திறமை கொண்ட ஒரு சிவாஜியால் ஏன் அரசியல் உலகத்தில் முதல்வர் பதவியில் தன் முத்திரையைப் பதிக்க முடியவில்லை என்பதையும் எண்ணிப் பாருங்கள். இன்றைய பிரதமர் ராஜீவ்

காந்தியை எப்படி பிரதமராக சூழ்நிலை உருவாக்கியது என்பதை எண்ணிப்பாருங்கள்.

ஒரு உண்மையை—மகத்தான உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

"சூழ்நிலையை மனிதன் உருவாக்குகிறான் என்பது தான் உண்மை." சூழ்நிலையைப் புரிந்துகொண்டு தங்கள் லட்சியத்திற்கு பயன்படுத்தும் திறமை ஒரு சிலருக்கே உண்டு. அடிப்படையிலே உண்மை, நாணயம் நேர்மை என்பவை குறையும்போது உண்மை சக்தி தலைதூக்கி சூழ்நிலையை மாற்றி விடுகிறது; அவர்களைத் தாழ்த்தி விடுகிறது.

அடிப்படையில் நாட்டுத் தலைவர்களுக்கும் சரி, நமக்கும் சரி, உண்மையும், நியாயமும், நேர்மையும் வாழ்வின் கொள்கைகளாக இருக்கவேண்டும்.

சில சூழ்நிலைகள் திடீரென மனித சக்திக்கும் அப்பாற்பட்டு நிகழ்கின்றன. உண்மைதான். இன்றைய அறிவை வைத்துக்கொண்டு இதன் காரணங்களை நம்மால் விளக்க முடிவதில்லை.

உதாரணம்: விமானமோட்டியாக வாழ விரும்பிய ராஜீவ்காந்தி; அவரைவிட அரசியலில் துடிப்புடன் தன்னை அர்ப்பணித்த சஞ்சய்காந்தியின் மரணம்; மகனை அரசியலில் அறிமுகம் செய்து வைத்த ஓராண்டு காலத்தில் எதிர்பாராதவிதமாக இந்திராகாந்தி கொலையுண்டு போன சூழ்நிலை. இதனால் ராஜீவ்காந்தி விபத்துக்களின் விளைவாக பிரதமரான கதையை நாம் பார்க்கிறோம். நமது அறிவுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட சம்பவங்களும் நடப்பதுண்டு. அதில்

வழிமுறை ஏதும் இல்லை. இப்படி 'குருட்டாம் போக்கில்'' அதிர்ஷ்டவசமாக பல காரியங்கள் பலர் வாழ்வில் நிகழ்கின்றன.

அதற்கு மாறாக, நான் கிராமத்தில் பிறக்காமல், ஏழையாய் இல்லாமல், கருப்பாயில்லாமல், உயரமாய் இருந்திருந்தேனானால்...என்றெல்லாம் வருத்தப்பட்டு உன் சிந்தனையை வீணடிக்காதே. எது அதிர்ஷ்டம் என்பதை புரிந்துகொள்.

சீட்டுக்கட்டு விளையாடும்போது நமக்கு சில சீட்டுக்கள் விழுகின்றன. அதை வைத்துக்கொண்டு நாம் விளையாடுகிறோம். ஜெயிக்கப் பார்க்கிறோம். அது போல நாம் எங்கே பிறந்தாலும், யார் நமக்கு பெற்றோர், எப்படி நாம் வளர்ந்தோம் என்பவையெல்லாம் நம் கைவசமில்லை.

இன்று நீ வீரமகனாய் இருக்கிறாய் தம்பி! களத்தில் இறங்கு. விளையாடு. உன் தலைவிதியை உன் எண்ணமும் லட்சியமும், கற்பனையும், நம்பிக்கையும், செயலும் தான் நிர்ணயிக்கப்போகின்றன. வெற்றியாளனாய் வா! தம்பீ வா! நாடு உன்னைத்தான் நம்பி இருக்கிறது. நாட்டின் விதியையும் நிர்ணயிப்போம் புறப்படு.

16. "வானகமிங்கு தென்பட வேண்டும்"

பிரான்ஸ்ட்ரெப் அமெரிக்காவின் பல பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் ஆலோசகராக இருந்தார். எங்களது கல்லூரிக்கு ஆலோசகராக வந்து ஒரு 10 நாள் எங்களுடன் தங்கினார். "மாணவர்களுக்கு எத்தகைய கல்வி போதிக்கப்படவேண்டும்" என்று அடிமட்டத்திலிருந்து விவாதங்களைத் துவக்கினோம். ஒரு நாள் அவரிடம் நான் சாவகாசமாகக் கேட்டேன். "மனிதரிடம் இருக்க வேண்டிய முக்கிய குணமாக நீங்கள் கருதுவது என்ன?"

"நம்பிக்கைக்குரிய தன்மை" (Integrity) என்று ஒரு வார்த்தையில் பதிலளித்தார்.

அவரது பதில் என்னை சிந்திக்க வைத்தது. அந்த வார்த்தையின் ஆழமான—அகலமான—எண்ணத் தொடர்புகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

இன்றும் என்னுள் ஒரோர் சமயம் தோன்றும் வார்த்தை அதுதான். பல சமயம் நமக்கு நெருக்கடியான சமயங்கள் வருகின்றன. சமதளத்திலே நிற்கும் இருவரில் ஒருவர் தனது வாதத்திறமையினால் தனக்கு வேண்டியபடி நியாயத்தை திருப்பிக் கொள்ளக்கூடிய நில கொடுக்கல் வாங்கலில் தனது சுய லாபத்தையும் சுயசௌகரியத்தையுமே கருதி முடிவெடுக்கின்ற நிலை; தகாத உறவில் சிக்கிக்கொண்டு மற்றவரை 'அம்போ' என்றும் கைவிடும் நிலை; அநியாயம், அநீதி, திருட்டு,

கொலை, கற்பழிப்பு என்று கண்ணெதிரே நடந்தால்கூட கண்ணை மூடிக்கொண்டு போகக்கூடிய நிலை.

எளியவர்களின் ஏழ்மையை—பலமின்மையை—நமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும்நிலை.

இத்தகைய நிலைகள் நம் வாழ்வில் பல சமயம் வருகின்றன. இத்தகைய சோதிக்கும் நிலைகள் வெவ்வேறு ரூபத்தில் நம்மை மோதுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் எந்த எண்ணம் நம்மிடையே எழுகிறது? எந்த எண்ணம் நமது செயலைத் தூண்டுகிறது? அந்த எண்ணமும் செயலும்தான் நமது குணநலனை நிர்ணயிக்கிறது. நல்லவன் என்றோ நேர்மையாளன் என்றோ, அல்லது அயோக்கியன், சந்தர்ப்பவாதி என்றோ பிறர் நம்மை சொல்லக் காரணமாகிறது.

வங்கி கவுண்டரில் பணத்தை எண்ணிக் கொண்டிருந் தவர் ஒரு நோட்டுக்கட்டை அவசரத்தில் மறந்து விட்டுப் போய்விட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் எடுத்தால் யாரும் பார்க்கமாட்டார்கள். பார்த்தாலும் நமது பணம்தான் என்று எண்ணிக்கொள்வார்கள்! "பணத்தை விட்டுப் போனவரிடம் நிறைய நோட்டுக் கட்டுக்கள் இருந்தன. இந்த ஒரு நோட்டுக்கட்டால் அவருக்கு நஷ்டம் ஏதும் இல்லை." "இதைக் கடவுளே கொண்டு வந்து போட்டிருக்கிறார். எனது கஷ்டத்தைப் பார்த்து!" "இதை இப்போது எடுத்துக் கொண்டுபோய் உபயோகித்து விட்டு நான் பணக்காரனான பின் இதற்கு வட்டியுடன் தான தருமம் செய்து விடுவேன்!"

இப்படி நமது மனம் எத்தனையோ சமாதானம் சொல்கிறது. வாய்ப்பான சந்தர்ப்பம் என்பது ஒரு (Temptation). நமது ஆசையைத் தூண்டும் ஒரு நிலை.

மகாத்மா காந்திகூட தன் இளவயதில் தனது அண்ணனுடைய தங்கக் காப்பை வெட்டித் திருடியது பற்றி எழுதுகிறார். தன் தந்தையிடம் கண்ணீர்விட்டு மன்னிப்பைக் கோருகிறார். ஆசையின் தூண்டுதல் வலிமை மிக்கது. நாம் எப்படி செயல்படுகிறோம்?

அப்போது நம்மிடம் வாழ்வின் அடிப்படை நியதிகள், வாழ்க்கை நெறிகள் என்று ஏதேனும் இருக்கிறதா? "இல்லை, சந்தர்ப்பம் கிடைத்தால் திருடு. சந்தர்ப்பம் கிடைத்தால் ஏமாற்று, கற்பழி!" என்கிற நிலையில் நமது மனம் ஓடுகிறதா?

இதுதான் கேள்வி. இதுதான் சோதனை.

இதைத்தான், ஆண்டவன் தனது பக்தர்களை சோதிப்பதற்காக உருவெடுத்து வருவதாக திருவிளையாடற்புராணக் கதைகள் அனைத்தும் கூறுகின்றன. அந்த திருவிளையாடற்புராண நாயன்மார்கள் தங்களுடைய உயிரையும் கொடுத்து, சொன்ன வாக்கைக் காப்பாற்ற முயல்கிறார்கள். தங்களது உயிரையும் உடைமையையும் பணயம் வைத்து நேர்மை வழி ஒன்றையே தேர்ந்தெடுத்தனர்.

அன்றாட பிரச்சினைகளில்—வாழ்க்கையின் பல்வேறு பொருளாதார அவதிகளில்—ஈடுபட்டுள்ள நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் நமது குணநலன் (Character) நிச்சயிக்கப்படுகிறது. "நமக்கு ஒரு பெரிய பதவி கிடைத்திருக்கிறது. இதை வைத்துக்கொண்டு ஒரு. சர்வாதிகாரியாக நாம் நடந்து கொள்ள முடியும். நமக்குப் பிடிக்காதவர்களை நாம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள முடியும்!" என்ற நிலை வரும்

போது நீங்களும் நானும் எப்படி நடந்து கொள்வோம்? இன்றைய அரசியல் தலைவர்கள் அல்லது தலைவிகள், கட்சிக்காரர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்று எண்ணிப் பாருங்கள்.

அதை வைத்துத்தான் நம்மை யோக்கியமானவர் என்றோ அயோக்கியன் என்றோ உலகம் எடை போடுகிறது. நாம் முடிவெடுக்க வேண்டிய நிலை இருக்கிறதே அது ஒரு நெருக்கடி மிகுந்த நேரம். அவசரமாக நாம் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் நாம் எடுக்கும் முடிவு நம்மை ஒரு புடம் போட்ட மனிதனாகக் காட்டுகிறது. அல்லது நம் அழுக்குகளையும் மாசு மருக்களையும் எடுத்துக் காட்டுகிறது.

''அவன் நியாயமானவன். தவறு செய்யமாட்டான். நியாயத்திற்கு கட்டுப்பட்டவன். நேர்மையானவன். அவனை நம்பலாம்'' என எப்போது நம்மைப்பற்றி பிறர் கூறுகிறார்களோ அப்போதுதான் நாம் வாழ்வாங்கு வாழ்கிறோம். ''நம்பிக்கைக்குரிய தன்மை'' தான் வாழ்வின் அடிப்படை. அதை வைத்துத்தான் நாம் உழைப்பு, விடாமுயற்சி, கற்பனை முடிவெடுக்கும் திறன், காலமறிந்து செயல்படுதல் என்ற எல்லாவற்றையும் உபயோகப்படுத்த வேண்டும்.

நேர்மையும், நம்பிக்கைக்குரிய தன்மையும் இல்லாத போது எத்தனை உழைத்து உயர்ந்தாலும் நாம் மனிதனாக மதிக்கப்பட மாட்டோம்.

இதைத்தான் ஆன்மீக அடிப்படை என்று கூறுகிறார்கள். யாருக்காக இந்த ஆன்மீக அடிப் படையை நாம் கடைப்பிடிக்கிறோம். நமக்காக, நமது ஆத்ம திருப்திக்காக. நம்மைப்பற்றி நாமே

கொண்டுள்ள எண்ணத்தினால் நாம் உள்ள நிறைவு பெறுகிறோம். நமது வாழ்விற்கு இது ஒரு பூரணத்துவத் தைத் தருகிறது. நாம் செய்த செயலைப் பற்றி, எடுத்த முடிவைப்பற்றி நமது பெற்றோரிடம் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம். நமது மனைவியிடம், நமது குழந்தைகளிடம், நமது நண்பர்களிடம் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம். இது ஒரு உறைகல். நாம் பத்தரை மாற்றுத் தங்கமாக வாழ முயற்சிப்பதை நமக்கு நாமே உறைத்துப் பார்த்துக்கொள்கிறோம். நமது பெற்றோரும் மனைவியும், குழந்தையும் நம்மைப்பற்றி படும் பெருமை நமக்கு ஒரு உறைகல்லாக இருந்து உதவுகிறது. நம்மை உயர்த்துகிறது.

இரண்டாவதாக: வலிமையற்ற ஒருவனை ஒரு சந்தர்ப்பத்தில் நமது சுயலாபம் கருதி ஏமாற்றி விடுகிறோம்—அல்லது நியாயத்தை நம் பக்கம் இழுத்துக் கொள்கிறோம் என்றால் என்னவாகும்?

நாம் உணரவேண்டும், இந்த உலகில் சில நியதிகள்—சட்டங்கள்—தர்மங்கள் இருக்கின்றன. அவற்றைக் கண்காணிக்க காவலதிகாரியோ நீதிமன்றமோ அந்த இடத்தில் இல்லாதிருக்கலாம். கண்காணிக்க மனித ஜீவன்களை நம்பி இந்த உலக நியதிகள் செயல்படு வதில்லை. உலக நியதிகள்—உலக தர்மங்கள்—மீறப்படும் போது அவை அவற்றிற்கேற்ற பலன்களைக் கொண்டு வருகின்றன. இதை வயதேற ஏற மனிதர்கள் சொந்த அனுபவங்களிலிருந்து உணர்கிறார்கள். தவறு செய்ய பயப்படுகிறார்கள். நேர்மையுடன் வாழ முயல்கின்றனர். ஏனெனில் (Cause & Effect) நாம் செய்யும் காரியங்களின் விளைவுகளை நாம்தான் சந்திக்க வேண்டும்; இதிலிருந்து

யாரும் தப்பிக்க முடியாது. இது விஞ்ஞான நியதி, பிரபஞ்ச நியதி.

இளவயதில் பல விஷயங்கள் நமக்குப் புரிவதில்லை. அனுபவங்கள் அப்போதுதான் ஆரம்பமாகின்றன. எந்தக் காரியம் செய்தோம், இத்தகைய கொடிய விளைவு ஏன் ஏற்பட்டது என்ற காரண காரியத் தொடர்பை நம்மால் உணர முடிவதில்லை.

மேலும், இளமை அபார சக்தி கொண்ட ஒரு வாலிபப் பருவம். உடலின் தோன்றும் மாற்றங்கள் ஒரு துடிதுடிப்பையும், எதையும் பரிசோதித்துப் பார்க்கும் ஒரு (Rebellious Attitude) முரண்டு பிடிக்கும் குணத்தையும், நம்முள் ஏற்படுத்துகிறது. எது சரி எது தவறு என்று புரியாத நிலையில் அதிக இளைஞர்கள் இருக்கிறார்கள். பிறரை எடுத்தெறிகிற குணம், பிறரை ஆதிக்கம் கொள்கிற குணம் எல்லாம் இளமை தரும் வலிமையால் அதிகப் படுத்தப்படுகிறது. தாமாகப் புரிந்து கொள்ளாத நிலையில் நாம் நம் வீட்டுப் பெரியவர்கள் சொல்வதையும் சமுதாய கோட்பாடுகளையும் மதித்து நடக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

எனது நண்பர் பரஞ்சோதி சொல்வார்:

''எனது தாய் எனக்கு அடிக்கடி போதித்த வாசகம் இதுதான். 'நல்லவன் என்று பெயர் எடுக்க நாளாகும். கெட்டவன் என்று பெயர் எடுக்க ஒரு கணம் போதும். ஒரு சின்ன திருட்டு செய்தால் போதும்' என்று சொல்வார்கள்.

அதிலிருந்து ஒவ்வொரு முறையும், தீய காரியம் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் 'இதை நமது தாய் அங்கீகரிப்பார்களா? இதை மனைவி

அங்கீகரிப்பாளா?' என்று எனக்கு நானே கேட்டுக் கொள்வேன்'' என்று கூறினார், எனது நண்பர் பரஞ்சோதி.

''திருடாதே, பொய் சொல்லாதே, பிறரை ஏமாற்றாதே, வஞ்சிக்காதே, பிற மாதரை இச்சிக்காதே'' என்றெல்லாம் சொல்வதும் கேட்பதும் ஏதோ பாட புத்தகத்தில் சொல்லப்படும் பாடங்கள் என்று பலர் எண்ணிக்கொள்கிறார்கள். இந்த உபதேசங்கள் நம் மிடையே ஜீவனில்லாமல், ஒரு மரத்துப்போன உணர்ச்சி நிலையில் பேசப்படுகின்றன; கூறப்படுகின்றன.

ஆனால் இவை ஜீவன் நிறைந்த—உயிர்த்துடிப்புள்ள ஆயுதங்கள். எந்த சமயம் இவற்றை மீறுகிறோமோ அப்போது இவை தங்களது பலனைத் தந்து விடுகின்றன.

இதை உணர்ந்தவன்தான் வாழ்வை முழுமையாக உணர்ந்தவன். சந்தர்ப்ப வாதம் பல சமயம் வெல்லும். ஆனால் எப்போதும் அது நம்மை மற்றோர் சரியான சமயத்தில் காட்டிக் கொடுத்துவிடும்; கவிழ்த்துவிடும்.

நேர்மையாக இருப்பவன் தன்னிடம் இல்லாததை இருப்பதாகக் கூறி தற்பெருமை வேண்டி பாசாங்கு செய்யமாட்டான். தைரியமுடன், தான் எது சரி என்று நம்புகிறானோ, அதற்காக உலகமே எதிர்த்து நின்றாலும் போராடுவான்.

நம்பிக்கைக்குரிய தன்மைகளைக் கொண்டவன் பிறரை மதிப்பான். எதிரியையும் மதிப்பான். மனித உறவுகளில் பண்பைக் கடைப்பிடிப்பான். அவனது செயல்கள் அவனது ஆத்மாவிலிருந்து எழுகின்றன.

தம்பீ! ஆன்மீக அடிப்படைகளை வளர்த்துக் கொள். நல்லெண்ணங்களை மட்டுமே மனதில் போடு. அப்படி தீய எண்ணங்கள் எழுமானால் அதன் விளைவுகளை எண்ணிப் பயப்படு. நேர்மையாளனாக நீ உருவாகும் போது உன்னைப்பற்றி நீயே பெருமைப்படுவாய். இந்த உலகமே பெருமைப்படும். உன்னுடைய புறச் சூழ்நிலைகளில் நீ விரும்பும் மாறுதல்கள் எல்லாம் உனது நன்மைக்காகவும் அப்போது நிகழ்வதை நீ காண்பாய்.

ஆசைகளின் தூண்டுதலைத் தவிர்த்து நெறிப்படி வாழ்வது எளிதல்லதான். அதுதான் வாழ்க்கைப் போராட்டம். ஜீவமுயற்சி. அதில் வெற்றிபெறும் ஆத்மாக்களே—மனிதர்களே—பரிணாம வளர்ச்சியில் பங்கு பெற்று உயர்கிறார்கள்.

வாழ்க்கை தேவனாகும் முயற்சி. அதனால்தான் சொன்னார் பாரதி "வானகமிங்கு தென்படவேண்டும்!" என்று. இந்த மண்ணில் வானுலகைத் தென்படச் செய்ய வேண்டும் என்று பாடுகிறார் பாரதி.

தம்பீ! அந்த தெய்வ மாக்கவிஞனுக்கு நீ எந்த விதத்திலும் தோற்றவனல்ல! உணர்க! எழு! உன்னை நம்பு!

பிறருடைய நம்பிக்கைக்கு உரியவனாக செயல்படு.

★

நம்பு தம்பி! நம்மால் முடியும்!

மக்கள் சக்தி இயக்கம்

உயர் லட்சியங்களுக்காக ஓர் இயக்கம். இளைஞர்களாலான இயக்கத்தை வைத்து சாதனைகளால் ஒரு பரிபூரண சமுதாயமாற்றத்தை ஏற்படுத்த மக்கள் சக்தி இயக்கம் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது. "நாடு நலம் பெற வேண்டும், வளம் பெற வேண்டும், தமிழர்களது அறிவுக்கும் திறமைக்கும் ஈடான ஓர் உன்னதமான தமிழ்ச் சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும். நல்லவர்களும், படித்தவர்களும், நாட்டின் பால் அக்கறை கொண்டு 'இது எனது நாடு' என்ற உணர்வுடன், பொது வாழ்வில் இறங்க வேண்டும். இதற்காகப் பல தியாகங்களையும், தேவையானால் சில காயங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராகும்போது தான் இந்த நாட்டில் மாற்றம், அடித்தளத்தில் வேர்விடும்!" இந்தக் கொள்கைகளை முன்வைத்து மக்கள் சக்தி இயக்கம் செயல்படுகிறது.

மக்கள் சக்தி இயக்கம் சுய வளர்ச்சி, சுய பொருளாதார மேம்பாடு, சமுதாய விழிப்புணர்ச்சி என்ற மூன்று குறிக்கோள்களைக் கொண்டது.

சுய வளர்ச்சி:

ஆன்மீக அடிப்படையில் உயர்வாழ்க்கை நெறிகளுடன் கூடிய தனிமனித வளர்ச்சியில்தான்-சமுதாய வளர்ச்சி இருக்கிறது. முடிவெடுக்கும் திறன், லட்சியத் தெளிவு, முன்னேறும் ஆர்வம், முன்னேற்றத்திற்கான திட்டங்கள், சளைக்காத மனம், செயல் என்று, சுய வளர்ச்சியின் பல்வேறு பாகுபாடுகளையும் இன்றைய

மனவியல் அறிவு நமக்குப் போதிக்கிறது. சுய வளர்ச்சி பெற்ற தனி நபர்களாலான சமுதாயம்தான் ஒரு முழு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக அமையும்.

சுய பொருளாதார மேம்பாடு :

தமிழ் நாட்டில் சொந்தக் காலிலே நின்று சுய தொழில் செய்ய வேண்டுமென்ற மனோபாவம் தமிழர்களிடையே குறைவு. கஷ்ட நஷ்டங்களை ஏற்று சுய தொழில் செய்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நிலை தமிழ்நாட்டில் என்றைக்கு ஏற்படுகிறதோ, அன்றுதான் தமிழ்நாட்டின் மொத்த வருமானமும், தமிழனின் சராசரி வருமானமும் அதிகமாகும்.

சமுதாய விழிப்புணர்ச்சி :

இந்தியாவில் படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளி அதிகமாகிக் கொண்டு வருகிறது. அந்த அடித்தளத்து மக்களை நம்முள் ஒருவராய் எண்ணி, அவர்களுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிடும்போதுதான் நம்மை நாம் ஒரு முழு மனிதனாகவும், நமது சமுதாயத்தை ஒரு வளர்ச்சி பெற்ற சமுதாயமாகவும் நாம் கருத முடியும்.

நம்மால் முடியும் தம்பி என்பது நமது தாரக மந்திரமாகும்.

தமிழர்களின் அடிப்படை மனோபாவங்கள் மாறாத வரை எந்தவித கல்வி அபிவிருத்தியிலோ, பொருளாதார வளர்ச்சியிலோ ஒரு நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டு வர இயலாது.

வழிபட்டுத் துதிபாடும் தமிழர்களது மனோபாவம், தெளுவெடுத்து வேலை செய்யும் மனோபாவம், புதியன காணத் தயங்கும். சம்பிரதாய மனோபாவம், பொது சுகாதாரத்தில் அக்கறையற்ற நிலை, சுய தொழில் செய்யப் பயப்பட்டு ஊழியம் செய்யப் புறப்படும் மனோபாவம்.

நமது வரியில்தான் இந்த அரசாங்கம் செயல் படுகிறது. அதை நிர்வகிப்பதில் நமக்கும் பங்குண்டு என்கிற பொறுப்பை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

ஜனநாயகம் சரியாகச் செயல்பட, அரசியல் கடிவாளங்களான நீதிமன்றம், அரசாங்கநிர்வாகம், சட்டசபை, பத்திரிகைகள் எல்லாம் தனித்து நின்று நாட்டின்பால் அக்கறை கொண்டு பாரபட்சம் பார்க்காமல், தவறு கண்டவிடத்துத் திருத்தும் துணிவு பெற்ற அரசியல் அங்குசங்களாகச் செயல்பட வேண்டும்.

நடைமுறை வாழ்வில்-எளிமையாகவும் இனிமை யாகவும் அனைவரோடும் பழகுங்கள். முக்கியத்துவம் பெறவேண்டும் என்ற வேட்கையை மனதில் வளர்த்துக் கொண்டு, சுய லாபம் கருதி பொது சேவை செய்ய வராதீர்கள். ஆடம்பரமான தோரணையும், ஜபர்தஸ்தான தோற்றங்களும் அசிங்கமான அரசியல் வாதிக்கு மட்டுமே உரியது என்று ஒதுக்கி விடுங்கள்— தற்பெருமை பேசுவதனால் நாம் பிறர் துயரங்களை போக்கிட முடியாது. குறுக்கு வழியில் பணம் சேர்த்த வர்களையும் நெறியற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டு அரசியலில் படாடோபமாய் வலம் வருகின்றவர் களையும் தூசுக்குச் சமமாய் நினையுங்கள்- புறக்கணியுங்கள்.

தனி மனிதன் வளர்ச்சி பெற்று வளமான வாழ்வு வாழத் துடிக்கும் மனித உணர்வு, சமுதாய ஈடுபாடு என்ற குணத்தால் இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே தொடுகிறது. அந்த ஆத்மீக அடிப்படையில்தான் மக்கள் சக்தி இயங்குகிறது! நம்மை எல்லாம் தொடுகிறது. மக்கள் அனைவரையும் இணைக்கிறது. வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!

நன்றி ;

குமுதம், ஜூன். 21, 1990

இயக்கப் பத்திரிக்கை

'நம்பு தம்பி நம்மால் முடியும்' மாதப் பத்திரிகைக்கான ஆண்டுச் சந்தா 15 ரூபாய். மக்கள் சக்தி இயக்கத்தில் என்ன நடக்கிறது. என்ன செய்யலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

முகவரி : தலைமையகம், **மக்கள் சக்தி இயக்கம்,** 7, ராமகிருஷ்ணா தெரு, தி. நகர் சென்னை—600 017.

Jeevan Press Madras-5.